REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 ஓகஸ்ட் 19 வெள்ளிக்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
1932 - 2022
வரு. 90 இல. 194 | Friday 19, August, 2022 | 20பக்கங்கள் | 40/-

## CPC, CPSTL க்கு எதிராக
# அமைச்சர் கஞ்சன CIDயில் முறைப்பாடு



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனைய நிறுவனம் ஆகியவற்றுக்கு எதிராக எரிசக்தி அமைச்சர்

06

# நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவது அத்தியாவசியம்



## The Economic சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில் ஜனாதிபதி ரணில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நட்டமீட்டும் அரசாங்க நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவது அத்தியாவசியமாகுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

த எக்கோனோமிக் சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்துக்கு மேலதிகமாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், ரெலிகொம் நிறுவனம் போன்றவற்றை தனியார்மயப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

06

# களனிவெளி ரயில் பாதையை விரிவாக்க அரசாங்கம் திட்டம்



## வீடுகளை இழப்போருக்கு வீட்டுத்திட்டத்தில் வீடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

களனிவெளி ரயில் பாதை விரிவாக்கத் திட்டம் காரணமாக வீடுகளை இழக்கும் மக்களுக்காக நிர்மாணிக்கப்படும் "மாலபள்ள" வீட்டுத் திட்டத்தை போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன பார்வையிட்டார்.

களனிவெளி ரயில் பாதையானது விரிவாக்கம் செய்யப்பட்டு நவீனமயப்படுத்தப்படவுள்ளது. அந்தத் திட்டத்தினால் வீடுகளை இழக்கும் மருதானையிலிருந்து பாதுக்கை வரையிலான ரயில் பாதை

06

## அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானங்கள் காரணமாக
# பொருளாதார நிலையில் சாதகமான பிரதிபலன்கள்

## கடன்பெற வேண்டிய நிலையிலிருந்து நாடு மீண்டு வருகிறது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் பொருளாதாரம் தற்போது சாதகமான நிலைக்குத் திரும்புவதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசேக்கர தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்காக கடன் பெற வேண்டிய நிலை காணப்பட்ட போதும் தற்போது அதிலிருந்து மீண்டு நாட்டின் பொருளாதாரம் சாதகமான பிரதிபலன்களை எட்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டுக்கான நிதிக் கொள்கை தீர்மானங்கள் தொடர்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், இந்த வருடத்தின் ஜூன் மற்றும் ஜுலை மாதங்களில் நாட்டுக்கான அத்தியாவசிய பொருட்களான எரிபொருள், உணவு, மருந்துப் பொருட்கள், எரிவாயு ஆகியவற்றை கொள்வனவு செய்வதற்காக குறுகிய

06

**ஊடகவியலாளர் மாநாட்டில் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசேக்கர நேற்று தெரிவிப்பு**





கிளிநொச்சி மாவட்ட கல்வி சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்வதற்காக கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்தார். கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்களால் கல்வி அமைச்சர் வரவேற்கப்பட்டபோது...



பிரபல தமிழக பேச்சாளர் "தமிழ்க்கடல்"
## நெல்லை கண்ணன் நேற்று காலமானார்

03



கேரளாவுக்கு விஜயம் செய்த சென்னையிலுள்ள இலங்கை துணைத் தூதுவர் கலாநிதி துரைசாமி வெங்கடேஷ்வரன் அங்கு மாதா அமிர்தாநந்தமயி அவர்களை சந்தித்தபோது இலங்கைக்கு வருகை தந்து நாட்டின் செழிப்புக்காக ஆசீர்வதிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

# வெளிநாட்டு நாணயங்களை விற்க மற்றும் வைப்பிலிட பொது மன்னிப்பு காலம்

## ஒரு மாதகால அவகாசத்தை வழங்கியது நிதியமைச்சு



பொதுமக்கள் தம்வசம் வைத்துள்ள, வெளிநாட்டு நாணயங்களை வைப்பிலிடுவதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு ஒரு மாத பொது மன்னிப்பு காலத்தை நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

வெளிநாட்டு நாணயங்களை வங்கித் தொழில் முறைமையினுள் கவர்ந்துகொள்ளும் பொருட்டு இந்தச் சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 15 ஆம் திகதி முதல் ஒரு மாதத்துக்கு இந்த நடைமுறை அமுலிலிருக்கும்.

இதன்படி, தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கில் அல்லது வர்த்தக வெளிநாட்டு நாணயக்

06

# சேதனப் பசளை கொள்வனவுக்கு அரசு 1,600 கோடி ரூபா ஒதுக்கு

## விவசாயிகளுக்கு 20,000 ரூபா நிவாரணத்திற்கும் ஏற்பாடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பெரும்போக பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு சேதனப் பசளையை கொள்வனவு செய்வதற்காக 20,000 ரூபா நிவாரணம் ஒன்றைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அதுதொடர்பில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிக்கையில், இவ்வாறு விவசாயிகளுக்கு 20,000 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளதுடன்

06

## தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு
# CWC தோட்டக் கம்பனிகளுக்கு தொடர்ந்து அழுத்தம்



### ஜீவன் தொண்டமான் MP டுவிட்டரில் பதிவு

தோட்டத் தொழிலாளர்களின் நாட்சம்பள உயர்வுக்கும், சம்பள முறைமைக்கும் அழுத்தம் கொடுத்து வருவதாக தெரிவித்துள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், இதற்கு தோட்ட கம்பனிகளின்

06

# நாட்டின் தேசிய பாதுகாப்பில் அதிகமான கவனம் தேவை

## பாதுகாப்பு செயலாளர் கமல் குணரட்ன தெரிவிப்பு



நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமாகும் என பாதுகாப்பு செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரட்ன தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு

06

## ரூபவாஹினிக்குள் பலவந்த பிரவேசம்
# மேர்வின் சில்வா கைதாகி பிணையின்றி விடுதலை

## நவ.16 நீதிமன்றில் ஆஜராக பணிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா நேற்று கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் பிணையின்றி

06

## பல்கலை அனுமதிக்கு இனி NIC அவசியம்!

03



அதிகார பகிர்வு செயற்பாடுகள் விரைவாகினால்
## டயஸ்போராவின் ஒத்துழைப்பை விரைவாக பெற்றுக்கொள்ளலாம்

03



## பசறை பாடசாலையில் 19 பேருக்கு குளவி கொட்டு

சிகிச்சைகளுக்காக ஆஸ்பத்திரியில் அனுமதி

03



## கோழி இறைச்சி, பால், முட்டைக்கு விரைவில் கட்டுப்பாட்டு விலைகள்

03

# சுயாதீன கூட்டமைப்பின் தலைவராக விமல்

## அறிவிப்பை வெளியிட்டார் வாசு



சுயாதீன கட்சிகளின் கூட்டமைப்பின் தலைவராக, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச நியமிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

புதிய தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச

## ஆர்ப்பாட்டப் பேரணியில் களேபரம்
# வசந்த முதலிகே உட்பட நால்வர் நேற்று கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்புச் செயலாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட நால்வர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

06

# முச்சக்கர வண்டிகளின் கட்டணங்கள் உயர்வு

## முதலாவது kmக்கு 120 ரூபா கட்டணம்



அகில இலங்கை முச்சக்கர வண்டி சாரதிகள் ஒன்றியம் (AITWDU) முச்சக்கர வண்டி கட்டணத்தை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அதிகரித்துள்ளது.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முச்சக்கர வண்டி சாரதிகள் ஒன்றியத்தின் தலைவர் லலித் தர்மசேகர, முச்சக்கர வண்டியில் முதல் மற்றும் இரண்டாவது கிலோ

06

## நீதிமன்ற உத்தரவையடுத்து தலைமறைவாகியுள்ள
# பிரித்தானிய பெண்ணை தேடுகிறது குடிவரவு அலுவலகம்



நீதிமன்றத்தினால் மனு தள்ளுபடி செய்யப்பட்டதையடுத்து, பிரித்தானிய பெண்ணான கெய்லி பிரேசரை கண்டுபிடிக்க முடியவில்லை என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் அவரைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணைகள் இடம்

06

## ரெட்டாவின் வங்கிக்கணக்கில் ரூ.50 இலட்சம்
# வைப்பிலிட்ட நபரை அடையாளம் கண்டது CID



காலிமுகத்திடல் போராட்டத்தின் ஆரம்பம் முதல் முன்னணி செயற்பாட்டாளராக செயற்பட்ட ரெட்டா என அழைக்கப்படும் ரதிந்து சேனாரத்னவின் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் 50 இலட்சம் ரூபாவை வைப்பிலிட்ட நபரை கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவினர் அடையாளம் கண்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் குறித்த

06

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# ஜும்ஆ தினத்தின் மகத்துவம்

முஸ்லிம்களுக்கு மிகவும் சிறப்புக்குரிய நாட்களில் ஒன்றாக வெள்ளிக்கிழமை விளங்குகிறது. இது ஜூம்ஆ நாளாகும். இருந்தும் இந்நாளின் சிறப்பையும் மகத்துவத்தையும் அறிந்து கொள்ளாதவர்களாக பெரும்பாலானவர்கள் இருந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் இந்நாளின் சிறப்பையும் மகத்துவத்தையும் அறிந்து செயற்படுவது நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகளை உயிர்ப்பிப்பதாக அமையும்.

அந்த வகையில் வெள்ளிக்கிழமைகளில் நேர காலத்துடன் ஜும்ஆ தொழுகைக்கு செல்வது சிறந்த அமலாகும். அதேநேரம் எவர் ஒருவரும் நிர்ப்பந்த காரணம் இன்றி ஜூம்ஆ தொழுகையை விடுவது குற்றமாகும். ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், **'மக்கள் ஜும்ஆக்களைக் கைவிடுவதிலிருந்து விலகியிருக்கட்டும் அல்லது அவர்களின் இதயங்கள்மீது அல்லாஹ் முத்திரை பதித்துவிடுவான். பிறகு அவர்கள் அலட்சியவாதிகளில் சேர்ந்து விடுவர்' என்றுள்ளார்கள்.**

**(ஆதாரம்: முஸ்லிம்)**

இந்நபிமொழியின் ஊடாக ஜும்ஆ தொழுகையின் அவசியமும் முக்கியத்துவமும் தெளிவாக எடுத்தியம்பப்பட்டுள்ளது. அதனால் அந்த பயங்கர நிலையைத் தவிர்த்துக் கொள்வதில் தான் ஒவ்வொருவரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

மேலும் ஜூம்ஆ தொழுகையை ஜமாத்தாகத் தொழும் போது இரண்டு ரக்அத்கள் தொழ வேண்டும். மிகவும் நிர்ப்பந்த சூழ்நிலை காரணமாக ஜூம்ஆ தொழுகையை ஜமாத்தாகத் தொழ முடியவில்லையாயின் ளுஹர் தொழுகையை நான்கு ரக்அத்துகளாகத் தொழ வேண்டும். அதே போன்றுதான் ளுஹருடைய முன் பின் சுன்னத்துகளையும் தொழ வேண்டும் என்று இஸ்லாமிய அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அதேநேரம் ஜூம்ஆ நாளில் மஸ்ஜித்துக்கு விரைவாக வந்து விட்டால் இமாம் சொற்பொழிவு அல்லது குத்பாவை ஆரம்பம் செய்வதற்கு முன்பு வரை இரண்டிரண்டாக நபில் தொழுகையில் ஈடுபடலாம். இமாம் உரையை ஆரம்பம் செய்துவிட்டால் பள்ளிவாசலுக்கு காணிக்கை (தஹிய்யத்துல் மஸ்ஜித்) தொழுகையை இரண்டு ரக்அத்கள் தொழுது கொள்ள வேண்டும். இத்தொழுகையை நபி (ஸல்) அவர்கள் ஊக்குவித்துள்ளார்கள்.

**ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் வெள்ளிக்கிழமை சொற்பொழிவு மேடை (மிம்பர்) மீது (நின்று) உரையாற்றிக் கொண்டிருக்கும்போது, ஒரு மனிதர் வந்து தொழாமல் அமர்ந்தார். அப்போது நபி (ஸல்) அவர்கள் அந்த மனிதரிடம், 'இரண்டு ரக்அத்கள் தொழுதுவிட்டீரா?' என்று வினவ, அவர் 'இல்லை' என்றார். 'அவ்வாறாயின் தொழுவீராக' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**

**(ஆதாரம்: முஸ்லிம்)**

ஜும்ஆ நாளின் சிறப்பு குறித்து இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள். **' ஜும்ஆ நாளில் குளித்துவிட்டு இயன்றவரை சுத்தமாகித் தமக்குரிய எண்ணெய்யைத் தேய்த்துக் கொண்டு தம் வீட்டிலுள்ள நறுமணத்தைப் பூசிக் கொண்டு பள்ளிக்கு வந்து (அங்கு நெருக்கமாக அமர்ந்திருக்கும்) இரண்டு நபர்களைப் பிரித்துவிடாமல், தமக்கு விதிக்கப்பட்டதைத் தொழுதுவிட்டு, இமாம் உரையாற்றத் தொடங்கியதும் வாய் மூடி மவுனமாக இருந்தால் அந்த ஜும்ஆவுக்கும் அடுத்த ஜும்ஆவுக்கும் இடையிலான பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன'.**

**(ஆதாரம்: புஹாரி)**

இது எவ்வளவு பெரிய பாக்கியம். அந்தப் பாக்கியத்தை அடைந்து கொள்வதை இலக்காகக் கொண்டு செயற்பட வேண்டும். அத்தோடு **ஜூம்ஆ தொழுகை முடிந்த பின்பு திக்ர் செய்ய வேண்டும். அதன் பின்பு நேரமிருப்பின் ஜூம்ஆ உடைய பின் சுன்னத் நான்கு ரக்அத்துகளை இரண்டிரண்டாகத் தொழ வேண்டும். (ஆதாரம்: முஸ்லிம்).**

இல்லையெனில் **குறைந்தது இரண்டு ரக்அத் பின் சுன்னத் தொழுது விட்டு வீட்டிற்கு சென்று மீதம் உள்ள இரண்டு ரக்அத்தைத் தொழுது கொள்ள வேண்டும்.** (ஆதாரம்: முஸ்லிம்). **அவசர தேவையாயின் ஜூம்ஆ தொழுகை தொழுத பின்பு வீட்டிற்கு சென்று ஜூம்ஆ உடைய பின் சுன்னத்தை இரண்டிரண்டாக தொழுது கொள்ளலாம்.** (ஆதாரம்: முஸ்லிம்) என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அதேவேளை ஆண்கள் பள்ளிவாசலுக்கு சென்று ஜும்ஆ தொழுகையை நிறைவேற்றுவது கடமையான போதிலும் பெண்களுக்கு அது கடமையில்லை. அதில் அவர்களுக்கு விதி விலக்கு உண்டு. இது குறித்து நபி (ஸல்) அவர்கள், **'அடிமை, பெண்கள், பருவ வயதை அடையாதவர்கள், நோயாளி ஆகிய நால்வரைத் தவிர அனைத்து முஸ்லிம்கள் மீதும் ஜுமுஆத் தொழுகை கடமையாகும்' என்றும்,** (ஆதாரம்: அபூதாவூத்) **பெண்களுக்கு ஜூம்ஆ தொழுகை கடமை இல்லை.**

**ஆனால் தொழ விரும்பினால் அவர்கள் பள்ளிக்கு சென்று ஆண்களுக்கு பின்னால் நின்று ஜூம்ஆ தொழலாம்** (ஆதாரம்: முஸ்லிம்) என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

பெண்கள் வீட்டில் ஜூம்ஆவிற்கு பதில் வுஹர் தொழுவதாக இருந்தால் நான்கு ரக்ஆத்கள் தொழ வேண்டும். அதே போன்று ளுஹருடைய முன் மற்றும் பின் சுன்னத்கள் சுன்னத்களையும் தொழலாம். ஜூம்ஆக்கான அதான் கூறப்பட்டு விட்டால் பெண்கள் வீட்டில் ளுஹர் தொழ ஆரம்பிக்கலாம். ஆண்கள் ஜும்ஆ தொழுது முடிக்கும் வரை காத்திருக்க வேண்டியதில்லை என்பது இஸ்லாமிய அறிஞர்களின் கருத்தாகும்.

அப்துல்லாஹ் ...

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# இஸ்லாம் போதிக்கும் மனிதாபிமானம்

மனிதாபிமானம், ((Humanity) ஒவ்வொரு மனிதனிடமும் இருக்கவேண்டிய அடிப்படைப் பண்பாகும். அது இஸ்லாம் வலியுறுத்துகின்ற மார்க்கப் பெறுமானங்களில் ஒன்று.

இஸ்லாம் தனிப்பண்புகளைக் கொண்ட ஓர் உன்னத மார்க்கமாகும். அந்தவகையில் 'இன்ஸானிய்யா' என்பதற்கு மனிதன் சார்ந்தது எனப் பொருள்படுகின்றது. அல்லாஹுதஆலா வகுத்திருக்கின்ற இறைசட்டங்களை நோக்கும்போது, அவை மனித நலன்களையும், இயல்பு சுபாவங்களையும், பலவீனங்களை கருத்திற் கொண்டிருப்பதைக் காணலாம்.

மனிதனில் இஸ்லாம் மனிதத்தையே காண்கிறது. மொழி, நிறம், இனம், நாடு என்பவற்றை வைத்து மனிதனை அது கூறுபோட முனைவதில்லை. சிந்தனையில், கொள்கையில் வேறுபட்டவனையும் அது மனிதனாகவே பார்க்கிறது. அல்லாஹுதஆலா அல் குர்ஆனில் பின்வருமாறு குறிப்பிடுகிறான்.

**'மனிதர்களே! உங்களை நாம் ஒரே ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம்.**

**ஒருவரையொருவர் புரிந்துகொள்வதற்காக உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம்.'**

**(ஆதாரம்: ஹுஜுராத்: 13)**

மேலும் 'மக்களிடம் பேசும் போது நல்லதைப் பேசுங்கள்' (ஆதாரம்: பகரா: 83) என அல்குர்ஆன் உபதேசிக்கின்றது. எனவே மக்களிடம் அன்பாகவும் முக மலர்ச்சியோடும் அழகிய வார்த்தைகளைக் கொண்டும் உரையாடுவது மனித நேயத்தின் பண்பாகும்.

இப்பின்புலத்திலிருந்தே மனிதனை ஒரு முஸ்லிம் நோக்குகிறான். மனிதனில் அவன் மனிதத்தையே காண்பான். இனம், மதம், மொழி, தேசம், நிறம், அந்தஸ்து பாகுபாடு அவனிடம் காணப்பட மாட்டாது.

அடுத்த மனிதர்களுடனான உறவில் மனிதத்தையும், மானுடத்தன்மையையும், மனிதாபிமானத்தையும் மார்க்கம் வலியுறுத்துகிறது. மனிதாபிமானம், உறவுகளுக்கு அடிப்படையாக அமையும் பிரதான பண்புகளில் ஒன்றாகும்.

முஸ்லிம்களோடு மாத்திரமல்லாமல் பிறமதத்தவர்களுடனும் மனிதத்தன்மையோடும், சகோதர வாஞ்சையோடும் நடந்துகொள்ள வேண்டும் என மார்க்கம் உபதேசிக்கிறது.

இஸ்லாமிய வரலாறு நெடுகிலும் மனித நேயத்திற்கான ஏராளமான உதாரணங்களை நாம் கண்டுகொள்ளலாம். நபி (ஸல்) அவர்கள் முழு உலகுக்கும் அருட்கொடையாக அனுப்பப்பட்ட மனித நேயத்தூதராவார்.

ஒரு தடவை **இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு முன்பாகக் கொண்டுசெல்லப்பட்ட ஒரு யூதரின் பிரேதத்திற்காக அன்னார் எழுந்து நின்றார்கள். 'ஏன் எழுந்தீர்கள், அது யூதரின் பிரேதமல்லவா?' என கேட்கப்பட்டபோது 'அதுவும் ஓர் ஆன்மாவே' என பதிலளித்தார்கள்.**

**(ஆதாரம்: ஸஹீஹுல் புஹாரி)**

மனிதர்களோடு மாத்திரமின்றி உயிரினங்களிடத்திலும் அன்பாகவும் ஜீவகாருண்யத்தோடும் நடந்துகொள்ளுமாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எமக்கு வழிகாட்டியுள்ளார்கள். அது ஈமானுக்கு மிக நெருக்கமான பண்பாகும். சுவனம் செல்வதற்கும் அது காரணமாக அமைந்ததை வரலாறு பதிவு செய்திருக்கிறது.

அவை தொடர்பில் மக்களுக்கு எடுத்துரைப்பதற்கு, ஐக்கிய நாடுகள் சபை மனிதநேயப் பண்புகளில் ஈடுபடுகின்றவர்களை ஊக்கப்படுத்துவதையும் மானுடப்பண்பை வலியுறுத்துவதையும் அவை தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்காகக் கொண்டு பிரகடனப்படுத்தி இருக்கும் சர்வதேச மனிதாபிமானத் தினமும் நல்ல சந்தர்ப்பமாகும்.

இத்தினம் வருடாவருடம் ஆகஸ்ட் 19 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. அதனால் இஸ்லாம் போதிக்கும் மனித நேயத்தையும் அதன் வலியுறுத்தல்களையும் மக்கள் மயப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். அவை மக்களுக்கு நன்மைகள் பயக்கும் காரியமாக அமையும்.

ஆகவே மனிதநேயத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள சர்வதேச தூதுத்துவத்தை சுமந்துள்ள நாமும் மனிதாபிமானத்தோடும் மானுடத்தன்மையோடும் எமது செயல்பாடுகளை ஒழுங்கமைத்து கொள்வதோடு நாட்டில் முன்மாதிரிமிக்க பிரஜைகளாக வாழ எல்லாம் வல்ல எமக்கும் அல்லாஹ் அருள்புரியட்டும்.

ஊடகப் பிரிவு...
அகில இலங்கை ஜம்இயத்துல் உலமா

# படிப்பினைகள் நிறைந்த ஹிஜ்ரத்

ஹிஜ்ரா' அல்லது 'ஹிஜ்ரத்' என்பது இறைவனின் மார்க்கத்தைப் பூரணமாகப் பின்பற்ற முடியாதபடி நெருக்கடி தரும் ஓர் இடத்தை விட்டு வெளியேறி வேறொரு இடத்திற்குச் செல்வதாகும்.

அதாவது நபித்துவம் கிடைக்கப்பெற்று ஏறத்தாழ ஐந்தாண்டுகள் கடந்த நிலையில் குரைஷியர் முஸ்லிம்களுக்கு அளித்த தொல்லைகள் எல்லை மீறி போவதை நபி (ஸல்) அவர்கள் உணர்ந்தார்கள். தம் தோழர்கள் எந்த நிலையிலும் இஸ்லாத்தைக் கைவிட மாட்டார்கள். ஆனாலும் அவர்கள் அனுபவிக்கும் இன்னல்கள் குறித்து நபிகளார் பெரிதும் கவலை கொண்டார்கள். அதனால் இறைவிசுவாசிகளில் ஒரு தொகுதியினரை மக்காவை விட்டு அபிசீனியாவுக்கு அனுப்பி வைக்க அன்னார் முடிவு செய்தார்கள். இதற்கேற்ப பன்னிரண்டு ஆண்களும், நான்கு பெண்களும் அபிசீனியா சென்றனர். இதுவே இஸ்லாத்தின் முதல் 'ஹிஜ்ரத்' ஆகும்.

'ஹிஜ்ரத்' என்ற அரபுச் சொல்லுக்கு இடம் மாறுதல், புலம் பெயர்தல், விட்டு விடுதல், வெறுத்து விடுதல் என்பன அர்த்தமாகும். அந்த வகையில் இறைத்தூது கிடைக்கப்பெற்றது முதல் மக்காவில் வாழ்ந்த பதிமூன்று ஆண்டு காலமும் நபி (ஸல்) அவர்களும் இறைவிசுவாசிகளும் பலவிதமான இன்னல்களுக்கு முகம் கொடுத்தார்கள். நபி (ஸல்) அவர்கள் நெருக்கடிகளுக்கும் இன்னல்களுக்கும் மத்தியில் இறைத்தூதை மக்கள் மத்தியில் கொண்டு சென்றார்கள். இந்நிலையில் குரைஷியர் நபி (ஸல்) அவர்களைப் படுகொலை செய்யவும் திட்டம் தீட்டினர். அதனால் இறைவனின் கட்டளைக்கு ஏற்ப நபி(ஸல்) அவர்கள் தம் தோழர் அபூபக்கர் (ரலி) அவர்களுடன் மக்காவை விட்டு மதீனாவை நோக்கி யாரும் அறிந்து கொள்ளாத வகையில் இரவோடு இரவாகப் புறப்பட்டார்கள். அதுவே இஸ்லாத்தின் இரண்டாவது 'ஹிஜ்ரத் ஆகும். இப்புலம்பெயர்வு முஹர்ரம் மாதம் தான் இடம்பெற்றது.

இப்புலப்பெயர்வின் போது கரடு முரடான கற்கள் நிறைந்த பாதையின் ஊடாக பயணத்தை மேற்கொண்ட நபி (ஸல்) அவர்களும் அன்னாரது தோழரும் மக்காவிலிருந்து மூன்று மைல்கள் தொலைவிலுள்ள 'தவ்ர்' குகையில் தங்கினர். இதேவேளை முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தம் தோழருடன் தப்பி விட்டார் என்பதை அறிந்த குரைஷியர், சல்லடை போட்டு அவர்களைத் தேடலாயினர். ஒரு கட்டத்தில் இருவரும் பதுங்கி இருந்த அக்குகையின் வாசல் வரையும் வந்து விட்டனர்.

இச்சமயம் மக்காவின் மந்திரக்காரர் அபூகர்ஸ் 'இருவரும் இவ்விடத்தை விட்டு ஓரடியும் நகரவில்லை. அவர்கள் இக்குகைக்குள்தான் பதுங்கி இருக்க வேண்டும்' என்று உரத்தக் குரலில் கூறினார். இதைக் கேட்டதும், அபூபக்கர் (ரலி) அவர்களின் உடல் தளர்ந்தது. உள்ளம் சோர்ந்தது. நபிகளார் எதிரிகள் கையில் சிக்கினால் நிலைமை என்னவாகும்? என்பதை அவரால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. கண்களில் கண்ணீர் கரைபுரண்டது.

இதைக் கண்ணுற்ற நபி(ஸல்) அவர்கள் 'ஏன் கலங்குகிறீர்கள், அபூபக்கரே!' என்று கேட்க. 'இறைத்தூதரே! அங்கே பாருங்கள். அவர்கள் பலர் இருக்கிறார்கள். இங்கே நாம் இருவர் மட்டுமே' என்றார். அப்போது நபிகளார், 'அஞ்சாதீர். நாம் இருவர் மட்டுமல்ல. அல்லாஹ்வும் நிச்சயமாக நம்மோடு இருக்கின்றான்' என்று அபூபக்கர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். அச்சமயம் குரைஷியரில் ஒருவர், 'வாருங்கள், நாம் குகையின் உள்ளே சென்று பார்ப்போம்' என்றான். அதற்கு மற்றொருவர், 'குகை வாசலில் பின்னப்பட்டிருக்கும் சிலந்தி வலையைப் பாருங்கள். இது முஹம்மது பிறப்பதற்கு முன்பே பின்னப்பட்டது போலத் தெரியவில்லையா? நாம் ஏன் உள்ளே சென்று நம்மை நாமே முட்டாளாக்கிக் கொள்ள வேண்டும்' என்றார். அதனால் அவர்கள் அவ்விடத்தை விட்டு அகன்று சென்று தேடலாயினர்.

நபி (ஸல்) அவர்களும் அபூபக்கர் (ரலி) அவர்களும் மூன்று இரவுகள் அங்கு தங்கினர். அபூபக்கர் (ரலி) அவர்களுடைய மகன் அப்துல்லாஹ்வும் அங்கு சென்று இரவு தங்கக்கூடியவராக இருந்தார். ஆனால் இரவின் இறுதிப் பகுதியில் அவர் வெளியேறி விடிவதற்குள் மக்காவுக்கு வந்து விடக்கூடியவராக இருந்தார். அபூபக்கர் (ரலி) அவர்களின் மகனார் இவர்களைப் பற்றிய ஏதேனும் செய்திகளை மக்காவில் கேட்டால், அதை நினைவில் வைத்துக் கொண்டு இருள் சூழ்ந்தவுடன் இருவரிடமும் வந்து அச்செய்தியை எடுத்துரைக்கக் கூடியவராக இருந்தார். இதேவேளை அபூபக்கர் (ரலி) அவர்களின் பணியாளர் ஆமிர் இப்னு புகைரா அப்பகுதியில் ஆடுகளை மேய்த்து விட்டு பொழுது சாய்ந்தவுடன் இருவருக்கும் ஆட்டுப் பாலை கறந்து கொடுக்கக்கூடியவராக இருந்தார். மூன்று இரவுகள் அவர் அவ்வாறு செய்தார்.

நான்காம் நாள் நபிகளாரும் அவரது தோழரும் 'தவ்ர்' குகையில் இருந்து வெளியேறினர். பயணத்திற்காக இரண்டு ஒட்டகங்களை அபூபக்கர் (ரலி) அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். தடை பலவற்றைக் கடந்து 8வது நாள் 'குபா' என்ற இடத்தை அவர்கள் அடைந்தனர். இந்த ஊர் மதீனாவில் இருந்து மூன்று மைல் தொலைவில் உள்ளது. இங்கு அன்சாரிகளான மதீனாவாசிகள் பலரின் குடும்பங்கள் வசித்து வந்தன. அவர்களிடையே அம்ர் பின் அவ்ப் (ரலி) அவர்களின் குடும்பம் மிகவும் சிறப்புற்றதாக விளங்கியது. குல்தும் பின் ஹதம் என்பவர் அதன் தலைவராக இருந்தார். அவர்கள் வீட்டில் நான்கு நாட்கள் தங்கி இருந்தார்கள். இதற்கிடையே அலி (ரலி) அவர்களும் மக்காவைத் துறந்து குபா வந்து நபிகளாருடன் இணைந்து கொண்டார்கள்.

குபாவில் தங்கி இருந்தபோது நபிகளார் செய்த முதல் பணி அங்கு ஓர் இறை இல்லத்தை நிர்மாணித்து அதில் தொழ வைத்தார்கள். குபாவில் கட்டப்பட்ட அந்த இறை இல்லமே, நபித்துவத்திற்குப் பிறகு கட்டப்பட்ட முதல் மஸ்ஜித் ஆகும். மறுநாள் வெள்ளிக்கிழமை, அங்கிருந்து பயணத்தை ஆரம்பித்த போதிலும் இடைவழியில் 'ளுஹர்' (பகல் நேரத் தொழுகை) தொழுகைக்கான நேரம் வந்து விட்டது. அதனால் 'பத்னுல் வாதி' என்ற இடத்தில் அனைவரையும் ஒன்று சேர்த்து 'ஜும்ஆ' தொழுகையை நிறைவேற்றி மக்களிடையே நபி(ஸல்) அவர்கள் பேருரை நிகழ்த்தினார்கள். அதுவே முஸ்லிம்களின் முதல் ஜும்ஆ தொழுகை ஆகும். இத்தொழுகையில் 100 பேர் கலந்து கொண்டனர்.

இந்த ஹிஜ்ரத் உலகம் இருக்கும் வரையும் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் பலபடிப்பினைகளை வழங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் யார் அல்லாஹ்வை ஏற்றுக் கொள்கிறாரோ, அவர் பல மனித சோதனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும். அல்லாஹ்விற்காக சொந்தம், பந்தம், சொத்து சுகங்களை, ஏன் இறுதியில் ஊரை விட்டும் வெளியேறுவதற்கு தயாராகவே இருக்க வேண்டும், உயிரையும் அல்லாஹ்விற்காக அர்ப்பணிக்க வேண்டும் என்பதை நபிகளாரின் அழகிய திட்டமிடல் எமக்கு கற்றுத் தருகின்றன. அத்தோடு வாழ்க்கையில் திட்டமிடல், மசூறா,இஸ்திகாறா ஆகியவற்றின் மூலம் முடிவு எடுத்தால் அதில் நன்மைகள் உண்டு, சிரமத்திற்கு பின்னால் வெற்றி நிச்சயம் என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

எனவே ஹிஜ்ரத் பயணத்தை நினைவு கூறுவதுடன் அதன்மூலம் படிப்பினைகள் பெற்று வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்ள அல்லாஹ் எம் அனைவருக்கும் தௌபீக் செய்யட்டும்.

அஷ்ஷெய்க்
ஏ.எச்.எம்.மின்ஹாஜ்...
முப்தி (காஷிபி)

# அழுகை வருவதற்கு முன்பாக...

சிரிப்பு என்பது இறைவன் மனிதனுக்கு மாத்திரம் அளித்திருக்கும் மாபெரும் அருள். மற்றைய எந்த உயிரினத்துக்கும் கிடைக்கப்பெறாததும் எந்த உயிரினத்தாலும் செய்ய முடியாததுமான செயல்திறன் இது. சிரிப்பதற்கு சில மன உறவுகளும் நரம்புகளது இயக்கங்களும் சேர்ந்து இயங்கவேண்டும். அச்செயற்பாட்டை பகுத்தறிவுள்ள மனிதர்களால் மாத்திரமே செயற்படுத்த முடியும். பகுத்தறிவற்ற உயிர்கள் எதற்கும் சந்தோஷத்தின் அறிகுறியாக மன உணர்வுகளை வெளிப்படுத்திக்கொள்ள முடியாது. அத்தோடு நரம்பு தொகுதியும் சிரிப்பு உண்டாவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளத் தகுதியற்றவை. அதனால் அத்தகைய உயிரினங்களால் சிரிக்க முடியாது. ஆக சிரிப்பு என்பது மனித வர்க்கத்திற்கு மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ள மகத்தான மன உணர்வு எனலாம். இச்சிரிப்பை கேலிச்சிரிப்பு, ஆனந்தச் சிரிப்பு, நமுட்டு சிரிப்பு, கெக்கலி சிரிப்பு என்றபடி வெவ்வேறு விதங்களில் மேற்கொள்ளலாம்.

ஆனால் இஸ்லாம் சிரிக்கவேண்டிய முறைமை தொடர்பிலும் அறிவுரை வழங்கியுள்ளது. **நபி (ஸல்) அவர்கள் அநாவசியமாகவும் எல்லை மீறியபடியும் ஒருபோதும் சிரித்ததில்லை. அன்னார் புன்முறுவல் செய்யக்கூடியவராக இருந்துள்ளார்கள்.**

அல் குர்ஆன் இச்சிரிப்பு பற்றி சில செய்திகளை சிந்திக்குமளவுக்கு வழங்கியுள்ளது. **'இம்மையில் அவர்கள் வெகு குறைவாகவே சிரிக்கவும்' (ஏனெனில்) அவர்கள் செய்து கொண்டிருந்த தீவினைக்கு பிரதிபலனாக (மறுமை) அதிகமாகவே அழவேண்டிய (ஆகிவிடும்)**

**(9:82)**

**'வரவேண்டிய (யுகமுடிவு காலமான)து நெருங்கி விட்டது. அல்லாஹ்வை தவிர மற்றெவராலும் அதைத் தடுக்கமுடியாது. இச்செய்தியைப் பற்றி நீங்கள் ஆச்சரியப்படுகின்றீர்களா? (வரப்போகும் யுகமுடிவைப் பற்றி கவலைப்படாமல்) நீங்கள் சிரிக்கின்றீர்களே அழ வேண்டாமா (நீங்கள்)? ஆகவே நீங்கள் அல்லாஹ்விற்கு சிரம்பணிந்து வணங்குவீர்களாக! (53:60)**

இப்படி விவரிக்கும் இவ்வசனங்கள் நம்மை சிந்திக்க மாத்திரமல்ல நடுக்கமுறவும் செய்கின்றன. நீங்கள் சிரிக்கின்றீர்கள். அழவேண்டாமா நீங்கள்? என்று அல்லாஹ்வே நம்மைப்பார்த்து கேட்கும் கேள்வி நம்மை நடுக்கமுறச் செய்வதோடு கண்களில் கண்ணீர் துளிர்க்கவும் வைக்கிறது.

அல்லாஹ்வின் அளப்பரிய அருள்களை மறந்து நம் ஆசைப்படியெல்லாம் நடந்து மனம்போன போக்கில் மகிழ்ந்து சிரித்து விளையாடிக்கொண்டு இருந்தால் நாம் அல்லாஹ்வின் கோபத்திற்குள்ளாகி அழவேண்டிய நிலைமை ஏற்பட்டு விடாதா? அதனால் அழவேண்டிய நேரம் வருவதற்கு முன்னால் ஏற்றத்தை செய்வோம்.

தொகுப்பு:
உம்மு பாத்திமா அஸ்ஹா...

# கோழி இறைச்சி, பால், முட்டைக்கு விரைவில் கட்டுப்பாட்டு விலைகள்

## வெளிநாடுகளிலிருந்து விலங்குத் தீவனம் இறக்குமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கோழி இறைச்சி மற்றும் முட்டை, பால் ஆகியவற்றின் விலைகள் அதிகரித்துச் செல்வதால் விலங்கு தீவனத்தை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

விலங்கு உணவுக்காக இறக்குமதி செய்யப்படும் சோளம் மற்றும் சோயா போன்ற தானியங்களை திறந்த வைப்பு முறைமை மூலம் இறக்குமதிசெய்வதற்கான அனுமதியைக் கோரி விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அமைச்சரவைக்கு பத்திரமொன்றை சமர்ப்பித்துள்ளார்.

தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக விலங்கு தீவன உற்பத்திக்கான சோளம் மற்றும் சோயாவுக்கான தட்டுப்பாடு நிலவுவதாகவும் அதனை உள்ளூரில் கொள்வனவு செய்வதற்கு முடியாமல் உள்தென்றும் அதனையடுத்தே வெளிநாடுகளிலிருந்து அவற்றை இறக்குமதிசெய்வதற்கு விவசாய அமைச்சு

06

# சிலாபத்திலிருந்து கூலர் லொறியில் 1,429 லீற்றர் பெற்றோல் கடத்தல்

## கடற்படையினரால் இருவர் கைது



சிலாபத்திலிருந்து கற்பிட்டிக்கு அனுமதிப்பத்திரமில்லாமல் சட்டவிரோதமாக பெற்றோலை கூலர் லொறியொன்றில் கொண்டு செல்ல முற்பட்ட இருவர் உடப்பு கடற்படையினரால் (17) இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாபத்திலிருந்து மதுரங்குளி, தலுவ உள்வீதியினூடாக கற்பிட்டிக்கு பெற்றோல் அனுமதிப்பத்திரமின்றி கொண்டு செல்லப்படுவதாக கடற்படைப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய தலுவ கடற்படை முகாமுக்கு முன்னாலுள்ள சோதனைச் சாவடியில் வைத்து லொறியை நிறுத்தி சோதனைக்குற்படுத்தியுள்ளனர்.

இதன்போது 1,429 லீற்றர் பெற்றோல் கைப்பற்றபட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் சிலாபம் பகுதியைச் சேர்ந்தவர்களென கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபருடன் பெற்றோல் மற்றும் கடத்துவதற்கு பயன்படுத்திய லொறி ஆகியவை மேலதிக நடவடிக்கைகளுக்காக நுரைச்சோலைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட நுரைச்சோலைப் பொலிஸார் புத்தளம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

# இலங்கைக்கு தொடர்ந்தும் பாகிஸ்தான் ஆதரவளிக்கும்

## பிரதமர் தினேஷிடம் பாக்.தூதுவர் உறுதி



இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நீண்ட மற்றும் வலுவான நட்புறவு இருப்பதால், இலங்கைக்கு பாகிஸ்தான் தனது முழுமையான ஒத்துழைப்பை தொடர்ந்து வழங்குமென பாக். உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புர்க் உறுதிப்படுத்தினார்.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புர்க்கிக்கும் இடையிலான சந்திப்பு (17) பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

இலங்கையின் இறையாண்மையைப் பாதுகாப்பதற்காக சர்வதேச அரங்கில் பாகிஸ்தான் வழங்கிவரும் தொடர்ச்சியான ஆதரவுக்கான பிரதமர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

வர்த்தகம், முதலீடு, கல்வி, தொழில்நுட்பம், சுற்றுலா, விவசாயம் மற்றும் பால் உற்பத்தி ஆகிய துறைகளில் உறவுகளை வளர்ப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து நீண்ட கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றது.

இலங்கை பௌத்தர்கள் தக்ஷிலா உள்ளிட்ட புராதன பௌத்த யாத்திரை மையங்களை பார்வையிடுவதற்கு தேவையான வசதிகளை செய்து தருமாறு பிரதமர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# பசறை பாடசாலையில் 19 பேருக்கு குளவி கொட்டு

## சிகிச்சைகளுக்காக ஆஸ்பத்திரியில் அனுமதி

**லுணுகலை நிருபர்**



பாடசாலை மாணவர்கள் 16 பேர் உள்ளடங்களாக 19 பேர் குளவிகொட்டுக்கு இலக்காகி பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் நேற்று (18) முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பாடசாலை வளாகத்திலிருந்த குளவிக் கூடொன்று கலைந்து மாணவர்களை சராமரியாக தாக்கியுள்ளது. இதனால் மாணவர்கள் 16 பேர் உட்பட 19 பேர் குளவிக்காட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

# உதவும் கரங்கள் அமைப்பின் இலவச மருத்துவ முகாம்

ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்புவோம் எனும் தொனிப்பொருளில் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பு மாபெரும் இலவச மருத்துவ முகாம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளது. நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை (21) ஹப்புகஸ்தென்ன, வேவல்கெட்டிய கிராமிய வைத்தியசாலையில் நடைபெறவுள்ள இந்த மருத்துவ முகாமில் பங்குபற்றி பயன்பெறுமாறு பிரதேச மக்களை கேட்டுக்கொண்டுள்ள அவ் அமைப்பு, மேலதிக தகவல்களுக்கு 0766194347, 0777352739 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளது.

மலையக தமிழரின் சமூக, பொருளாதார , கல்வி , அபிவிருத்தியை நோக்காக கொண்ட நலன்புரி அமைப்பான இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பு குறுகிய காலத்திற்குள் மலையக மக்களுக்கு பாரிய வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# லாப் Gas சிலிண்டர்களின் விலைகள் நேற்று முதல் குறைப்பு

## 12.5 kg சிலிண்டர் 1050 ரூபாவால் குறைவடைந்தது

**லோரன்ஸ் செல்வநாயகம்**




லாப் எரிவாயுவின் விலைகள் நேற்று முதல் குறைக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் தலைவர் டபிள்யூ.கே.எச். வேகபிட்டிய தெரிவித்துள்ளார்.

12.5 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 1,050 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாகவும்அத்துடன்05கிலோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையும் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி நேற்று முதல் 12.5 லாப் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 5,800 ரூபாவாகவும் 05 கிலோ எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 2,320 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பல்கலை அனுமதிக்கு இனி NIC அவசியம்!

பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது மாணவர்கள் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமானது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேசிய அடையாள அட்டை இல்லாதபட்சத்தில் வேறு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணத்தை முன்வைக்கும் விண்ணப்பதாரர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது.எனினும், குறித்த ஆவணத்தின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியாது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற உயர்தர பரீட்சையின் முடிவுகள் இம்மாத இறுதியில் வெளியிடப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது


# நில அளவை சபை

## (2002 ஆம் ஆண்டு 17ம் இலக்க அளவையியல் சட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டது)

## “மத்திய மட்ட முகாமைத்துவச் சேவை” வகைசார் செயலாளர் பதவிக்காக

## விண்ணப்பங்கள் கோரல்

01. நில அளவைச் சபையின் செயலாளர் பதவிக்காக ஆண்/ பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டியதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக அல்லது நிறுவனம் ஒன்றின் பட்டம் ஒன்றினைப் பெற்ற பின் அரச கூட்டுத்தாபன, சபை அல்லது நியதிச் சட்ட நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்ட பதவியொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத சேவை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பதாரியின் வயது 2022.09.09 ம் திகதியன்று 22 இற்கு குறையாது 45 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அவர்கள் செயலாளர் பதவிக்கு பணிக்கப்படுகின்ற கடமைகளையும் பொறுப்புக்களையும் சிறப்பாக நிறைவேற்றத் தேவையான உடல், உளத் தகைமை பெற்றிருப்பதோடு சிறந்த குணநலத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
03. மேற்படி பதவிக்கான கடமைப் பொறுப்புக்களை www.landsurveycouncil.org என்ற இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.
04. ஒருவர் மாத்திரமே பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். நேர்முகப் பரீட்சை மூலம் தகுதியானவர் தேர்ந்தெடுக்கப்படுவர். எவ்வாறாவது பலவந்தப்படுத்த முயற்சித்தால் அவருக்கு துரதிஷ்டவசமான நிலை ஏற்பட இடமுண்டு.
05. சம்பள அளவுத்திட்டம் : MM-1-1 : Rs. 53,175 - 10 x 1,375 – 15 x 1,910 - 95,575
06. இந்நியமனம் நிரந்தரமானது. அத்துடன் மூன்று (03) வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. ஊழியர் சேமலாப நிதியும், ஊழியர் நம்பிக்கை நிதியும் உரித்துடையது.
07. விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, கல்வி மற்றும் தொழிற் தகைமை, சேவை அனுபவம், கணனி பயன்பாடு தொடர்பான அறிவு பற்றி குறிப்பிடப்பட்ட விண்ணப்பமொன்றை தாமாக தயாரித்து 2022.09.09 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் “தலைவர், நில அளவைச் சபை, இல. 150, பர்னாட் சொய்சா மாவத்தை, கொழும்பு 05.” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கல்வி மற்றும் தொழிற் தகைமை சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் நிழற் பிரதி (Photo Copy) விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**2022.08.15.**

**ஏ. திஸாநாயக்க,**
**தலைவர்,**
**நில அளவைச் சபை**


அதிகார பகிர்வு செயற்பாடுகள் விரைவாகினால்

# டயஸ்போராவின் ஒத்துழைப்பை விரைவாக பெற்றுக்கொள்ளலாம்

## தமிழ் கூட்டமைப்பு எம்.பி சாணக்கியன் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்காக அரசாங்கத்துக்கு உதவி வழங்க புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் தயாராகவுள்ளதாகவும் நாட்டில் அதிகார பகிர்வு செயற்பாடு விரைவில் இடம்பெறுமானால் அந்த உதவிகளை இலகுவாக பெற்றுக் கொள்ள முடியமென்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வேலைத்திட்டமொன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைப்பாரானால் தமிழ் தேசிய கூட்டமைப்பு சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு தினங்களுக்கு முன் புலம்பெயர் அமைப்புக்கள் சிலவற்றின் மீதான தடைகள் நீக்கப்பட்டது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறுதெரிவித்துள்ளார்.

அண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து பேச்சுவார்த்தையை நடத்தியது என்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் அதன்போது ஜனாதிபதிக்கு முன்வைக்கப்பட்டதெனவும் தெரிவித்துள்ள அவர், அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தேசிய வேலைத்திட்டத்தை முன்வைத்தால் சர்வகட்சி அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு அவரிடம் தெரிவித்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதே நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு எமக்குள்ள ஒரே தீர்வாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# "தமிழ்க்கடல்" நெல்லை கண்ணன் நேற்று காலமானார்



தமிழ் பட்டிமன்ற பேச்சாளராகவும் பல பட்டிமன்றங்களுக்கு நடுவராகவும் தலைமை தாங்கிய தமிழ் நாட்டின் தமிழறிஞர் நெல்லை கண்ணன் உடல் நலக்குறைவால் நேற்று காலமானார்.

காங்கிரஸ் கட்சியில் காமராஜருடன் இணைந்து பயணித்த இவரை மக்கள் ‘தமிழ்க் கடல்’ என அழைத்தனர்.

நெல்லை கண்ணன் 1945 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் திகதி பிறந்தார். திருநெல்வேலியில் பிறந்த நெல்லைக் கண்ணனின் தந்தை ந.சு.சுப்பையா பிள்ளை, தாயார் முத்து இலக்குமி. இவருக்கு உடன்பிறந்தோர் எட்டு பேர். நெல்லை கண்ணனின் முதல் மகன் சுகா எனப்படும் சுரேஷ் கண்ணன் திரைப்பட இணை இயக்குநராகவும் எழுத்தாளருமாக உள்ளார். இரண்டாம் மகன் ஆறுமுகம் புதியதலைமுறை செய்தித் தொலைக்காட்சியில் நிகழ்ச்சித் தொகுப்பாளராக உள்ளார். நெல்லைக் கண்ணனின் தமிழ், பேச்சில் கடல் அலையாக ஓடுமென்று கூறுவார்கள். அவர் வீட்டுக்குள் எங்கு பார்த்தாலும் புத்தகங்கள் தான் நிறைந்திருக்கும். தமிழ் மீது தீராத பற்று கொண்ட அவர் அனைத்து அரசியல் தலைவர்களையுமே தெரிந்தவர். இந்த சூழலில் நெல்லை கண்ணன் அணமைக் காலமாக உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்தார்.நேற்று அவர் காலமானதான அறிவிக்கப்பட்டுள்ளது.

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 245.86 | 257.80 |
| கனடியன் டொலர் | 274.47 | 287.59 |
| யூரோ | 361.89 | 377.21 |
| ஜப்பான் யென் | 2.6389 | 2.7465 |
| சிங்கப்பூர் டொலர் | 256.85 | 268.01 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 428.41 | 445.91 |
| சுவிஸ் பிராங்க் | 373.21 | 390.95 |
| அமெரிக்க டொலர் | 357.33 | 368.70 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 957.45 | கட்டார் ரியால் | 98.58 |
| குவைத் டினார் | 1,176.03 | சவூதி ரியால் | 96.14 |
| ஓமான் ரியால் | 937.58 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.27 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 03ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 முஹர்ரம் பிறை 20




## டெங்கு, கொவிட் 19 தொற்றுகளை தவிர்ப்பதில் அவதானம் அவசியம்!

இலங்கையில் டெங்கு மற்றும் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளானவர்களாக நாளாந்தம் அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் கடந்த சில வாரங்களாக அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது. இதனை சுகாதார அமைச்சின் தொற்றுநோய்கள் பரவுதல் தடுப்புப் பிரிவின் தரவுகள் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

அந்த வகையில் இவ்வருடம் ஜனவரி மாதத்தின் பின்னர் டெங்கு நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டவர்களின் எண்ணிக்கையில் வீழச்சி ஏற்பட்டிருந்த போதிலும், ஜூன் மாதம் முதல் இந்நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இதன்படி, ஜூன் மாதம் 7194 பேரும், ஜூலை மாதம் 10423 பேரும் இந்நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் இந்நோய்க்கு உள்ளானவர்களாக 25 சிறுவர்கள் சிகிச்சை பெற்று வருவதாக சிறுவர் நோயியல் வைத்திய நிபுணர் டொக்டர் தீபால் பெரேரா குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்படுபவர்களில் பெரும் பகுதியினர் கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். மேல் மாகாண மாவட்டங்களுக்கு வெளியே கண்டி, கேகாலை, இரத்தினபுரி, காலி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் இந்நோய்க்கு உள்ளானவர்களாக குறிப்பிடத்தக்க அளவிலானோர் தினமும் பதிவாகவே செய்கின்றனர். இந்நிலையில் நாட்டிலுள்ள 56 சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகப் பிரிவுகளை டெங்கு அச்சுறுத்தல் மிக்க வலயங்களாக சுகாதார அமைச்சு பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்நோய்க்கு உள்ளாவோரின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பைக் கருத்தில் கொண்டு இந்நோய்க்காவியின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது. குறிப்பாக தெளிந்தநீர் தேங்கக் கூடிய பொலித்தீன் உறைகள், யோகட் கப்கள், சிரட்டைகள், உடைந்த மட்பாண்டங்கள் உள்ளிட்ட அனைத்தையும் ஒழுங்குமுறையாக அப்புறப்படுத்தி சுற்றாடலை சுத்தமாகவும் உலர் நிலையிலும் வைத்துக் கொள்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

இதன் நிமித்தம் வீடுகளிலும் வாழும் சுற்றுச்சூழலிலும் சேரக்கூடிய நீர் தேங்கக்கூடிய திண்மக்கழிவுப் பொருட்களை முறையாக அகற்றி சுத்தம் செய்து கொள்ளும் வகையில் வாரத்திற்கு ஒரு தடவையாவது சிரமதானப் பணிகளை மேற்கொள்வது அவசியம். இவை இந்நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பெரிதும் உதவக் கூடியதாகும்.

இவை இவ்வாறிருக்க, கொவிட் 19 தொற்றும் நாட்டில் மீண்டும் தலைதூக்கக் கூடிய அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளது. 2020 முதல் உலகிற்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் இத்தொற்று 2021 ஆண்டின் இறுதிப்பகுதி முதல் அதன் பரவுதலில் இந்நாட்டிலும் பெருவீழ்ச்சி நிலையை அடையத் தொடங்கியது. இதற்கு முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல் உள்ளிட்ட அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்கள் பெரிதும் உதவின.

ஆனாலும் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக நாளாந்தம் பதிவாகின்றவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படத் தொடங்கியதோடு அத்தொற்றைத் தவிர்த்துக் கொள்வதற்கான அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களை முறையாகக் கடைபிடிப்பதில் இருந்தும் மக்கள் படிப்படியாக தூரமாகத் தொடங்கியதோடு மாத்திரம் நின்றுவிடாது, இப்பழக்கவழக்கங்கள் குறித்து அசிரத்தை காட்டவும் ஆரம்பித்தனர். ஆனால் இது இத்தொற்றைத் தவிர்த்துக் கொள்வதற்கு உதவக் கூடிய நிலைமை அல்ல என மருத்துவ நிபுணர்களும் சுட்டிக்காட்டினர். அதுவும் பெரிதாக அலட்டிக் கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் கடந்த ஜூலை மாதத்தின் பிற்பகுதி முதல் இத்தொற்றுக்கு உள்ளாவர்களாக நாளாந்தம் பதிவாகின்றவர்களின் எண்ணிக்கை மீண்டும் மெதுவாக அதிகரிக்கலானது. அது தற்போது தினமும் 100, 150 என்றபடி பதிவாவதோடு 5, 6 மரணங்களும் சம்பவிக்கின்றன. இத்தொற்று தவிர்ப்புக்கான அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கைவிட்டு அவற்றில் இருந்து தூரமானதன் விளைவே இந்நிலைமை. அதனால்தான் நிலைமையைக் கருத்தில் கொண்டு முகக்கவசம் உள்ளிட்ட அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களை சுகாதார அமைச்சு மீண்டும் கட்டாயப்படுத்தி உள்ளது. பொது இடங்களில் இவற்றைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். இருந்தும் அதிலும் கூட அசிரத்தை காட்டப்படுகின்றது.

இவ்வாறான சூழலில் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத், 'கொவிட் 19 தொற்றின் தாக்கத்தைப் பலவீனப்படுத்தக் கூடிய தடுப்பூசியின் நாலாவது டோஸைப் பெற்றுக் கொள்ளுமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள்' விடுத்துள்ளார்.

டெங்கு நோயும் கொவிட் 19 தொற்றும் மக்களால் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாகும். ஆனால் அந்நோய்கள் உயிராபத்து அச்சுறுத்தல் கொண்டவை என்பதை மறந்து விடலாகாது. அதனால் இந்நோய்களுக்கு உள்ளாவதைத் தவிர்த்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் உச்சபட்ச கவனம் செலுத்த வேண்டும். அதுவே ஆரோக்கிய பாதுகாப்புக்கு பக்கத்துணையாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கைக் குழந்தைகளின் மருத்துவ தேவைக்கு நிதிசேர்க்கும் கலைநிகழ்ச்சி

## மெல்பனில் இன்று 19ஆம் திகதி மூவின மக்களும் இணையும் ஒன்றுகூடல்

அவுஸ்திரேலியா மெல்பனில் வதியும் இலங்கையைச் சேர்ந்த மூவினத்தவர்களும் இணைந்து, தமது தாயகத்தில் சமகாலத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு மருத்துவ ரீதியாக உதவ முன்வந்துள்ளனர்.

முன்னர் நீடித்த கொவிட் பெருந்தொற்றுக் காலத்திலும் இங்கிருக்கும் இலங்கையர்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஊடாக பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளனர்.

இன்று 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மெல்பனில் கிளேய்டன் சமூக மண்டபத்தில் இரவு 7.30 மணி முதல் 11.30 மணிவரையில் நடைபெறவிருக்கும் ஒன்றுகூடல் மற்றும் கலைநிகழ்ச்சிகளின் மூலம் திரட்டப்படும் நிதி, இலங்கையில் குழந்தைகளின் மருத்துவ தேவைக்கான உபகரணங்கள், கருவிகள் ஆகியனவற்றை பெற்றுக் கொள்வதற்காக ரோட்டரிக் கழகம் ஊடாக வழங்கப்படவிருக்கிறது.

எதிர்காலக் குழந்தைகளின் கனவுகளை நனவாக்கும் திட்டத்தின் கீழ் அவுஸ்திரேலியா விக்ரோரியா மாநிலத்தில் வசிக்கும் இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட மூவினத்தவர்களும் இணைந்து இந்நிகழ்ச்சியை முன்னெடுத்துள்ளனர்.



விக்ரோரியா மாநில இலங்கைக்கான துணைத்தூதுவர் கித்சிறி கேரத் மற்றும் கிறீன் கட்சியின் பிரதிநிதியும் எம். பியுமான திருமதி சமந்தா ரட்ணம், மாநில எம். பிக்கள், பல்லின கலாசார ஆணையாளர் ஆகியோர் உட்பட பல பிரமுகர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு பின்வருவோருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மங்கல – 0412 286 640, சித்தி – 0433 325 798,
ஸ்ரீகௌரிசங்கர் – 0421 869 644
www.saveadream.org.au / info.saveadream.org.au

# அமைச்சுகள் சொந்த உழைப்பில் இயங்குவது வினைத்திறனை அதிகரிக்க வழிகோலும்

## அமைச்சர் நசீர் அஹமட்

அமைச்சுக்களின் செயற்பாடுகளை வினைத்திறனுள்ளதாக மாற்றுவதற்கு குறித்தொதுக்கப்படும் நிறுவனங்கள் ஆகக்குறைந்தது பத்து வருடங்களுக்காவது அதே அமைச்சின் கீழ் செயற்பட வேண்டுமென சுற்றாடல்துறை அமைச்சர் நசீர் அஹமட் தெரிவித்தார்.

கொழும்பில் அவரது அமைச்சில் நடத்திய விஷேட செய்தியாளர் மாநாட்டில் கருத்துJ; தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்விடயத்தை தெரிவித்தார்.

இங்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் தெரிவித்ததாவது: அதிகமான அமைச்சுக்கள் திறைசேரியின் உதவியையே நம்பியுள்ளன. இந்நிலைமை மாற்றப்பட்டு சொந்த முயற்சியில் உழைக்கும் நிலைமை ஏற்படுவது அவசியம். இதற்கு, ஆகக் குறைந்தது பத்து வருடங்களுக்காவது ஒரே அமைச்சினகீழ் குறித்தொதுக்கப்படும் இலாகாக்கள் இருக்க வேண்டும். இவ்வாறு நிலையாக எந்த இலாகாக்களும் ஒரே அமைச்சின் கீழ் இருப்பதில்லை. அமைச்சுக்கள் மாற்றப்படும் போது அங்குள்ள நிறுவனங்களும் மாற்றப்படுகின்றன. சிலர், தங்களது தேவைகளுக்காக இவ்வாறு நிறுவனங்களை தமது அமைச்சின் கீழ் தருமாறு கோருகின்றனர்.

அமைச்சுக்கள் அதிகரிக்கப்படுகின்ற போதும் இதே நிலையே ஏற்படுகிறது. ஏதாவதொரு இலாகாவை (நிறுவனம்) வழங்கியே ஆக வேண்டும் என்பதற்காகவும், இவ்வாறு இங்கிருப்பது அங்கும், அந்த அமைச்சிலிருக்கும் நிறுவனம் இங்கும் கொண்டு வரப்படுகிறது.



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் சுற்றாடல்துறை அமைச்சு இருந்த போது, இருபது இலாகாக்கள் இருந்தன.இப்போது, இரண்டு நிறுவனங்களே எனது அமைச்சின்கீழ் உள்ளன. இவ்வாறு செய்வதால்,அமைச்சின் செயற்பாடுகளை வினைத்திறனுள்ளதாக மாற்ற முடியாது. சம்பந்தமுள்ள அல்லது அமைச்சுக்குப் பொருத்தமான நிறுவனங்கள்தான் ஒரு அமைச்சுக்கு வழங்கப்பட வேண்டும்.

நாட்டின் கனிம வளங்கள் உள்ள சகல பகுதிகளையும் சுற்றாடல் அமைச்சு அடையாளம் கண்டு வைத்துள்ளது. தேவையான முதலீட்டாளர்கள் அங்கு முதலீடு செய்வதற்கான அனுமதி வழங்கப்படும். நில அகழ்வுகளில் ஈடுபடுவதற்காக 64 முதலீட்டாளர்கள் அனுமதி பெற்றுள்ளனர். ஆனால், இவர்களில், 47 பேர் எந்த செயற்பாடுகளிலும் ஈடுபடாமல் அனுமதிப்பத்திரங்களை வேறு விதமாக பயன்படுத்தி வருகின்றனர். இவர்களின் அனுமதி ரத்துச் செய்யப்படவுள்ளது.

2023 ஆம் ஆண்டில்,ஒரு பில்லியன் டொலர் எமது அமைச்சின் கீழான நிறுவனங்களின் செயற்பாடுகளில் முதலீடு செய்யப்படும் என எதிர்பார்க்கிறோம். இதனைக் கருத்திற்கொண்டுதான் அமைச்சின் கீழுள்ள இலாகாக்களின் அதிகாரிகளுடன் மாதாந்தம் சந்திப்புக்களை நடாத்தவுள்ளேன்". இவ்வாறு அமைச்சர் நசீர் அஹமட் தெரிவித்தார்.

தெஹிவளை-கல்கிசை விசேட நிருபர்...

# இந்திய நூலகவியல் தந்தை பத்மஸ்ரீ ரங்கநாதனின் 130 ஆவது பிறந்ததினம்

இந்திய நூலகவியலின் தந்தை என்று போற்றப்படுகின்ற எஸ்.ஆர்.ரங்கநாதன் அவர்களின் 130ஆவது பிறந்த தினம் வாழைச்சேனை பொதுசன நூலகத்தில் கொண்டாடப்பட்டது. நூலகர் திருமதி ஜெஸ்மின் ஹப்சா மஜீத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், நூலக சேவகரான எஸ்.ஏ.ஸ்ரீதர் தொகுத்த 'நூலகவியலின் தந்தை எஸ்.ஆர். ரங்கநாதன் வாழ்வும் பணியும்' எனும் சிறுநூலும் வெளியிடப்பட்டது. ரங்கநாதனின் உருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. நூலக உத்தியோகத்தர்கள் அனைவரும் நிகழ்வில் பங்கு பற்றினர்.

கோறளைப்பற்று பிரதேச சபையின் கீழ் இயங்கி வருகின்ற வாழைச்சேனை பொதுசன நூலகமானது இவ்வருடம் தனது 50ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு பல்வேறு முன்னோடியான நிகழ்வுகளைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்றது. அவ்வகையில் இந்தியாவில் நூலகத்துறையின் வளர்ச்சிக்காக தனது வாழ்வையே அர்ப்பணித்து, தனது சொத்துகளையும் தானம் செய்த எஸ்.ஆர். ரங்கநாதன் அவர்களைக் கௌரவிக்கவும், அவரைப் பற்றியும் அவரது பணிகள் பற்றியும் நூலகத்தில் பணிபுரிபவர்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் எனும் நோக்கிலும் ரங்கநாதன் அவர்களது பிறந்த தினம் கொண்டாடப்பட்டது.



வாழைச்சேனை பொதுசன நூலகத்தில் அனுஷ்டிப்பு

சீர்காழி இரா. அரங்கநாதன் எனப்படும் எஸ்.ஆர். ரங்கநாதன் 1892இல் சீர்காழியில் பிறந்தார். சென்னை கிறித்தவக் கல்லூரியில் கணிதத்தில் இளங்கலை மற்றும் முதுகலை படித்தார். பின்னர் சைதாப்பேட்டையிலிருந்த ஆசிரியர் கல்லூரியில் ஆசிரியத் தகுதிச் சான்றிதழ் பெற்றிருக்கிறார். மங்களூர், கோயம் புத்தூர் ஆகிய இடங்களிலிருந்த அரசாங்கப் பாடசாலைகளில் சில காலம் ஆசிரியராகப் பணியாற்றிய ரங்கநாதன், பின்னர் மெட்ராஸ் பிரசிடென்சி கல்லூரியில் கணிதம், இயற்பியல் ஆகிய பாடங்களைக் கற்பித்து வந்தார்.

1924இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் நூலகர் பணியில் சேர்ந்தார். நூலகருக்கான கல்வித் தகுதியோ முன் அனுபவமோ அப்போது அவருக்கு இருக்கவில்லை. இதனால் நூலகச் சிறப்புப் பயிற்சிக்காக லண்டனுக்கு அவர் அனுப்பி வைக்கப்பட்டார். ஒன்பது மாதங்கள் லண்டனில் சிறப்புப் பயிற்சி பெற்று திரும்பிய ரங்கநாதன் நூலகத்தில் புதியசீர் திருத்தங்களை நடைமுறைப்படுத்தியதுடன், அங்கிருந்த நூல்களை முறையாக வகைப் படுத்தி, விரிவான விபரப் பட்டியல்களையும் தயாரித்தார். லண்டனில் இருந்த நாட்களில் அங்குள்ள நூலகத்தில் பகுதி நேரப் பணியாற்றியபடியே அவர் நூலக கல்வியை பயின்றிருக்கிறார். அவர் உருவாக்கிய 'கோலன் கிளாஸிஃபிகேஷன்' எனும் நூல் பகுப்பாக்க முறையே இன்றும் பல பொதுநூலகங்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை பல்கலைக்கழக நூலகராகப் பணியாற்றிய இருபது ஆண்டுகளில் அவர் ஒருமுறை கூட விடுமுறை பெறவில்லை என்றும், தனது திருமண நாளில் கூட திருமணத்தினை முடித்துக் கொண்டு, அரைநாளில் வேலைக்கு வந்து விட்டார் என்றும் கூறப்படுகின்றது. கிராமப்புற மக்களுக்குப் புத்தகங்கள் கிடைக்க வேண்டும் என்று 'சென்னை நூலகச் சங்கம்'என்ற அமைப்பை ஏற்படுத்தி மாட்டு வண்டிகள் மூலம் புத்தகங்களை எடுத்துக் கொண்டு, கிராமங்களை நோக்கிச் சென்றார் .

அத்தோடு நூலக அறிவியல் கற்கை நெறிகளை நடத்துவதற்கென தனியாக பாடசாலை ஒன்றைத் தொடங்கினார். இந்தியாவில் நூலகச் சட்டம் பிறப்பிக்கப்படுவதற்கு ரங்கநாதனே முக்கிய காரணமாக இருந்தார். இவரது சீரிய முயற்சியால் 1948 இல், தமிழகத்தில்தான் முதன்முதலில் நூலகச் சட்டம் இயற்றப்பட்டது. 1931 இல் ரங்கநாதன் 'நூலக அறிவியலின் ஐந்து விதிகள்' எனும் நூலை வெளியிட்டார்

பனாரஸ் பல்கலைக்கழகம், டெல்லி பல்கலைக்கழகம் என இந்தியாவின் முக்கியப் பல்கலைக்கழக நூலகங்களைச் சிறப்பாக உருமாற்றியதில் இவரது பங்கு முக்கியமானது. நூலகம் சார்ந்த பட்டப்படிப்பு மற்றும் சிறப்புப் படிப்புகள் உருவாகவும் இவரே முக்கிய காரணம். அத்துடன் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தின் உருவாக்கத்திலும் முக்கிய ஆலோசகராகப் பணியாற்றியுள்ளார்.

இவர் நூலகவியலுக்குச் செய்த பங்களிப்புக்காக இந்திய அரசு இவருக்குப் பத்மஸ்ரீ விருது வழங்கிக் கௌரவித்தது. இவரது பிறந்த நாளை, இந்தியாவில் தேசிய நூலக தினமாக அறிவித்துள்ளார்கள்.

தமிழ்நாட்டில் ஒரு எளிமையான குடும்பத்தில் பிறந்து நூலக உலகமே வியந்து போற்றும் அளவுக்கு அளப்பரிய பணிகள் செய்துள்ள எஸ்.ஆர்.ரங்கநாதன் ஒரு தமிழர் என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

எஸ்.ஏ.ஸ்ரீதர்...
நூலக சேவகர்
வாழைச்சேனை பொதுநூலகம்

# அக்கரைப்பற்றில் பன்மைத்துவம் தொடர்பான பயிற்சிநெறி

தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன் அட்டாளைச்சேனை சர்வ சமயக் குழு மற்றும் றுஹுணு லங்கா அமைப்பின் ஒருங்கிணைப்பில் பன்மைத்துவம் தொடர்பான ஒரு நாள் பயிற்சிநெறி அக்கரைப்பற்று மென்கோ கார்டன் தனியார் ஹோட்டலில் றுஹுணு லங்கா அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் எம்.எஸ்.ஜஃபர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

சமய சகவாழ்வு, நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை கலாசார ரீதியாக நிலையானதாக மாற்றுவதற்கான மும்மதத்தினருக்குமான செயலமர்வாகவே இது நடத்தப்பட்டது.

நிரந்தர சமாதானம், இன ஐக்கியம், சகவாழ்வு போன்றவற்றை கட்டியெழுப்புவதற்காக தேசிய சமாதான பேரவை பிராந்திய மட்டங்களில் பல்வேறு வேலைத்திட்டங்களையும் பயிற்சிகளையும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது.

அந்த நிகழ்ச்சிகளில் ஒன்றான இந்த ஒரு நாள் பயிற்சி கருத்தரங்கில், சமயக் குழுவின் நோக்கம், அதன் இலக்கு, நிதியளிப்பு வழிமுறைகள், சமூக அங்கீகாரம், உள்ளக ஒற்றுமை குழு செயற்பாடு மற்றும் பங்கேற்பாளர்களிடையே குழு செயல்பாடுகள் பற்றிய விரிவான விளக்கம் ஆகியவை கலந்து கொண்ட வளவாளர்களினால் செயலமர்வில் கலந்து கொண்டவர்களுக்கு தெளிவாகவும் பயிற்சிகளுடனும் வழங்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

தேசிய சமாதானப் பேரவையின் திட்ட முகாமையாளர் எம்.யூ. உவைஸ் மதனி, ஆசிய அறக்கட்டளையின் திட்ட முகாமையாளர் இம்ரான் நசீர் ஆகியோர் இச்செயலமர்வில் வளவாளராக கலந்து கொண்டதோடு, அமைப்பின் உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், இளைஞர் யுவதிகள், மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், சர்வமதத்தலைவர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டார்கள்.





எம்.எஸ்.எம்.றிஸ்வான்...
(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)




# பார்ப்பவர்களின் பார்வையிலும் புரிதலிலுமே அழகும் இரசனையும் தங்கியுள்ளன..

## புகைப்படக் கலைஞரும் அதிபருமான அ. பங்கையற் செல்வன்



நாம் காண்பவை எல்லாமே இரசனைக்குரியவை. நாம் வாழும் சூழலில் உள்ள அனைத்துமே அழகானவை. பார்ப்பவர்களின் பார்வையிலும் புரிதலிலுமே அந்த அழகும் இரசனையும் தங்கியுள்ளன என புகைப்படக் கலைஞரும் அதிபருமான அ. பங்கையற் செல்வன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச புகைப்பட தினத்தை முன்னிட்டு புகைப்படப் பிடிப்பாளரும் இந்நூலாசிரியருமான அ. பங்கையற்செல்வன் தினகரனுக்கு வழங்கிய கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேச புகைப்படத் தினத்தை முன்னிட்டு புகைப்படக் கலைஞரும் அதிபருமான அ. பங்கையற் செல்வனின் அழகிய வண்ணப் புகைப்படங்கள் தாங்கிய 'நிழல்கள் சொல்லும் கதைகள்' (ஒளி ஓவியம் காட்டும் திசை) எனும் நூல் வெளியீடும் கருத்தமர்வும் இன்று வெள்ளிக்கிழமை பி. ப. 2.30 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறும்.

காவேரிக் கலாமன்றத்தின் இயக்குனர் வண. யோசுவா அடிகள் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வரவேற்பு, தலைமையுரையினை ப. கஜிந்திரன், நூல் அறிமுகவுரையினை கருணாகரன், நூல் வெளியீட்டுரையினை யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த. சத்தியமூர்த்தி, நூலுரையினை வைதேகி நரேந்திரன், ஒளிப்படம் சமூகப் பண்பாட்டின் நோக்கில் யாழ். பல்கலைக்கழக சமூக விஞ்ஞானத் துறை விரிவுரையாளர் இராஜேஸ்கண்ணாவும் கலை, பொருளாதார நோக்கில் ஒளி ஓவியர் ஸ்ரீபன் சஞ்சிகன், ஏற்புரையினை வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலய அதிபர் நூலாசிரியர் அ. பங்கையற்செல்வன் நிகழ்த்துவார்.

**கேள்வி:** ***இன்றைய சர்வதேச புகைப்பட தின நாளில் உங்களுடைய புகைப்படம் தாங்கிய நூலொன்றை வெளிக்கொணர்வதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். உங்களுடைய புகைப்பட அனுபவங்களைப் பற்றிக் கூறுவீர்களா?***

**பதில்:** நாம் காண்பவை எல்லாமே இரசனைக்குரியவை நாம் வாழும் சூழலில் உள்ள அனைத்துமே அழகானவை. பார்ப்பவர்களின் பார்வையிலும் புரிதலிலுமே அந்த அழகும் இரசனையும் தங்கியுள்ளன. பூமியும் வானமும் கடலும் நிலமும் பறவைகளும் விலங்குகளும் ஆறுகளும் அருவிகளும் வாய்க்காலும் வயலும் ஒற்றையடிப் பாதைகளும் தார்வீதிகளும் மரங்களும் கொடிகளும் மரம் விட்டு மரம் தாவும் மந்திகளும் மரத்திலே தொங்கும் வௌவால்களும் புற்றெடுக்கும் கறையான்களும் வழிப்படுத்தலின்றி வரிசையாகச் செல்லும் எறும்புகளும் அழகானவை. இவ்வாறு இன்னோரன்ன அழகுக் காட்சிகள் எம்முன்னே பரந்து கிடக்கின்றன.

இவற்றையெல்லாம் பார்க்கும் போதும் அவற்றைக் கடந்து செல்லும் போதும் அதன் அழகை இரசிக்கிறேன்; ஆறுதல் கொள்கிறேன், அவற்றைப் படமாக்கிக் கொள்ள முயற்சிக்கிறேன். நீண்ட வானத்தில் தினமும் தோன்றும் வண்ணங்களிலும் அழகிலும் லயித்துப் போகிறேன். தினம் வந்துபோகும் சூரியனின் தோற்றமும் மறைவும் நாளும் புதிதாகவே இருப்பதாக உணர்கிறேன்.

படப்பிடிப்பு என்பது உள்ளத்து உணர்வுகளின் விருப்பு, அதனூடான வெளிப்பாடு. நான் தரம் 9 இல் கற்கும் காலம்; ஆசிரியர் புவனேந்திரன் என்னிடம் கமராவை தந்து படம் எடுக்கத் தூண்டியது இன்றும் மகிழ்ச்சியான ஒரு தருணமாக மனதில் நிலைத்திருக்கிறது. படம் எடுத்த பின் அந்தப்படம் கழுவி வரும் வரை காத்திருந்த நாள்கள் கனதியானவை. அந்தப் படங்கள் வந்ததும் அதன் அழகை இரசித்து மகிழ்ந்தது இப்பவும் நினைவிலிருக்கிறது. பக்கம் பக்கமாக எழுதிக்குவித்துச் சொல்லும் செய்தியை விடவும் ஒரு படம் சொல்லும் செய்தியென்பது பெரியது. படங்கள் சொல்லாத செய்தியை எழுத்துக்கள் சொல்ல விளைகின்றன.

சூழலில் காணும் விடயங்களை படங்களாக எடுத்துக் கொள்ளும் போது அது மகிழ்வினைத் தந்தாலும், சூழலை சூறையாடும் காட்சிகள் மனதிற்குள் நெருடலைத் தருகின்றன. இந்த எண்ணங்களின் வண்ணங்கள் மிகப் பெரும் திரட்சியாகி அதிக படங்களின் தொகுப்பாக என்னிடம் நிரம்பிக்கிடக்கின்றன. இவற்றை என் நண்பர்கள் பார்க்கும் போதெல்லாம் பல கருத்துக்களைச் சொல்லி உருவகம் தருவார்கள்.

**கேள்வி:** *படங்களுக்கு ஆழமான கதைகளை எழுதத் தூண்டுதலாக இருந்த அந்த குறித்த அன்பர் யார்? எவ்வாறான கதைகளை எழுதியுள்ளீர்கள்?*

**பதில்:** உண்மையிலேயே வேறு யாரும் அல்ல அருட்தந்தை யோசுவா அவர்கள் தான். அவர் சில படங்களுக்கான கதைகளை எழுதும் எண்ணம் ஒன்றை என்னுள் விதைத்ததுடன் அதற்கான செயல் வடிவத்தையும் கொண்டு வந்தார். இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட படங்கள் சிலவற்றுக்கு கதையெழுதும் பயிற்சி வகுப்பொன்றினை ஏற்பாடு செய்து, இளம் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தி அவர்களை இந்த ஆக்கத்திற்காக எழுத வைத்தோம். அவர்களது கதைகளோடு குறித்த படங்கள் பற்றியும் எனது மனப்பதிவையும் சிறிய கதைகளாக்கினேன். நான் எழுதியுள்ள சில கதைகள் உண்மையான சம்பவங்களின் பின்னணியில் உருவானவை. நாளாந்தம் நாம் சந்திக்கும் மனிதர்களின் கதைகளை, அவர்களது பிரச்சினைகளைக் கேட்கும் போது, நான் நாளும் காணும் காட்சிகளோடும் எடுத்துக்கொள்ளும் படங்களோடும் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது அவை அர்த்தம் பொதிந்தவையாக அமைகின்றன.

தினம் தினம் நிறைய விடயங்களை எழுதுகின்றோம். காணும் காட்சிகளைப் படமாக்குகின்றோம் அவை எங்கோ ஓரிடத்தில் ஒளிந்து கிடக்கின்றன. அவ்வாறான சூழலில் நாம் பிடித்த படங்கள் பற்றி பேசுவதும், அது நூலுருப் பெறுவதும் மகிழ்விற்குரியதாகும். இந்தப் பணியில் என்னை அழைத்துச் சென்ற யோசுவா அடிகளாருக்கும், அவரது நிறுவனத்திற்கும் எப்போதும் நன்றியுடையவனாவேன். என் படங்களுக்கு கதை புனைந்த அத்தனை இளையவர்களது முயற்சிகளும் பாராட்டுக்குரியவை. அவர்கள் தொடர்ந்து எழுத இந்த 'நிழல்கள் சொல்லும் கதைகள்' வழிசமைக்கும் என்று நம்புகிறேன்.

# இன்று சர்வதேச புகைப்பட தினம்

**கேள்வி:** *இந்த நூலாக்கத்திற்கு வணக்கத்திற்குரிய யோசுவ அடிகளார் பின்புலமாக இருந்துள்ளார் என்று அறிகிறோம், அந்த வகையில் அவர் பார்வையில் உங்கள் நூல்?.*

**பதில்:** உண்மையிலே அவர் என்னுடைய நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளார். அதில் குறிப்பிடப்பட்டுள்ள படி...

'கடந்து போக முடியாத நிமிர்ந்து பார்த்தலுக்கும் புருவ உயர்த்தலுக்கும் சிலர் மாத்திரமே நிறுத்தப்பட்டுள்ளனர். அப்படிப்பட்டவர்கள் ஏதோ ஒரு வகையில் காற்றின் வேகத்திற்கு முறிந்து விழாத, உயர்ந்து நிமிர்ந்து நிற்கும் பனை மரங்களுக்கு ஒப்பாக வரண்ட காலத்திலும் உறுதியாக நின்று கனி கொடுப்பவர்கள். அப்படிப்பட்ட ஒரு கனியாக, சுவையாக பார்த்தும் அனுபவித்தும் சுவைத்தும் இருக்கும் ஒரு மனிதரின் மென்மையான பக்கங்களால் அவர் கண்களில் வரைந்த ஓவியத்தை கதைகளாக உலா வரச்செய்து, காலத்தின் மடியில் ஓர் அடிச்சுவட்டை படைத்திருக்கின்றார். அவர் தான் எனது நண்பர் பங்கையற் செல்வன்...

படைப்பின் புதிய வடிவங்களுக்கான காத்திருப்பு கனதியானது. நிறைவில் மானுடம் அதில் வெற்றி கொள்கிறது. எல்லோரும் போகும் அதே பாதையில் பயணிப்பதில் இருக்கும் இலகு தன்மையைக் கடந்து, கரடு முரடான ஓர் புதிய பாதைக்கு தன் பாதங்களை பரிசாக்குபவர்கள் சிலர் மட்டுமே. அப்படிப்பட்டவர்கள்தான் படைப்பின் புதிய வடிவங்களை உலகுக்கு வழங்குகிறார்கள். அந்த வகையில் நண்பர் பங்கையற்செல்வனின் 'நிழல்கள் சொல்லும் கதை' இலக்கியத் தளத்தில் ஓர் புதிய பார்வைக்கு களம் அமைத்திருக்கிறது.

பங்கையற்செல்வனின் புகைப்பட படைப்புக்கள் ஆபூர்வமானவை. ஆச்சரியமானவை. எல்லோரும் கடந்து செல்லும் மிகவும் அற்பமானவைகள். அவற்றை அவர் அற்புதங்களாகவும் ஆச்சரியமானவைகளாகவும் தன் கண்களால் வடித்து நம் கண்முன் நிறுத்துகின்றார். அப்படிப்பட்ட நிழற்படங்கள் காட்சி விம்பங்களாக மட்டும் நிற்காமல் அவைகள் நமக்குள் ஊடறுத்து செல்லும் போது சொல்லும் கதைகளாகவும் நம் உள்ளத்தில் காட்சிப்படுத்தியிருக்கிறார். புகைப்படங்கள் சொல்லும் கதைகள் பற்றிய பார்வை நீண்ட வரலாற்றைக் கொண்டது. ஆனால், நம் கண்களுக்கு காட்சிகளாக அமையாதவைகள் என்று நாம் நினைப்பவைகளை கதை சொல்லிகளாக பங்கையற் செல்வன் அழைத்திருக்கின்றார்.

இது கதை சொல்லுதலுக்கான ஓர் புதிய வடிவம். இந்த புதிய வடிவத்தை அறிமுகப்படுத்துவதற்கு எமக்கு அவர் வாய்ப்பளித்தமை மகிழ்வுக்குரியது. இப்படிப்பட்ட புதிய வடிவங்களே வாழ்விற்கான உயர்ந்த விழுமியங்களை மனிதர் முன் மீண்டும் நிலை நிறுத்துகின்றன.

பங்கையற்செல்வன் தன் புகைப்படங்களில் தன் இதயத்தின் ஆழத்தில் இருந்து ஊற்றெடுக்கும் உன்னதமான பண்புகளை ஒளிரச் செய்துள்ளார். அப்படிப்பட்ட ஒளி வீச்சுக்களின் பிரதி விம்பங்களாக அவை சொல்லும் கதைகள் அவருடைய மாணவ சமூகத்தால் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் புதிய பார்வை, நமது சூழல் குறித்த 'கடந்து செல்லும்' ஆழ்ந்த சிந்தனையில் ஆழமான தாக்கத்தை செலுத்தியுள்ளது; எதையும் நின்றுணர்ந்து இரசிக்கவும் மானுடமையின் சமூக பார்வையில் நின்று இயற்கை மைய சிந்தனை வட்டத்திற்கு இழுத்துச் செல்லவும் நம்மை தூண்டியிருக்கின்றார்.

பங்கையற்செல்வனின் இயற்கை சூழலியல் நேய பார்வையின் விளைவுகளை, அவரது வாழ்வியல் பண்புகளை, மறு மலர்ச்சியை எவரும் புரிந்துகொள்ள முடியும்.

'நிழல்கள் சொல்லும் கதைகள் என்பது' பங்கையற் செல்வனின் வாழ்விருப்பின் ஓர் வெளிப்பாடு; அது ஓர் அறைகூவல்; நின்று, உணர்ந்து, சார்ந்து, இடம் விட்டு இணைந்து பயணிக்க விடுக்கப்படும் அழைப்பு....

இந்த அழைப்பின் சத்தம் வார்த்தைகளுக்குள் நம்மை இழுத்துச்செல்லாமல், இயற்கை சூழலியலை ஒன்றிப் பார்க்க செய்யத்தூண்டுவதுதான் பங்கையற்செல்வன் நமக்கு படைத்திருக்கும் தன் படைப்பின் புதிய வடிவம்.

பார்வையால் வடிவங்களை செதுக்கும் பங்கையற் செல்வனின் பாத படிவங்கள் நீண்டு செல்லட்டும். நீங்காத உறுதியாய் அழுத்திச் செல்லட்டும் என வாழ்த்துகின்றேன் என்று மிகவும் அருமையான கருத்துப் பதிவையிட்டுள்ளார் வணக்கத்திற்குரிய யோசுவா அடிகளார்.

**கேள்வி:** *அவர் தவிர வேறு யார் இந்த புதிய நூலின் வருகை குறித்து கருத்துக்களை பரமாறியுள்ளனர் என்று கூற முடியுமா?*

**பதில்:** நண்பர் கருணாகரன் மிகவும் ஆழமான கருத்தொன்றை பதிவு செய்துள்ளார் என்று குறிப்பிடலாம்.

'ஒருவர் தன்னுடைய துறைக்கு அப்பால் பல்துறை ஈடுபாட்டோடும் ஆற்றலோடும் இருப்பதும் இயங்குவதும் சிறப்புக்குரியதாகும். இந்தப் பன்முகத்தன்மையே வாழ்வை மேலும் அர்த்தமுள்ளதாக அழகாக்குவதோடு சமூகச் சூழலையும் வளப்படுத்தும்.பங்கையற் செல்வனிடம் இந்தக் குணவியல்புச் சிறப்பு உண்டு. தன்னுடைய பிரதான துறையான கல்விப்புலத்தில் சிறப்பாக இயங்கிக் கொண்டே சமூகச் செயற்பாடு, விவசாயம், கலை, இலக்கிய ஈடுபாடு எனப் பிறதுறைகளிலும் ஆர்வம் கொண்டிருப்பவர். இதற்கு அடையாளமாக அவரால் எடுக்கப்பட்ட இந்த ஒளிப்படத் தொகுதியும் அதையொட்டி இளைய தலைமுறையினரால் எழுதப்பட்ட கதையாடல்களுமாக இந்த நூல் அமைகிறது.

பங்கையற்செல்வன் ஆசிரியராக சிறப்படையாளம் காண்பித்தவர். ஒரு சிறப்பான ஆசிரியர் உண்மையில் தன்னுடைய கற்றலில் முன்னிற்கும்போதே கற்பித்தலில் தன்னை வெற்றிகரமாக வெளிப்படுத்திக் கொள்ள முடியும். இதுவே கற்பித்தலில் மெய்யாக தேர்ச்சியடைவதற்கான வழிமுறை என்ற நம்பிக்கையுடையவர். இதன்படி செயற்பட்டுத் தன்னை நிரூபித்தவர். இதில் முக்கியமானது, மாணவர்களை சுயாதீனமாக இயங்க வைத்தலாகும். அவர்களுடைய ஆற்றலை மேலும் துலங்கும் வகையில் செயற்பாட்டுத்திறனுடையோராக வளர்த்தெடுக்க முயற்சித்தல். ஆசிரிய மாணவ உறவில் கொண்டிருக்கிற சினேகப் பண்பு.

இதைப்போலவே அவர் அதிபராகச் செயற்படத் தொடங்கிய பின்னரும் கற்றலையே பிரதானமாகக் கொண்டார். தனியே அதிபருக்கான தரச்சான்றிதழ்களை, அதற்கான போட்டிப் பரீட்சைகளின் மூலம் பெற்று அந்தப் பதவியை வகித்துக் கொள்ளாமல்,சூழலிலிருந்தும் புதிய சிந்தனை முறையிலிருந்தும் இயங்குபவர். இதனால்தான் அதிபராகவும் அவரால் பலரும் வியக்கும் விதமாகத் துலங்க முடிகிறது. இன்று 'பங்கையற்செல்வன் அதிபர்' என்ற அடையாளம் கிளிநொச்சி மாவட்டம் என்ற குறித்த வரையறைக்குள் மட்டுப்படாமல் வடமாகாணம் என்ற அளவில் விரிந்துள்ளது. அவருடைய நிர்வாகத் திறன், பாடசாலை அபிவிருத்திச் செயற்பாடுகள், மாணவர் கல்வி நிலை, விழுமிய விருத்தி போன்றவற்றுக்காக தேசிய அளவில் அடையாளம் காணப்பட்டுள்ளமை இதை உணர்த்தும். இதற்கான ஒரு குறியீடாக அவர் கல்வி அமைச்சினால் சில ஆண்டுகளுக்கு முன்னரே இனங்காணப்பட்டு, சீனாவுக்கான கல்விப் பயணத்தை மேற்கொண்டிருந்தமை இங்கே நினைவிற் கொள்ளத்தக்கது. இதை விட மேலானது, அவர் பல மாணவர்களின் மனதிலும் பெற்றோரின் இதயத்திலும் சிறப்பிடம் பெற்றிருப்பதாகும்.

இவை கல்விப்புலத்தில் பங்கையற்செல்வனின் ஆளுமை வெளிப்பாட்டின் விளைவுகள் என்றால், சமூகச் செயற்பாடுகளில் அவரால் நன்மைகளைப் பெற்றோர், பெற்றுக்கொண்டிருப்போர் என்றொரு பெரும் பட்டியலைச் சொல்ல முடியும். பாதிக்கப்பட்டோர், நலிவுற்றோர் மேம்பாட்டுக்கான உதவிகளைச் செய்வது மட்டும் பொதுப்பணியோ சமூகச் செயற்பாடோ அல்ல. அப்படியென்றால் அதுவொரு 'நிவாரணம் அளித்தல்' என்ற அளவில் குறுகிவிடும். அதன் பயனும் சுருக்கமாகும். இதற்கப்பால் தேவையானோருக்கு வழிகாட்டுதலும் வழிப்படுத்தலும் அன்போடு அருகிருத்தலுமே முக்கியமானது. அதுவே அவர்களை, அவர்களுடைய வாழ்க்கையை மேலும் உயர்த்தும். இதைப் புரிந்து கொண்டு பங்கையற்செல்வன் இந்தப் பணிகளைச் சிறப்பாகச் செய்து வருவதை அவதானித்துக் கொண்டிருக்கிறேன்.

இதைப்போலவே இலக்கியம், நாடகம், ஒளிப்படம் என்று கலைத்துறையிலும் அவருடைய ஆர்வமும் ஈடுபாடும் உள்ளன. பங்கையற் செல்வன் நல்லதொரு நாடகச் செயற்பாட்டாளர். இருபது ஆண்டுகளாக வெவ்வேறு அரங்குகளில் தன்னைப் புதுவிதமாக வெளிப்படுத்தியவர். என்னுடைய நினைவுப் பதிவுகளில் அவர் சில அழியாத பாத்திரங்களாகவே உள்ளார்.

இப்பொழுது இன்னொரு வாசலைத் திறந்து ஒளிப் படங்களை நமக்குத் தந்திருக்கிறார். அதிலொன்றே ஒளிப்படங்களின் தொகுதியை உள்ளடக்கிய இந்த நூல். இதில் பங்கையற்செல்வனுடைய இயற்கை மேலான ஈர்ப்பையும் கலை ரசனையையும் நாம் உணர முடியும்.

அவர் எடுத்த படங்களை அவ்வப்போது காண்பித்த போது இதை நூலாக்கவும் காட்சிப்படுத்தவும் வேண்டும் என்ற எண்ணம் பலருக்கும் ஏற்பட்டதுண்டு. முக்கியமாக மக்கள் சிந்தனைக் களத்தில் இவற்றை நண்பர்கள் பார்வையிட்டனர். இந்தப் படங்களின் சிறப்பை உணர்ந்து நூலாகச் சாத்தியமாக்குவதற்கான தூண்டலைக் கொடுத்துச் சாத்தியமாக்கியுள்ளார் வணக்கத்துக்குரிய இனிய நண்பர் யோசுவா அவர்கள்.

இந்த ஒளிப்படங்களை முன்வைத்து, இவை உண்டாக்கும் வெளிப்படுத்தும் உணர்வுகளைக் கதையாக்கும் இணை கலைநுட்பத் தூண்டல் மூலம் இளையோர் இதில் பங்கேற்கின்றனர். இதுவும் யோசுவாவின் எண்ணமே.

இப்படி ஒரு தொடரியக்கத்தைப் பயில்களமாக்கிப் பார்ப்பது என்பது ஒரு வகையில் பரிசோதனை முயற்சியே. எந்த விளைவும் வெற்றிகளும் பரிசோதனைகளிலிருந்தே தொடங்குகின்றன. பரிசோதனைகளின் வெற்றியாகவே அமைகின்றன. ஆகவே அந்த அடிப்படையில் இந்த இணைந்த வெளிப்பாட்டு முயற்சிக்கு என் வாழ்த்தும் மகிழ்ச்சியும்.' என்று என் முதுகில் தட்டிக் கொடுத்து ஊற்சாகமூட்டியுள்ளார்.

**கேள்வி:** *வாழ்த்துரை தொடர்பில் சில குறிப்புகளை கூற முடியுமா*

**பதில்:** என் அன்புக்கினிய கலாநிதி (திருமதி) ஜெயலக்சுமி இராசநாயகம் வாழ்த்துரை வழங்கியுள்ளார். அவர் யாழ்.பல்கலைக்கழக கல்வியற்துறை தலைவர்.

'மனித இனத்தின் இருப்பை வெளிக்காட்டுவதும்; வரலாற்றை அடுத்த சந்ததிக்கு வழங்குவதும் எம்முடைய ஆக்கங்கள் என்பதில் நாம் உறுதியாய் இருத்தல் வேண்டும். காலத்திற்குக் காலம் எம்மவர்களால் வெளியிடப்படும் பல் துறைசார்ந்த நூல்களும் ஆராய்ச்சிகளும் எமது பொக்கிசங்களாக மிளிர்கின்றன. அவ்வகையில் பங்கையற் செல்வன் எழுத்துத்துறையில் அதிக ஆர்வமுடையவர்.

யுத்தங்களினால் சீரழிந்த எமது பாடசாலைகளின் கல்விச் செயற்பாட்டினைக் கட்டிக்காத்து மீளவும் தன் முனைப்புப் பெற்று விளங்கும் கிளிநொச்சியின் வளர்ச்சியில் அவருக்கு அதிக பங்குண்டு. அவரால் வெளியிடப்படும் இளம் சிறார்களின் சிறுகதைகள் அடங்கிய படங்களுடன் கூடிய இந்தநூல் இலகுவான வகையில் விளங்கிக்கொள்ளக் கூடியதாகவும் இயற்கையின் பால் கொண்ட ஈடுபாட்டினால்; அவரால் அவ்வப்போது பிடிக்கப்பட்ட படங்களுக்கு உயிர்கொடுப்பதாகவும் அமைந்துள்ளது. படங்களுக்காக எழுதப்பட்ட சிறுகதைகள், பொழுதுபோக்கு என்பதற்கு அப்பால் சிறந்த சிந்தனைக் கருவூலமாகவும் சூழல் நேயமிக்கதாகவும் அமைகின்றன.

பிள்ளைகளின் எழுத்துலகப் பிரவேசத்திற்கு வழிகாட்டியவர் என்ற வகையில் உண்மையில் பங்கையற்செல்வன் பாராட்டப்பட வேண்டியவராகின்றார். அவரது எழுத்துலகப் பயணம் மேலும் தொடர இறைவனை வேண்டுகிறேன்.' என்று எழுதியுள்ளார். இது எனக்கு நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஊட்டுகிறது.

**கேள்வி:** *நீங்கள் ஒரு புகைப்படப்பிடிப்பாளர் என்ற நிலையில் இருந்து ஓர் இலக்கிய படைப்பாளியாக மாறுவதற்கு அமைந்துள்ள காரணிகள் என்ன?*

**பதில்:** நான் ஒரு இயற்கைவாதி. எனது வாழ்நாள் முழுவதும் இயற்கையுடன் வாழ்வதற்கே படம் பிடிக்கிறேன்..

எமது பிரதேச மக்களுக்கு அவர்களுக்கு புரியும் மொழியில் இந்த இயற்கை நேசத்தை எடுத்து சொல்ல விரும்பினேன். குறிப்பாக எனது மாணவர்கள் மத்தியில் இது குறித்த பல உரையாடல்களை நடத்தியிருக்கிறேன்.இந்த உரையாடல் எனது படங்களை முன் வைத்த உரையாடலாக அமைந்தன அது தான் என்னை எழுத்தை நோக்கி நகர்த்தியது.

**கேள்வி:** *சமூக சேவை குறித்து பலரும் பேசுகின்றனர் அது குறித்து கொஞ்சம் சொல்லுங்கள்.*

**பதில்:** சமூக சேவை என்பது ஒரு பணி அல்ல அது நமது வாழ்வின் ஓர் பண்பு, அது இயற்கையானது. சிறுவயதில் இருந்து அது வாழ்வின் ஓர் அங்கமாகவே இருந்து வருகிறது, மரம் நடுதல், கல்விக்கு உதவுதல், ஆற்றுப்படுத்தல், வழிகாட்டுதல், ஆபத்தில் உதவுதல் என பல பணிகளை செய்து வருகிறேன். பல அமைப்புகளில் இணைந்து இந்த பணியை செய்கிறேன்.

கலந்துரையாடியவர்
**இக்பால் அலி**













# புதிய அமைச்சரவை அடுத்த வாரம் நியமனம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் தற்போது தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவைக்கு பதிலாக புதிய அமைச்சரவை எதிர்வரும் வாரத்தில் நியமிக்கப்படுமென அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

பெரும்பாலும் சர்வ கட்சி வேலைத் திட்டத்தின் கீழ் புதிய அமைச்சரவை நியமிக்கப்படுமென்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் 29ஆம் திகதி நிதி ஒதுக்கீட்டு திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதையடுத்து அதற்கு முன்பதாக புதிய அமைச்சரவை நியமிக்கப்படமென்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வ கட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பில் அனைத்து கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றார்.

அதேவேளை, புதிய அமைச்சரவையில் அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொள்வதற்காக பொதுஜன பெரமுன பெயர் பட்டியல் ஒன்றை ஜனாதிபதிக்கு கையளித்துள்ளதாக அந்த கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.



வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் UNDCO ஆசிய பசிபிக் பிராந்திய பணிப்பாளரான டேவிட் மெக்லாக்லான்கார் இடையே சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. 2023 – 2027 ஆம் ஆண்டுக்கான இலங்கைக்கான ஐ.நா.வின் 5 வருட நிலையான அபிவிருத்தி ஒத்துழைப்புக் கட்டமைப்பு தொடர்பில் இதன் போது கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

22ஆவது திருத்தச் சட்டமூலம்:

## 09 மனுக்கள் தாக்கல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணாக காணப்படுவதாகவும் அதனை பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றுமாறு உத்தரவிடுமாறு கோரி கலாநிதி குணதாச அமரசேக்கர என்பவர் உட்பட ஒன்பது பேர் உயர் நீதிமன்றத்தில் 09 மனுக்களை நேற்று தாக்கல் செய்துள்ளனர்.கலாநிதி குணசேக்கர அமரதாச, நாகானந்த கொடிதுவக்கு, சட்டத்தரணி நுவன் பெல்லன்துடாவே உள்ளிட்ட ஒன்பது பேரே நேற்று உயர் நீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். அந்த மனுவில் பிரதிவாதியாக சட்ட மாஅதிபர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

## இலங்கைக்கான பயண கட்டுப்பாட்டில் தளர்வு

பிரான்ஸ் அரசு புதிய அறிவிப்பு

இலங்கைக்கான பயண கட்டுப்பாடுகளில் பிரான்ஸ் அரசாங்கம் நேற்று தளர்வுகளை மேற்கொண்டுள்ளது.

முன்னதாக 'அத்தியாவசிய பயணங்களை மாத்திரம்' மேற்கொள்ளுமாறு, இலங்கைக்கான பயண ஆலோசனையில் தமது பிரஜைகளை பிரான்ஸ் அரசாங்கம் கோரியிருந்தது.

தற்போது, அந்த பரிந்துரையை, இலங்கைக்கான பயணத்தில் 'எச்சரிக்கையுடன் இருங்கள்' என்றவாறு தளர்த்தியுள்ளதாக பிரான்ஸ் அறிவித்துள்ளது.

நாட்டில் பெரிய அச்சுறுத்தல் எதுவும் இல்லாததால், தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள அவசர கால நிலை மேலும் நீடிக்கப்படாது



என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவித்த மறுநாளில், பயண ஆலோசனையை பிரான்ஸ் புதுப்பித்துள்ளது.

இலங்கையின் சமீபத்திய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, இலங்கையில் பயணம் செய்யும் போது அதிக எச்சரிக்கையுடன் இருக்குமாறு பிரான்ஸ் அரசாங்கம் தமது பிரஜைகளுக்கு பரிந்துரைத்துள்ளது.

பதிவுசெய்யப்பட்ட சுற்றுலா வாகனங்களுக்கான எரிபொருளை விநியோகிப்பதில் நாடு தற்போது சிறந்த இடத்தில் இருப்பதாகவும், உள்நாட்டுப் பயணத்திற்காக உள்ளூர் பயண முகவர்களுடன் திட்டங்களை மேற்கொள்ளுமாறும் சுற்றுலாப் பயணிகளை பிரான்ஸ் வலியுறுத்தியது.

இந்த புதுப்பிப்பு குறித்து கருத்து தெரிவித்த இலங்கை உள்நாட்டு சுற்றுலா பணியாளர்கள் சங்கம் (SLAITO), இலங்கை சுற்றுலாத் துறையின் மறுமலர்ச்சிக்கு இந்த தளர்வு மிகவும் அவசியமானது என்றும் இதனை தாம் வரவேற்பதாகவும் தெரிவித்துள்ளது.

அமைச்சு பதவி வேண்டாம்:

## நாட்டை கட்டியெழுப்ப SJB ஒத்துழைக்கும்



அமைச்சுப் பதவிகளை ஏற்காமல் நாடாளுமன்ற குழுக்களில் இருந்து கொண்டு நாட்டை கட்டியெழுப்ப ஆதரவு வழங்க காத்திருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று (18) ஊடகவியலாளர்களை சந்தித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இதனைத் தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன. ஐக்கிய மக்கள் சக்தியாக இந்நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்பதற்கு தேவையான உதவிகளை வழங்க தீர்மானித்தோம்.

நாடாளுமன்றத்தை பலப்படுத்தி அதனூடாக செயற்படுவேன் என ஜனாதிபதி கொள்கை பிரகடன உரையில் தெளிவுபடுத்தியுள்ளார்.

எனவே நாட்டை மீட்பதற்கான நடவடிக்கைகளுக்கு நாடாளுமன்ற குழு அமைப்பில் இருந்தவாறு அரசாங்கத்திற்கு உதவ தீர்மானித்துள்ளோம்.

அரசாங்கத்தில் ஆளுநர் பதவிகளைப் பகிர்வதில் ஏற்கனவே பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அமைச்சுகளுக்கு பலரும் முன்மொழியப்படுகின்றனர்.

அமைச்சர் பதவிகளை பெற்று மக்களுக்கு சுமையாக மாற நாங்கள் விரும்பவில்லை.

எனவே, பதவிகளுக்கு பேராசை கொள்ளாமல் பதவிகளை பெறாமல் இந்நாட்டின் வேலைத்திட்டத்திற்கு உதவ தயாராக உள்ளோம்.

சிலர் எமது கட்சியை பிளவுபடுத்த முயற்சித்து வருவதையிட்டு வருந்துகிறோம்.

ஒரு கட்டத்தில் ரணில் விக்ரமசிங்க பிரதமராக பதவியேற்றதும் எம்மில் பெரும்பாலானோர் அவருடன் செல்வதாக கூறப்பட்டது. எனினும் இருவரே சென்றனர்.

இடைக்கால ஜனாதிபதி தேர்தலின் போதும் எமது கட்சியில் ஒருவரேனும் கொள்கைக்கு புறம்பாக வாக்களிக்கவில்லை.

மத்தும பண்டார உள்ளிட்ட 20 பேர் ரணிலுடன் இணையவுள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. அது முற்றிலும் பொய்யானது. அதனை வன்மையாக கண்டிக்கிறோம்.

எவ்வாறாயினும், நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு எமது கட்சி ஆதரவை வழங்குமே தவிர கட்சியிலிருந்து எவரும் செல்லமாட்டார்கள் என்றார்.

### களனிவெளி ரயில்...

அருகில் அத்துமீறிய குடியிருப்பாளர்களுக்கு பாதுகாப்பானதும் பொருத்தமானதுமான இடங்களில் வீடுகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாலபள்ள வீட்டுத்திட்டத்தில் 120 வீடுகள் கொட்டாவ பிரதேசத்தில் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. வீடுகளை இழந்துள்ள தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு சகல வசதிகளையும் கொண்ட வீடுகள் இங்கு நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்படவுள்ளன. அதன் நிர்மாணப் பணிகள் அடுத்த வருட இறுதிக்குள் நிறைவுசெய்யப்படவுள்ளன. இந்தநிலையிலேயே நேற்றைய தினம் அமைச்சர் பந்துல குணவர்தன மேற்படி நிர்மாணப் பணிகளை மேற்பார்வை செய்ததுடன் நிர்மாணப் பணிகளை விரைவுபடுத்துமாறும் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

அமைச்சருடன் ரயில்வே பொது முகாமையாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் நேற்றைய இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

### வெளிநாட்டு நாணயங்களை...

கணக்கில் இந்த வெளிநாட்டு நாணயங்களை வைப்பிலிட முடியும். அத்துடன், உரிமம் பெற்ற வர்த்தக வங்கி அல்லது தேசிய சேமிப்பு வங்கி போன்ற அங்கீகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் விற்பனை செய்ய முடியும். இது தொடர்பான மேலதிக தகவல்களை அந்நிய செலாவணி திணைக்களத்தின் 0112 477 255, 0112 398 511 என்ற தொலைபேசி இலக்கங்களை தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியுமென இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

### சேதனப் பசளை...

அரசாங்கம் அதற்கென 1,600 கோடி ரூபாவை செலவிட எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். 2022 / 23 பெரும்போகத்தில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் போது 70% இரசாயன உரத்தையும் 30% சேதனப் பசளையையும் பயன்படுத்துவதற்கு விவசாய திணைக்களம் மற்றும் விவசாய துறை சார்ந்த நிபுணர்கள் விவசாய அமைச்சுக்கு பரிந்துரை செய்துள்ளனர்.

எதிர்வரும் பெரும்போகத்தில் விவசாயிகளுக்கு 50 கிலோ எடையுள்ள உரமூடையொன்றை 10,000 ரூபாவுக்கு வழங்குவதற்கும் ஒரு ஹெக்டயாருக்கு 125 கிலோ யூரியா உரத்தை பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

### பிரித்தானிய பெண்ணை...

பெற்று வருவதாகவும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

தம்மை இலங்கையில் இருந்து நாடு கடத்துவதற்கு குடிவரவு குடியகல்வு திணைக்களம் எடுத்த தீர்மானத்தை ரத்து செய்ய கோரி கெய்லி பிரேசர் செய்த விண்ணப்பத்தை மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை நிராகரித்தது.

நீதிமன்ற மேன்முறையீட்டு நீதியரசர், குடியகல்வு மற்றும் குடிவரவு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு காரணம் கூறாமல் வீசாவை நிறுத்தவோ அல்லது ரத்து செய்யவோ உரிமை உள்ளதாகவும், உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளாலும் அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். சமூக ஊடகங்களில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் தொடர்பாக உள்ளடக்கத்தை வெளியிட்ட ஸ்கொட்லாந்து சுற்றுலாப் பயணி கெய்லி ஃப்ரேசருக்கு வழங்கப்பட்ட விசாவை நிறுத்த ஒகஸ்ட் 10 ஆம் திகதி குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் முடிவு செய்தது.

ஒகஸ்ட் 15 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கையை விட்டு வெளியேறுமாறும் திணைக்களம் அவருக்கு அறிவித்திருந்தது.

### வைப்பிலிட்ட நபரை...

சந்தேகநபர் நேற்று முன்தினம்(17) குற்றப் புலனாய்வு பிரிவிற்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்த போதிலும், சந்தேகநபர் வருகை தந்திருக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

ஜா எல பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் வங்கி கிளையொன்றிலுள்ள ரதிந்து சேனாரத்ன பிரத்தியேக சேமிப்பு கணக்கில் இந்தப் பணம் வரவு வைக்கப்பட்டுள்ளது.

பணம் வைப்பு செய்யப்பட்ட அதே நாளில், ரதிந்து சேனாரத்னவும் சம்பவம் குறித்து தனியார் வங்கியில் முறைப்பாடு செய்திருந்தார்.

பின்னர், அவர் தனது தனிப்பட்ட பேஸ்புக் பக்கத்தில் இட்டுள்ள பதிவில், தான் இவ்வாறான பொறிகளில் சிக்குவதில்லை எனவும், வர்த்தகம் மற்றும் கணக்கியல் தொடர்பில் தனக்கு கல்வித் தேர்ச்சி இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் போராட்டத்திற்காக தனது தனிப்பட்ட பணத்தை செலவு செய்து வரும் தம்மை இவ்வாறான பொறிகளின் ஊடாக சிக்க வைக்க முடியாது என ரதிந்து சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

### நட்டத்தில் இயங்கும் அரச...

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்பில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை சிக்கலானது எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி 40 வருடங்களாக அந்தத் துறையில் ஈடுபட்டுள்ள தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தி புதிய முதலீடுகள் தொடர்பில் வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்யும்போது, தொழிற்சங்கங்கள் மேற்கொள்ளும் எதிர்ப்புகள் தொடர்பில் தாம் கவலைப்படப் போவதில்லையெனத் தெரிவித்துள்ள அவர், மக்களே எமக்கு முக்கியமானவர்கள் என்றும் நிலைமை சீரடைந்துவருவதுதொடர்பில் மக்கள் உணரத்தொடங்கினால் அவர்கள் இத்தகைய நடவடிக்கைகளில் எம்முடன் இருப்பர் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடு 2018 ஆம் ஆண்டிலிருந்த நிலைமையை மீண்டும் கொண்டு வருவதற்கு குறைந்தது இரண்டு மூன்று வருடங்களாகலாம். 2023 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இலங்கையர்களுக்கு அசௌகரியம் ஏற்பட்டாலும் வருடத்தின் இறுதிப் பகுதியில் அந்த நிலை மாற்றமடையலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### CWC தோட்டக் கம்பனிகளுக்கு...

ஒத்துழைப்பும் அவசியமானதாகுமென தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் தொழிற்சங்கமாக நாம் எதிர்கொள்ளும் சவால்களை பகிரங்கப்படுத்தவில்லை. ஆயினும், நாம் பூதாகரமாக விமர்சிக்கப்பட்டே வருகிறோம் என்றும் ஜீவன்தொண்டமான் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அவர் தனது பதிவில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எமது தொழிற்சங்க நடவடிக்கைகளை தோட்ட கம்பனிகள் அனுமதித்தன. இதனைத் தவிர அவை எவ்வித ஆக்கபூர்வமான திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை. எல்லா திட்டங்களும் அமைச்சின் கீழ் இயங்கிவரும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் மூலமாகவே அமுலாக்கப்பட்டு வந்துள்ளன.

இவ்வாறிருக்க தோட்ட கம்பனிகளே 39,000 வீடுகளை நிர்மாணித்துள்ளதாகவும் இப்போது எழுந்துள்ள உணவு நெருக்கடியை தீர்ப்பதற்கான திட்டங்களை ஆரம்பித்துள்ளதாகவும் பல செய்திகள், கட்டுரைகள் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

அத்தோடு தான் அமைச்சராக இருந்தபோது அரசு மூலம் நிறைவேற்றிய திட்டங்களையும் பெருந்தோட்ட கம்பனிகளே அமுலாக்கின என வெளிப்படுத்தப்படும் விடயமும் இப்போது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக அவர் தனது பதிவில் தெரிவித்துள்ளார்.

### நாட்டின் தேசிய பாதுகாப்பில்...

கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நடத்தப்படும் ஆராய்ச்சி கருத்தரங்கின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு தொடர்பில் காணப்படும் அனைத்து அச்சுறுத்தல்களையும் முகங்கொடுப்பதற்கு இலங்கை அவதானமாக செயற்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் பிரஜைகள் பொருளாதாரம் மற்றும் பிற நிறுவனங்களை பாதுகாப்பதானது அரசாங்கத்தின் திறனாகும்.

ஆயுத மற்றும் போதைப்பொருள் கடத்தல், சட்டவிரோதமான கட்டுப்பாடற்ற மீன்பிடி, புவி வெப்பமடைதல் மற்றும் அதன் விளைவாக கடல் மட்ட உயர்வு, காலநிலை மாற்றம், அதிகரித்த கடல் மாசுபாடு மற்றும் கடல் சுற்றுச்சூழல் தாக்கம் உள்ளிட்ட விடயங்கள் இந்து சமுத்திரத்தில் இலங்கையின் பாதுகாப்பில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்துள்ளார்.

### மேர்வின் சில்வா கைதாகி...

விடுவிக்கப்பட்டுள்ளார். மேர்வின் சில்வாவை எதிர்வரும் நவம்பர் 16ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு மேலதிக மாஜிஸ்திரேட் நீதவான் கேமிந்த பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முற்பகல் அவர் கொழும்பு குற்றத் தடுப்பு விசாரணை திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். அதனையடுத்து நேற்று பிற்பகல் அவர்,நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார். அதன் போதே நீதவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளார். கடந்த 2007 ஆம் ஆண்டு ரூபவாஹினி கூட்டத்தாபன வளவுக்குள் பலவந்தமாக பிரவேசித்துள்ள விவகாரம் தொடர்பில் நீதிபதியின் பணிபுரைக்கமையவே அவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவை குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்துக்கு அழைத்துச் சென்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டதாகவும் அந்த திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### கோழி இறைச்சி, பால்,...

(03 ஆம் பக்கத் தொடர்)

தீர்மானித்துள்ளது.

விலங்கு தீவனங்கள் தட்டுப்பாடு காரணமாக நாட்டில் கோழி இறைச்சி, முட்டை மற்றும் பால் ஆகியவற்றின் விலைகள் தொடர்ந்தும் அதிகரித்து வருவதால் அந்த துறைகளிலீடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் வர்த்தகர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் இவற்றின் விலை அதிகரிப்பு காரணமாக மக்களின் போஷாக்கிலும் மந்தநிலை ஏற்பட்டு வருவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, இவற்றின் உற்பத்திகளும் தற்போது வெகுவாக குறைவடைந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### "தமிழ்க்கடல்" நெல்லை...

(03 ஆம் பக்கத் தொடர்)

இவரது மறைவுக்கு திரை உலக பிரபலங்கள், அரசியல் தலைவர்ளென பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

### பொருளாதார நிலையில்...

கால கடனுடன் செயற்படவேண்டியிருந்தது.

அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானங்கள் காரணமாக தற்போது பொருளாதாரம் சாதகமான நிலைக்குத் திரும்பியுள்ளது. வெளிநாட்டு அந்நிய செலாவணி வங்கிகளுக்கூடாக நாட்டுக்கு கிடைக்கவேண்டும். எமக்கு அன்றாடம் அத்தியாவசிய பொருட்கள் உள்ளிட்டவைகளை கொள்வனவு செய்வதற்கு வெளிநாட்டு நாணயம் கிடைப்பது உறுதியாகியுள்ளது. அதன்படி கடனுடன் செயற்படும் நிலையிலிருந்து நாம் மீளமுடிந்துள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### அமைச்சர் கஞ்சன...

கஞ்சன விஜேசேகர குற்றப் புலனாய்வு பிரிவில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

எரிபொருள் கொள்வனவு, பரிந்துரைகளை மதிப்பீடு செய்தல், முன்பதிவு செய்தவர்களுக்கு எரிபொருள் வழங்காமை, விநியோகஸ்தர்கள் தெரிவு மற்றும் விநியோக முறைமை குறித்து மேற்படி நிறுவனங்களின் நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு கோரி இவ்வாறு முறைப்பாடு பதிவு செய்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

### சுயாதீன கூட்டமைப்பின்...

தலைமையிலான புதிய கூட்டணி எதிர்வரும் 04 ஆம் திகதி அறிவிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கூட்டணியில் 8 சுயாதீன கட்சிகள் ஒன்றிணையும் என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

### வசந்த முதலிகே உட்பட...

அவருக்கு எதிராக இதற்கு முன்னர் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன் நேற்றைய தினம் கொழும்பில் இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்ட பேரணியின் போது ஏற்பட்ட அமைதியின்மையையடுத்து அவர் உள்ளிட்ட நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று கொழும்பு யூனியன் பிளேஸ் பகுதியில் மேற்கொண்ட ஆர்ப்பாட்டப்பேரணியையடுத்து ஏற்பட்ட அமைதியின்மையை கட்டுப்படுத்துவதற்காக பொலிசார் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த் தாரை பிரயோகங்களை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

### முச்சக்கர வண்டிகளின்...

மீற்றருக்கான கட்டணம் இன்று முதல் ரூ. 120 மற்றும் ரூ. 100. ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக முச்சக்கர வண்டி கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு முதல் கிலோ மீற்றருக்கு ரூ. 100 மற்றும் இரண்டாவது கி.மீ. ரூ. 90 என நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது எனினும் மீற்றர் முச்சக்கர வண்டிகள் முதல் கிலோ மீற்றருக்கு ரூ. 120 மற்றும் இரண்டாவது கி.மீ.க்கு ரூ.100 ரூபாய் என கட்டணத்தை உயாத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை வங்கி

BOC

தேசத்தின் வங்கியாளர்

**2023 ஆம் ஆண்டிற்கான பொருட்கள் / வேலைகள் / சேவைகள் மற்றும் ஆலோசனைச் சேவைகளை இலங்கை வங்கியுடன் பதிவு செய்து கொள்ள விரும்பும் நன்மதிப்பு பெற்ற வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்கள் / சேவை வழங்குநர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 2021-2022 ஆண்டுகளுக்காக ஏற்கனவே பதிவு செய்த வழங்குநர்கள் 2023 ஆம் ஆண்டுக்காக மீண்டும் விண்ணப்பிக்க தேவையில்லை.**

## வழங்கல்கள்

### குழு இலக்கம்

**1.0 அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள்**
- 1.1 முத்திரையிடும் இயந்திரங்கள்
- 1.2 பிரதியிடும் இயந்திரம்
- 1.3 நகலெடுத்தல் சிறு துண்டுகளாக்குதல்
- 1.4 நிறுத்தல் தராசுகள்
- 1.5 தொலைநகல் இயந்திரங்கள்
- 1.6 நாணயத்தாள் கட்டும் இயந்திரங்கள்
- 1.7 காசோலை வைப்பு இயந்திரங்கள்
- 1.8 இலத்திரனியல் தட்டச்சு இயந்திரங்கள்
- 1.9 கணக்கு பொறி / கூட்டல் இயந்திரங்கள்
- 1.10 குறியீட்டு இயந்திரங்கள் முத்திரையிடல் இயந்திரங்கள்
- 1.11 நாணயத் தாள்களை எண்ணும் / நாணயக் குற்றிகளை எண்ணும் / காசு வகைப்படுத்தும் இயந்திரங்கள்
- 1.12 கையொப்ப உறுதிப்படுத்தல் / புற ஊதா விளக்குகள்
- 1.13 மல்டி மீடியா புரொஜெக்டர்ஸ்
- 1.14 ஒலி அமைப்புக்கள் / உருவநிலை உரையாடல் அமைப்புக்கள்
- 1.15 அச்சு இயந்திரங்கள்
- 1.16 கமராக்கள் / வெப் கமரா / ட்ரோன் கமராக்கள்
- 1.17 வேறு ஏதேனும் காரியாலய உபகரணங்கள் (மேற்குறிப்பிட்டவை அல்லாமல்)

**2.0 தளபாடங்கள்**
- 2.1 மரத்திலானவை
- 2.2 உருக்கு
- 2.3 அலுமினியம்
- 2.4 சோபாக்கள்
- 2.5 வேறு ஏதேனும் தளபாடங்கள் (மேற்குறிப்பிட்டவை அல்லாமல்)

**3.0 இலத்திரனியல் இயந்திரவியல் & ஏனைய சேவைகள்**
- 3.1 இலத்திரனியல் பொருத்துதல் (நடுத்தர வோல்ட்டேஜ்)
- 3.2 மேலதிகமாக குறைந்தளவிலான வோல்ட்டேஜ் பொருத்துதல்) (பொது முகவரி அமைப்பு பைப் மியூசிக் சிஸ்டம்)
- 3.3 இயந்திரவியல் காற்றோட்டம் / எயார் கண்டிஷனர்
- 3.4 உயர்த்தி / நகரும் படிகள்
- 3.5 ஜெனரேட்டர்
- 3.6 UPS
- 3.7 சூரிய மின் பிறப்பாக்கிகள் (CIDA பதிவானது தேவையில்லை)
- 3.8 நீர்க்குழாய் பொருத்துதல் மற்றும் கழிவுநீர் அகற்றல்
- 3.9 உருக்கு வேலைப்பாடுகள்

**4.0 மின் உபகரணங்கள்/கருவிகள் மற்றும் உதிரிப்பாகங்கள்**
- 4.1 தொலைக்காட்சி
- 4.2 மேசை நிறுத்தி கூரையில் பொருத்தும் சுவர் மின்விசிறிகள் / மின்னழுத்த நிலைப்படுத்திகள்
- 4.3 மின் கம்பி பொருத்தல்கள் மற்றும் பிணைப்புகள்
- 4.4 வேறு வகையான மின்சார உபகரணங்கள் கருவிகள் மற்றும் உதிரிப்பாகங்கள்

**5.0 பாதுகாப்பு உருப்படிகள்**
- 5.1 தீயணைப்பான்களும் மீள் நிரப்பு தீயணைப்பான்களும்
- 5.2 பாதுகாப்பு அபாய ஒலியெழுப்பும் முறைகள்
- 5.3 CCTV (கண்காணிப்பு கமரா) / IP (இணைய நெறிமுறை)
- 5.4 உள்நுழைவுக் கட்டுபாடு அமைப்பு / நேர வருகை அமைப்பு / விரல் அடையாள உபகரணங்கள்
- 5.5 தீ கண்டறியும் / பாதுகாக்கும் கட்டுப்படுத்தும் அமைப்பு

**6.0 பாதுகாப்பு பெட்டகங்கள்**
- 6.1 பிரதான வங்கிப் பெட்டகங்கள்
- 6.2 அடகு பெட்டகங்கள்
- 6.3 காப்பறைக் கதவுகள்
- 6.4 தாழ் பெட்டகங்கள்
- 6.5 நேரப் பூட்டுகள்
- 6.6 தீப்பற்றா கோவைப் பெட்டகங்கள்
- 6.7 பாதுகாப்பு வைப்புப் பெட்டகங்கள்.

**7.0 அடகுத் தரகு**
- 7.1 உரை கற்கள்
- 7.2 தங்க மாதிரி போன்றவை
- 7.3 இலத்திரனியல் அளவைகள்
- 7.4 தங்க மானிகள்

**8.0 கணினி உபகரணங்கள் மற்றும் வன்பொருள் அதனுடன் தொடர்புடைய உருப்படிகள்**
- 8.1 கணினி
- 8.2 மடிக் கணினிகள் நோட்புக்ஸ் ஐ-பேட்ஸ்
- 8.3 தன்னியக்க டெலர் இயந்திரங்கள்
- 8.4 பண வைப்பு இயந்திரங்கள்
- 8.5 பிரிண்டர்ஸ்
- 8.6 ஆவண ஸ்கேனர் / காசோலை ஸ்கேனர் / கடவுச்சீட்டு ஸ்கேனர்
- 8.7 கணினி உபகரணங்கள்
- 8.8 POS முனையங்கள் / மொபைல் POS
- 8.9 டிஜி பேட்ஸ்
- 8.10 பண மீள்சுழற்சி இயந்திரம்
- 8.11 வழங்கிகள்
- 8.12 KIOSK இயந்திரங்கள்
- 8.13 வேறு ஏதேனும் கணினி உபகரணங்கள் மற்றும் வன்பொருட்கள் (மேற் குறிப்பிடப்பட்டவை அல்லாமல்)

**9.0 தகவல் ரொழில்நுட்ப மென்பொருள் அமைப்புக்கள்**
- 9.1 பிரயோக அமைப்பு
- 9.2 தரவு அனுப்பீடு
- 9.3 பாதுகாப்பு தீர்வுகள்
- 9.4 செயற்பாட்டு அமைப்புக்கள்
- 9.5 மென்பொருள் பழுதுபார்த்தல்கள்
- 9.6 தரவுத் தள முகாமைத்துவ மென்பொருட்கள்
- 9.7 வேறு ஏதேனும் கணினி உபகரணங்கள் மற்றும் வன்பொருட்கள் (மேற் குறிப்பிடப்பட்டவை அல்லாமல்)

**10.0 தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் துணைப்பொருட்கள்**
- 10.1 தொலைபேசி
- 10.2 கையடக்க தொலைபேசிகள்
- 10.3 PABX மற்றும் அது தொடர்பான துணைப்பொருட்கள்
- 10.4 அகப்பரப்பு வலையமைப்பு (LAN)
- 10.5 பரந்தளவிலான வலையமைப்பு (WAN)
- 10.6 ரேடியோ செட் (வோக்கி- டோக்கி)
- 10.7 வழிப்படுத்திகள் (Routers)
- 10.8 சுவிட்ச்சஸ்
- 10.9 தரவு தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் துணைபொருட்கள்

**11.0 கணினி பாவனை பொருட்கள்**
- 11.1 அச்சிடும் நாடாக்கள்
- 11.2 ATM CDM பிரிண்டிங் பேப்பர் ரோல்ஸ் (இம்பெக்ட் மற்றும் தேர்மினல் பேப்பர் ரோல்ஸ்)
- 11.3 காந்த நாடா பொதியுறைகள் பிளாஷ் டிரைவ்ஸ்
- 11.4 கணினிகள் மற்றும் பிரதியெடுக்கும் இயந்திரங்களுக்கான காந்த நாடா பொதியுறைகள்
- 11.5 சொடுக்கி வன்தட்டுக்கள் விசைப்பலகைத் தரவு வடங்கள்
- 11.6 வேறு ஏதேனும் கணினிசார் உபகரணங்கள் மற்றும் பாவனைப் பொருட்கள் (மேற் குறிப்பிடப்பட்டவை அல்லாமல்)

**12.0 அச்சிடல் தொடர்பானவை**
- 12.1 படிவங்கள்
- 12.2 NCR படிவங்கள்
- 12.3 தபால் உறைகள்
- 12.4 பதிவேடுகள்
- 12.5 தாங்கி உறைகள்
- 12.6 பிரசுரங்கள்
- 12.7 கணினி படிவங்கள்
- 12.8 சேமிப்பு புத்தகங்கள்
- 12.9 பருவகால வெளியீடுகள், சஞ்சிகைகள்
- 12.10 டிஜிட்டல் பிளக்ஸ் கொறிகேட்டட் போர்ட் பிரிண்டிங்
- 12.11 ஓப்செட் மற்றும் டிஜிட்டல் பேப்பர் / போர்ட் பிரிண்டிங்
- 12.12 இரகசிய குறியீட்டு தாள்கள்
- 12.13 ஏனைய அச்சிடல் விடயங்கள் (மேற்கூறப்பட்டவை தவிர)

**13.0 பாதுகாப்பு அச்சிடல்கள்**
- 13.1 திகதியுடன் கூடிய நேரடி தபால்
- 13.2 FD பற்றுச்சீட்டுக்கள்
- 13.3 ID அட்டைகள்
- 13.4 இலத்திரனியல் அட்டைகள் (கிறெடிட் மற்றும் டெபிட் அட்டைகள்)
- 13.5 கணக்கு கூற்றுகள் (அச்சுத் தரவுடன்)
- 13.6 காசோலை புத்தகங்கள் (தொடர் காசோலை தாள்கள் மற்றும் ஏனைய பாதுகாப்பு ஆவணங்கள்)
- 13.7 பரிசு வவுச்சர்கள் / சேமிப்பு சான்றிதழ்கள்
- 13.8 வேறு ஏதேனும் பாதுகாப்புசார் அச்சிடல்கள் (மேற் குறிப்பிடப்பட்டவை அல்லாமல்)

**14.0 காகிதாதிகளும் எழுதுகருவிகளும்**
- 14.1 காகிதங்கள் (நகலெடுத்தல் தட்டச்சு பூல்ஸ்கெப் ஸ்டிக்கர்ஸ் மற்றும் ஏனையவை)
- 14.2 சகலவிதமான நானாவித பொருட்கள் மற்றும் எழுது கருவிகள் (கோவைகள் மற்றும் பிளாஸ்டிக் போல்டர்ஸ் ETC)
- 14.3 பிளாஸ்டிக் அட்டை உறைகள் (கிறெடிட் / டெபிட் கார்ட்ஸ்)
- 14.4 வேறு ஏதேனும் காரியாலய உபகரண வகைகள் (மேற் குறிப்பிட்டவை அல்லாமல்)

**15.0 துணி மற்றும் தொடர்புடைய பொருட்கள்**
- 15.1 துணி
- 15.2 சீருடைத் துணி வகை
- 15.3 பாதணிகள்
- 15.4 வேறு ஏதேனும் துணி வகைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் (மேற் குறிப்பிட்டவை அல்லாமல்)

**16.0 பாராட்டு, விளம்பரப் பொருட்கள் மற்றும் பரிசுப் பொருள் வகைகள்**
- 16.1 டீசேர்ட் மற்றும் தொப்பிகள்
- 16.2 குடைகள்
- 16.3 பாடசாலை மற்றும் பயணப் பைகள்
- 16.4 கோப்பைகள்
- 16.5 உண்டியல்கள் விளையாட்டுப் பொருட்கள் சைக்கிள்கள்
- 16.6 புத்தகங்கள் பொருட்கள் தனித்துவப்படுத்தப்பட்ட பேனைகள்
- 16.7 மணிக் கூடுகள், கைக்கடிகாரங்கள்
- 16.8 கல்வி மற்றும் நிறுவனம்சார் பரிசுகள்.
- 16.9 இலத்திரனியல் மற்றும் தொழில்நுட்ப பரிசுகள்
- 16.10 ஏனையவை

**17.0 பாதுகாப்புச் சேவை**
- 17.1 ஆயுதம் தரித்த சேவை
- 17.2 ஆயுதம் தரிக்காத சேவை

**18.0 ஒப்பந்தக்காரர்கள்**
- 18.1 கட்டட நிர்மாணம்
- 18.2 திருத்துதல் மற்றும் சீரமைத்தல்
- 18.3 வடிவமைத்தல் மற்றும் கட்டுமான ஒப்பந்தக்காரர்கள்
- 18.4 அலுமினிய வேலைகள் பூரணப்படுத்தல்கள்
- 18.5 தரை / சுவர் / கூரை பூரணப்படுத்தல்கள்
- 18.6 மரவேலை மற்றும் பொருத்துதல்
- 18.7 நீர்க் காப்புகள்
- 18.8 தோட்டக் கட்டமைப்பு
- 18.9 குவித்தல்
- 18.10 புவியியல் / மண் மதிப்பீடு (CIDA பதிவு தேவையில்லை)
- 18.11 பாரமற்ற இரும்பு வேலைகள் (பூசுதல்கள் / கூரை வேலைகள் / கைப்பிடிச்சட்டம்)

**19.0 தகவல் தொழில்நுட்ப அமைப்புகள் / உபகரணப் பழுதுபார்த்தல் சேவை மற்றும் பராமரிப்பு**

**20.0 பெயர்ப் பலகைகள் மற்றும் பதாதைகள் ஒளிப் பதாதைகள்**
LED பலகைகள் பதாதைகள் விளம்பரப் பலகைகள் / சட்டக அமைப்பு கோபுரம் கிளை அலங்காரம் மற்றும் வர்த்தக விற்பனை விதானம் / கொடிக்கம்பங்கள் விரிதல்கள், X-வடிவ நிறுத்தல்கள் மின்குமிழ் பெட்டிகள், அட்டைகள் பதாதைகள் மற்றும் கொடிகள். கொடிக் கம்பங்கள் மற்றும் தளங்கள் முக்கோண கொடிகள் மற்றும் LED சுவர்கள் சுழலும் பதாதைகள் 3 ஆக மடிக்கும் அட்டைகள் பின்னணி திரைச்சீலைகள்.

**21.0 பூமரங்கள் வழங்குதல் பூச்சட்டிகள் / சாடிகள் மற்றும் தோட்டத்தை பராமரித்தல்**

**22.0 வாகனங்களுக்கான டயர்கள் டியூப்கள் மற்றும் பெற்றரிகள்**

**23.0 புத்தம் புதிய மோட்டார் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை வழங்குதல்**

**24.0 சேவைகள்**
- 24.1 ஏலமிடல்
- 24.2 தூய்மைப்படுத்தல்
- 24.3 பீடைக் கட்டுப்பாட்டு சேவைகள்
- 24.4 விரைவு அஞ்சல் பணி
- 24.5 தீர்வையாக்கல் மற்றும் முன் அனுப்புகை
- 24.6 அழைப்பு நிலையச் சேவைகள்
- 24.7 வாகனச் சேவைகள்
- 24.8 சலவை
- 24.9 உணவு விநியோகச் சேவைகள்
- 24.10 பயனற்ற அப்புறப்படுத்தப்பட்ட காகிதாதிகள் மற்றும் ஆவணங்களை அகற்றுதல்
- 24.11 தளபாடங்கள், தற்காலிக கூடாரங்கள் மற்றும் கொட்டில்களை வாடகைக்கு பெறல்
- 24.12 வாகனங்கள் மற்றும் வாகனச் சேவையை வாடகைக்கு அமர்த்துதல்
- 24.13 இரும்புப் பெட்டகங்கள், அலுவலக தளபாட உபகரணங்கள் என்பவற்றை இடமாற்றல்
- 24.14 நீர் வழங்கிகள் மற்றும் குடிப்பதற்கான தண்ணீர் போத்தல்களை வழங்கல்
- 24.15 விளம்பரம்
- 24.16 லெமினேட்டிங் / ஸ்கேனிங்
- 24.17 கடன் வசூலிக்கும் நிறுவனம்
- 24.18 இலத்திரனியற் கழிவுகளை அகற்றுதல்
- 24.19 நிழற்பட மற்றும் நிகழ்பட சேவை
- 24.20 ஏனைய வகைச் சேவைகள்.

**25.0 திருத்தல்கள் மற்றும் பராமரித்தல்கள்**
- 25.1 தளபாடம்
- 25.2 மோட்டார் வாகனங்கள்
- 25.3 மின் பிறப்பாக்கிகள்
- 25.4 மின்னுயர்த்திகள்
- 25.5 வளிச் சீராக்கிகள்
- 25.6 UPS
- 25.7 அலுவலக இயந்திரங்கள் / அலுவலக உபகரணங்கள் மற்றும் இலத்திரனியல் அலுவலக உபகரணங்கள்
- 25.8 மின் மற்றும் நிலைப்படுத்திகள்
- 25.9 துப்பாக்கி / பாதுகாப்பு
- 25.10 குளிர்சாதனப் பெட்டி
- 25.11 CCTV
- 25.12 ஏனைய வகையிலான பழுதுபார்த்தல்கள் (மேற் குறிப்பிட்ட பழுதுபார்த்தல்கள் அல்லாமல்)

**26.0 ஆலோசனைச் சேவைகள்**
- 26.1 கட்டட நிர்மாணம்
- 26.2 கட்டமைப்பு பொறியியல்
- 26.3 மின் இயந்திரப் பொறியியல்
- 26.4 கூட்டமைப்பு ஆலோசனைச் சேவைகள்
- 26.5 பசுமை ஆலோசகர்கள்
- 26.6 நில அளவை
- 26.7 வலுசக்தி முகாமை
- 26.8 உள்ளக அலங்காரம்
- 26.9 புவிசார் பொறியியல்
- 26.10 தீ மற்றும் பாதுகாப்பு
- 26.11 தொகைக் கணக்கீடு
- 26.12 வரைதல்கள்
- 26.13 கட்டுமாண செயற்திட்ட முகாமைத்துவம் (தனிப்பட்ட)

**பதிவுகளை மேற்கொள்வதற்காக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் பின்வரும் எழுத்துமூல ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.**
1. வர்த்தக பெயர்களின் கீழ் பதிவு .வர்த்தகப் பதிவு 2020.01.01 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
2. கட்டட ஒப்பந்தக்காரர்கள் மற்றும் இலத்திரனியல் இயந்திரவியல் மற்றும் ஏனைய சேவைகளுக்கு செல்லுபடியாகும் CIDA பதிவு இருத்தல் வேண்டும். (முன்னதாக ICTAD பதிவு)
3. இலத்திரனியல் கழிவுகளை (24,18) அகற்றும் பிரிவின் கீழ் பதிய விரும்பும் வழங்குநர்கள் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் குறிப்பிட்ட பிரிவின் கீழ் பதியப்பட்டிருக்க வேண்டியதுடன் புதிய பதிவின் விபரங்கள் இத்துடன் இணைக்கப்படவும் வேண்டும்.
4. அரசாங்கத் திணைக்களங்கள் நியதிச் சட்ட சபைகள் மற்றும் பிரசித்தி பெற்ற தனியார் நிறுவனங்களிடமிருந்து இதனுடன் தொடர்புடைய வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்கான ஆணைகளை ஏற்றுக்கொண்டு அவற்றை திருப்திகரமாக நிறைவேற்றியிருத்தல், ஏற்றுக்கொள்ளக் கூடிய கொள்வனவு ஆணைகளின் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். (பதிவிற்கு ஆகக் குறைந்தது மூன்று வருட அனுபவம் அவசியம்)
5. குறித்த ஆணைகளை நிறைவேற்றுவதற்கான நிதி மற்றும் ஏனைய வளங்களை பெற்றிருத்தல் வேண்டும் (அதனை கணக்காய்வு நிதிக் கூற்றுக்கள் மற்றும் வங்கி அறிக்கைகள் ஊடாக நிரூபித்தல் வேண்டும்)

**நிபந்தனைகள்:**
1. **2021-2022 ஆண்டுகளுக்காக ஏற்கனவே பதிவு செய்த வழங்குநர்களின் பதிவானது 31.12.2023 வரை செல்லுபடியாகும் என்பதால் அவர்கள் மீண்டும் பதிவினை மேற்கொள்ளத் தேவையில்லை.**
2. இயந்திரங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்களை பழுதுபார்க்கும் / சீரமைக்கும் வழங்குநர்கள் பழுதுபார்த்தல் தேவைகளின் போது பயன்படுத்தக் கூடியவாறான சொந்த பட்டறைகளை கொண்டிருக்க வேண்டும்.
3. விலைகூறல்கள் கோரப்படும் போது உடனடியாக விலைகூறத் தவறும் அல்லது குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களுக்கு அல்லது மாதிரிகளுக்கு அமைவாக அல்லது கொள்முதல் ஆணையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளவாறான பொருட்கள் / சேவைகளை நேரத்தோடு வழங்கத் தவறும் அல்லது தரங்குறைந்த பொருட்களை வழங்கும் விநியோகஸ்தர்கள் பதிவேட்டிலிருந்து அகற்றப்படுவர்.
4. உருப்படிகள் / சேவை வழங்கல்களுக்கான விலைகள் பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர் பட்டியலில் இருந்தே கோரப்படும். எவ்வாறாயினும் தேவைப்படும் போது வேறு மூலங்களிலிருந்தும் புதிய வழங்குநர்களை பதிவு செய்யும் உரிமையும் வங்கிக்கு உண்டு.
5. ஒரு தொகுதிக்கு மேலதிகமாக உருப்படிகளை பதிவு செய்ய விரும்பினால் ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ. 5000 செலுத்தி (மீளப் பெற முடியாத தொகையாக) தனித் தனி படிவங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
6. விண்ணப்பதாரிகள் / உரிமையாளர்கள் / பங்குதாரர்கள் நிறுவனங்களின் பணிப்பாளர்கள் ஆகியோர் வங்கி ஊழியரின் மனைவி அல்லது பிள்ளைகளாக இருப்பின் அவ்வாறான விண்ணப்பதாரிகள் / வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்கள் / சேவை வழங்குநர்கள் மற்றும் ஆலோசனை சேவை வழங்குநர்கள் ஆகியோர் பதிவிற்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்களாவர்.
7. எவ்வித காரணங்களும் தெளிவுப்படுத்தல்களும் இல்லாமல் எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்றுக்கொள்ளும் மற்றும் நிராகரிக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.
8. இலங்கை வங்கியின் போக்குவரத்துப் பிரிவு மதிப்பீட்டு அறிக்கைக்கு அமைவாகவே மோட்டார் வாகன பழுதுபார்ப்பு மற்றும் வாகனச் சேவை வழங்குநர்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

**விண்ணப்ப படிவங்கள் பரிந்துரைக்கப்பட்ட படிவத் தொகுதிகளின் மூலமே சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவற்றை கீழ் காணப்படும் காரியாலயங்களில் மீளளிக்கப்படாத தொகையான ரூ.5000 ஐ செலுத்தி ஒவ்வொரு தொகுதி உருப்படிக்குமான விண்ணப்ப படிவத் தொகுதியினை பெற்றுக் கொள்ளலாம். எதிர்காலத்தில் வாய்ப்புக்களை கோரும் விண்ணப்பதாரிகள் இவ்விளம்பரத்துக்கு அமைவாக சேவைகள் மற்றும் விண்ணப்பிக்கும் வகைக்கான இலக்கத்தினையும் குறிப்பிட்டு முகவரி அச்சிடப்பட்ட அஞ்சல் தாளில் கோரிக்கை கடிதம் ஒன்றினை சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்ப படிவங்களை இலவசமாக பார்வையிடலாம்.**

**விண்ணப்பங்களை பின்வரும் மாகாண அலுவலகங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.**
- **மத்திய மாகாண அலுவலகம்** “சீபாங்க் ஹவுஸ்” இல.88 தலதா வீதி கண்டி
- **வடக்கு மாகாண அலுவலகம்** இல.476 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.
- **வடமத்திய மாகாண அலுவலகம்** அநுராதபுரம்
- **சப்ரகமுவ மாகாண அலுவலகம்** இல.227 கொழும்பு வீதி இரத்தினபுரி
- **மேல் மாகாணம் தெற்கு அலுவலகம்** இல.175 ஹய்லெவல் வீதி நுகேகொடை
- **கிழக்கு மாகாண அலுவலகம்** இல.445 பிரதான வீதி, திருகோணமலை
- **வடமேல் மாகாண அலுவலகம்** இல.18 மிஹிந்து மாவத்தை, குருநாகல்
- **தென் மாகாண அலுவலகம்** இல.11 குமாரதுங்க மாவத்தை, மாத்தறை
- **ஊவா மாகாண அலுவலகம்** இல்.17 ஹில் டிறைவ் கெப்பட்டிபொல வீதி, பதுளை
- **மேல் மாகாண வடக்கு அலுவலகம்** 2 ஆம் மற்றும் 8 வது மாடி, இலங்கை வங்கி மேர்ச்சன்ட் கோபுரம் புனித மைக்கல் வீதி கொழும்பு 03

பணத்தினை ஏற்றுக்கொண்டு விண்ணப்பப் படிவங்களை வழங்குதல்: 25.10.2022 ஆம் திகதி வரை வங்கி வேலைநாட்களில் காலை 9 மணி முதல் பி.ப 2.00 மணி வரை செல்லுபடியாகும்.
முறையாக பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 31.10.2022 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
அனைத்து விண்ணப்பபடிவங்களும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“2023 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்கள் / சேவை வழங்குநர்கள் / ஆலோசனைச் சேவை வழங்குநர்களுக்கான பதிவு”** எனக் குறிப்பிடப்பட்டு இணைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் பிரதான முகாமையாளர் சொத்துக்கள் சேகரிப்பும் பகுதிக்கு பதிவுத் தபாலில் கீழ் காணும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

**பிரதான முகாமையாளர்**
**சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி**
14 ஆவது மாடி, இலங்கை வங்கி தலைமையகம்,
“இலங்கை வங்கிச் சதுக்கம்”, இலக்கம் 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
தொலைபேசி : 011 2204233, 2204272, 2204260 நேரடி : 2544310, 2430268 தொலைநகல் : 2449629
மின்னஞ்சல் : procurement2@boc.lk

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# ஹஜ், உம்ரா கடமைகளில்; இறை திருப்தியே பிரதான குறிக்கோளாக அமைதல் வேண்டும்



## ஹஜ் முகவர் சங்க உப செயலாளர் எம்.ஐ.எம். நௌபர்

ஹஜ், உம்ரா கடமைகளில் இறை திருப்தியே பிரதான நோக்கமாக அமைவதன் மூலம் கடமைகளை எவ்வித தடங்களுமின்றி சிறப்பாக மேற்கொள்ள முடியுமென இலங்கை ஹஜ் முகவர் சங்க உப செயலாளரும் 'ஏசியன் டிரவல்ஸ்' முகவர் சங்க தலைவருமான **அல்ஹாஜ் எம்.ஐ.எம். நௌபர்** தெரிவிக்கிறார். **தினகரன் பத்திரிகைக்கு** வழங்கிய விசேட நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவிக்கிறார்.

நேர் காணல்
எம்.எப்.எம். அஜ்வாத் பாஸி

**கேள்வி: இம்முறை ஹஜ் கிரியைகளுக்காக இலங்கையிலிருந்து சென்ற ஹாஜிகளுக்கு ஹஜ் முகவர் சங்கம் சிறப்பான சேவைகளை முன்னெடுத்ததாக தெரிவிக்கப்படுகிறதே... உண்மையா?**

**பதில்:** ஆம், முடிந்தவரை அனைத்து முகவர் சங்கங்களும் திருப்தியான சேவைகளை இம்முறை ஹாஜிகளுக்கு வழங்கினார்கள். இதற்கு வாய்ப்பளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ஹ தலைமையிலான இன்றைய அரசாங்கத்தின் கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மற்றும் இம்முறை ஹஜ்ஜிக்கு பொறுப்பான அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தலைமையிலான குழுவினர் உட்பட முஸ்லிம் சமய கலாசார திணைக்கள பணிப்பாளர் இப்றாஹிம் அன்ஸார் மற்றும் கலாசார திணைக்கள அதிகாரிகள் உட்பட மக்கா மதீனாவில் எமது ஹாஜிகளுக்கு சிறப்பான சேவைகளை வழங்கிய சவூதி அரசாங்கத்திற்கும் முதலில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கேள்வி: ஹஜ், உம்ரா முகவர் அமைப்பை நீங்கள் உருவாக்குவதற்கு காரணமென்ன? எப்போது முதல் தடவையாக ஆரம்பித்தீர்கள்?**

**பதில்:** 2004ஆம் ஆண்டு அல் ஹப்ஸா டிரவல்ஸ் என்ற பெயரில் ஆரம்பித்து, ஹஜ், உம்ரா கடமைகளை நிறைவேற்ற இலங்கை ஹாஜிகளை இன்னொரு முகவர் நிலையத்துடன் இணைந்து முதலில் அழைத்துச் சென்றேன்.





அதன் மூலம் பெற்ற அனுபவங்களைக் கொண்டே இன்று 'ஏசியன் டிரவல்ஸ்' என்ற பெயரில் தனியாக முகவர் அமைப்பொன்றை அல்ஹாஜ் ஜெஸீல், அல்ஹாஜ் உவைம் மற்றும் அல்ஹாஜ் பிஷ்ர் ஆகியோரின் பங்களிப்புடன் ஆரம்பித்து இந்தப்பணியை முன்னெடுத்து வருகிறேன். அதுமாத்திரமன்றி IATA வின் அங்கீகாரத்துடன் எமது நிறுவனம் இயங்கி வருவதோடு வெளிநாடுகளுக்கு பயணிப்போருக்கான விமான டிக்கட்களையும் எமது தாபனம் ஏற்பாடு செய்து வருவதையும் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

**கேள்வி: ஹஜ், உம்ரா கடமைகளுக்காக முதல் தடவையாக ஹாஜிகளை அழைத்துச் செல்லும்போது பல சிரமங்கள் ஏற்பட்ட அனுபவங்கள் இருக்கிறதா? அல்லது பெற்ற அனுபவத்தைக்கொண்டா இதனை சிறந்த முறையில் தடையின்றி முன்னெடுக்கிறீர்கள்?**

**பதில்:** உண்மையில் இந்த விடயத்தில் நான் குறைந்த அனுபவம் பெற்றவனாக இருந்தாலும் இறைவன் எனக்கு சவூதி அரேபியாவிலுள்ள முக்கியஸ்தர் ஒருவருடனான நட்பை ஏற்படுத்தினான். அவர்தான் மதீனா புனிதத்தலத்துக்கு பொறுப்பாளராக இருந்த ஷெய்க் அப்துல் வாஹித் கத்தாப் என்ற அரபியர். எனக்கு மிக அறிமுகமானார். அவரின் ஆலோசனையும் வழிகாட்டலும் எனக்கு கிடைத்தது. இவருடன் நான் சுமார் 28 வருடங்களாக பழகி வருகிறேன். இவர் இன்று மக்கா மதீனா புனிதஸ் தலங்களின் பிரதம ஆலோசகராக பணியாற்றி வருகிறார். இற்றை வரை அவர் என்னுடன் நெருங்கிய தொடர்பில் உள்ளார். இவரின் இந்த தொடர்பினாலே நான் இன்று எவ்வித தடையுமின்றி எனது ஹஜ், உம்ரா கடமைக்கு அழைத்துச் செல்வோரை சிறப்பாக வழிநடாத்தி வருகிறேன். அல்ஹம்துலில்லாஹ்.

**கேள்வி: உங்களுடைய முகவர் அமைப்பில் செல்வோர் பேருவளை பிரதேசத்தை மாத்திரம் வரையறுத்தவர்களாக இருக்க வேண்டுமா? என்ற வரையறை ஏதாவது உள்ளதா?**

**பதில்:** முகவர் நிலையத்தை ஆரம்பித்தபோது பேருவளை பிரதேசத்தை மையமாக வைத்துத்துத் தான் வருவோரை ஹஜ், உம்ராவுக்கு அழைத்துச் சென்றேன். காலப்போக்கில் இதனை விரிவுபடுத்தளானேன். காரணம் எமது குறுப்பில் மக்காவுக்கு செல்வோர் எமது கவனிப்புகளை நல்ல முறையில் விளங்கினதன் காரணமாக அவர்கள் எங்கள் முகவர் அமைப்பை பற்றி எல்லோரிடமும் உண்மையை கூறினர். நாங்கள் அவர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் முடியுமானளவு நிறைவேற்றினோம். அதனால் எமது 'ஏசியன் டிரவல்ஸ்' அமைப்புக்கு சமூகத்தில் வரவேற்பு இருந்தது. இன்றும் வரவேற்பு இருக்கிறது.



**கேள்வி: ஒரு முகவர் அமைப்பை வழி நடாத்துவது என்பது இலேசான காரியமல்ல? அதிலும் மக்களின் வரவேற்பை பெறுவது என்பது அலாதியானது? நீங்கள் வழங்குகின்ற சேவைக்காக ஏதாவது விருதுகள் பெற்றதுண்டா?**

**பதில்:** ஹஜ், உம்ரா கடமைகளுக்காக மக்களை அழைத்துச் செல்வது இலேசான காரியமல்ல. இலங்கையிலிருந்து அவர்கள் புறப்பட்டது முதல் வரும் வரை அவர்களுக்கு தேவையான பாதுகாப்புடனான தங்குமிட வசதிகள், கடமைகளை பொறுப்புடன் நிறைவேற்ற வழிகாட்டலுடனான அவர்களை வழிகாட்டல், நேரத்துக்கு நேரம் உணவு வழங்கல் போன்றவற்றை சரியான முறையில் செய்து கொடுப்பது இலேசான விடயமல்ல. அந்த சேவையை நாம் சிறப்பாக முன்னெடுத்து வருகிறோம். எமது முகவர் அமைப்பில் பல வருடகாலம் அனுபவமுள்ள மௌலவி அப்துல் ரஹ்மான் ஹாபிஸ் மற்றும் மௌலவி மஜீத் ஆகியோர் எமது வழிகாட்டிகளாக செல்கின்றமை விசேட அம்சமாகும்.

**கேள்வி: ஹஜ் முகவர்கள் சங்க கமிட்டியில் நீங்களும் இருக்கின்றீர்களா? அதன் தலைவர் யார்? அதன் செயற்பாடுகள் தொடர்பில் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

**பதில்:** உண்மையில் இலங்கையிலுள்ள பதிவு செய்யப்பட்ட அனைத்து ஹஜ் முகவர் அமைப்புகளும் அதில் அங்கத்துவம் பெற்றுள்ளன. இதன் நிர்வாக குழுவின் தலைவராக அமானத் ஹஜ் குழு தலைவர் மொஹமட் ஹிஷாம் கவுஸ் அவர்கள் செயற்படுகிறார். இந்த குழுவின் உப செயலாளராக நானும் இருந்து வருகிறேன். இந்த அமைப்பு இலங்கை ஹாஜிகளுக்கு சிறந்த சேவையை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் முழு மூச்சாக இயங்கி வருவதோடு தேவையான விடயங்களை கலாசார அமைச்சு மற்றும் அரச தரப்புகளுடன் பேச்சுவார்த்தை செய்து பெற்றுக்கொடுக்கிறோம்.



**கேள்வி: இம்முறை ஹஜ் கடமைக்கு இலங்கையர்களை அழைத்துச் செல்ல முன்னர் சவூதி அரேபியாவிற்கு திடீரென ஹஜ் முகவர் சங்கத்தலைவருடன் நீங்களும் சென்று பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதாக கேள்விப்பட்டேன். இதன் உண்மை தன்மை என்ன? அப்படி சென்றீர்களா?**

**பதில்:** ஆம், நானும் எமது முகவர் சங்கத்தலைவருமான ஹிசாம் கவுஸும் மக்காவுக்கு சென்றோம். அங்கு சென்று எமது இலங்கை ஹாஜிகள் நலன் தொடர்பில் சம்பந்தப்பட்டோருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டோம். ஹாஜிகளின் நலன் தொடர்பாகவே இந்த சந்திப்புகள் அமைந்தமை விசேட அம்சமாகும்.

**கேள்வி: மக்கா சென்று யாரை சந்தித்தீர்கள்?**

**பதில்:** மக்கா சென்ற நாம் சவூதி அரேபிய ஹஜ் உம்ராவுக்கு பொறுப்பான பிரதி அமைச்சர் அஷ்ஷெய்க் மொஹமட் அப்துல் ரஹ்மான் பீஜாவி மற்றும் ஜித்தாவிலுள்ள ஹஜ் அமைச்சக பொது முகாமையாளர் ஷெய்க் பாஹா யூசுப் ஹலவானி மற்றும் அமைச்சகத்தில் பணியாற்றும் ஷெய்க் பரீட் தாஹா மன்தர் ஆகியோரை சந்தித்தோம். இவர்களை சந்தித்து ஹஜ் ஏற்பாடுகள் மற்றும் இலங்கை ஹாஜிகளி'ன் விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடினோம். அதேபோல் இம்முறை இலங்கையிலிருந்து சென்ற அனைத்து ஹாஜிகளுக்கும் மக்கா ஹஜ் அமைச்சகத்தினால் நல்ல முறையில் சேவைகள் வழங்கப்பட்டதை நாம் குறிப்பிட்டே ஆக வேண்டும். அதனால் எமது சங்க உறுப்பினர்கள், ஹாஜிகள் சகிதம் சவூதி பிரமுகர்களை தனித்தனியே சந்தித்து அவர்களை கௌரவிக்குமுகமாக ஞாபகசின்னங்களை வழங்கி கௌரவித்தோம்.



**கேள்வி: ஹஜ் முகவர்கள் சங்கம் இலங்கையிலிருந்து செல்கின்ற ஹாஜிகளுக்கு என்ன செய்கிறது என சிலர் கேட்கின்றனர்? இது தொடர்பில் ஹஜ் முகவர்கள் சங்க தலைவர் ஹிசாம் கவுஸிடம் கேட்டபோது....?**

**பதில்:** "இலங்கை ஹாஜிகளுக்கு திருப்தியான சேவையை வழங்குவதே எமது சங்கத்தின் பிரதான நோக்கம் என்பதை நான் முதலில் கூறி வைக்க விரும்புகிறேன். இம்முறை நாம் இலங்கையிலிருந்து ஹஜ்ஜாஜிகளை அழைத்துச் செல்வதா? இல்லையா என்ற முடிவில் இருந்தோம். காரணம் நாடு இருந்த நிலை. அதிலும் கூடுதல் கட்டணத்தை செலுத்தியே இம்முறை ஹஜ் கடமையை மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்பட்டது. இது தொடர்பாக நாம் முதலில் அரச ஹஜ் குழுவுக்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், முஷர்ரப், பைஸல் காஸிம், மர்ஜான் பளீல், அரச ஹஜ் குழுத் தலைவர் அஹ்கம் உவைஸ் ஆகியோரை சந்தித்து ஹஜ் தொடர்பாக பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டோம். பின்னர் அரச தரப்பும் நாமும் நல்ல முடிவுக்கு வந்து, இலங்கை ஹாஜிகளுக்கு முடியுமான சிறந்த சேவையை பெற்றுக்கொடுக்க உதவி ஒத்தாசைகளை வழங்குமாறு எம்மை கேட்டுக்கொண்டதற்கிணங்க இம்முறை சிறப்பாக ஹாஜிகளை மக்கா நகருக்கு அழைத்துச் செல்ல முடிந்தது. அதிலும் விசேடமாக கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பல வழிகளிலும் எமக்கு ஆலோசனைகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்கியமைக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

அதிலும் விசேடமாக வெளிநாட்டு கடவுச்சீட்டை பெற்றவர்களுக்கும் ஹஜ் கடமையை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை சவூதி அரேபிய ஹஜ் அமைச்சகத்தை தொடர்பு கொண்டு அவர்கள் மூலமாக இலங்கையிலுள்ள சவூதி அரேபிய. தூதரகத்துடன் தொடர்பை ஏற்படுத்தி அதனூடாக எமது கலாசார திணைக்கள பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளச் செய்து அவர்களுக்கும் தேவையான விசாவை பெற்றுக்கொடுத்து இம்முறை ஹஜ் கடமையை நிறைவேற்ற வழிவகை செய்தோம் என்பதை சந்தோசமாக தெரிவித்துக்கொள்கிறோம்" என்றார்.

**கேள்வி: இம்முறை இலங்கையிலிருந்து எத்தனை ஹாஜிகள் புனித மக்கமா நகருக்கு சென்றார்கள்?**

**பதில்:** இலங்கையிலிருந்து 1000க்கும் மேற்பட்ட ஹாஜிகள் புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற விண்ணப்பித்திருந்தாலும் அதிக கட்டணம் காரணமாக சுமார் 968 பேரே இம்முறை ஹஜ்ஜிக்கு சென்றார்கள். இவர்கள் அனைவருக்கும் இலங்கை ஹஜ் முகவர்கள் சங்கம் அரசாங்கத்தின் உதவியுடன் தேவையான ஒத்தாசைகளை வழங்கினோம்.

**கேள்வி: தொடர்ந்தும் உங்களது 'ஏசியன் டிரவல்ஸ்' ஏற்பாட்டில் எதிர்வரும் காலங்களில் உம்ரா பெக்கேஜ்களை முன்னெடுக்கவுள்ளீர்களா?**

**பதில்:** ஆம், எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் உம்ரா கடமையை மேற்கொள்ள எமது குறுப்பில் பல ஹாஜிகள் பெயர்களை பதிவு செய்துள்ளார்கள். தொடர்ந்தும் நாம் முஸ்லிம் நாடுகளில் காணப்படுகின்ற முஸ்லிம்களின் வரலாற்று பிரசித்திபெற்ற கலாசார இடங்களையும் தரிசிப்பதற்கான விசேட பெக்கேஜையும் எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம். விசேடமாக தேவையான போது சவூதி அரேபிய பொறுப்பாளர்களுடன் தொடர்பை ஏற்படுத்தவும், அவ்வப்போது தேவைப்படுகின்ற கடிதங்களை அரபு மொழியில் மொழிபெயர்த்து ஒத்துழைத்த இலங்கையிலுள்ள சவூதி அரேபிய தூதரகத்தில் பணியாற்றும் ஷெய்க் ரிழ்வான் ஸஹீத் அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறுகிறேன். **அனைவருக்கும் வல்ல நாயன் அருள்பாளிப்பானாக.**



# புலமைக் கதிர்

## தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான



திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I

1 மணித்தியாலம்

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. 

i.  ii.  iii. 

2. 

i.  ii.  iii. 

3. 12, 13, 8, 9, 4, …?......
i. 5 ii. 7 iii. 8

4. உப்பு – கடல் எனில் தங்கம் -
i. ஆறு ii. சுரங்கம் iii. மலை

5. மீனாட்சி தன்னிடமுள்ள பணத்தின் ஐந்து மடங்குடன் ரூபாய் 10.00 கூட்டினால் கார்த்திகாவிடம் உள்ள பணத்தொகையான ரூபாய் 70.00க்கு சமனாகின்றது. எனவே மீனாட்சியிடம் இருந்த பணத்தொகை எவ்வளவு?
i. ரூபாய் 12.00 ii. ரூபாய் 15.00 iii. ரூபாய் 10.00

6. ஒரு மைதானத்தின் நீளம் 80m ஆகும். அதன் அகலம் நீளத்தின் அரைவாசியாகும். தரன் அந்த மைதானத்தை சுற்றி இரண்டு தடவை ஓடினால் அவன் ஓடிய மொத்த தூரம் எவ்வளவு?
i. 120m ii. **480 m** iii. 180m

7. 7 ஆடுகள் 7 சாக்குப்புல்லை 7 நாட்களில் சாப்பிடுகின்றன. எனவே ஒரு ஆடு ஒரு சாக்குப்புல்லை எத்தனை நாட்களில் சாப்பிடும்
i. 1 நாளில் ii. 49 நாட்களில் iii. 7 நாட்களில்

8. 
இவ்வுருவில் இருக்கும் செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?
i. 4 ii. 6 iii. 8

9. 2022 இவ்வருடத்திலுள்ள நாட்களின் எண்ணிக்கை யாது?
i. **366** ii. **365** iii. **362**

10. 20ம் நூற்றாண்டில் ஏழாம் தசாப்தத்திற்குரிய ஆண்டானது?
i. 1967 ii. 2070 iii. 1978

11. ரூபாய் 100 ஆக்குவதற்கு தேவையான ஆகக்கூடிய காசுத்தாள்கள் எத்தனை?
i. 10 ii. 5 iii. 2

12. ஆயிரத்தினிடத்தில் மட்டும் இலக்கம் மூன்று உள்ள எண் எது?
i. 3330 ii. 3245 iii. 1345

13. 






i. 30 ii. 35 iii. 45

14. **50 + | 10 ✹ 4 | = 90**
✹ இந்தக் குறியீடு காட்டும் கணித செய்கையானது
i. + ii. X iii. –

15. 






i. 8 ii. 16 iii. 20

**&. 120.00** 
**&. 100.00** 
**&. 40.00** 

**மேலே கொடுக்கப்பட்ட தகவலை அடிப்படையாகக் கொண்டு கீழே வினவப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்குக.**

16. மாம்பழம் ஒன்றின் விலை யாது?
i. ரூபாய் 20.00 ii. ரூபாய் 40.00 iii. ரூபாய் 10.00

17. அன்னாசிப்பழத்தினதும் மாம்பழத்தினதும் விலைகளின் கூட்டுத்தொகை யாது?
i. ரூபாய் 40.00 ii. ரூபாய் 80.00 iii. ரூபாய் 60.00

18. அவினேஸ் அப்பிள் பழங்கள் மூன்று வாங்கி, ரூபாய் 500.00 கடைக்காரருக்குக் கொடுத்தான். அவனுக்கு கிடைக்கும் மிகுதிப்பணம் எவ்வளவு?
i. ரூபாய் 260.00 ii. ரூபாய் 240.00 iii. ரூபாய் 280.00

19. 
இக்கடிகாரம் 10 நிமிடங்கள் வேகமாக ஓடுகின்றது. அம்சன் பாடசாலைக்கு காலை 6.30 க்கு புறப்பட வேண்டுமாயின். அந்த நேரத்தில் இக்கடிகார முகத்தில் முட்கள் காட்டும் நேரமென்ன?
i. 6.20 ii. 6.30 iii. 6.40

20. இருபத்தைந்தாவது இரட்டை எண் யாது?
i. 26 ii. 50 iii. 60

21. இரண்டு பாடசாலைகளுக்கு இடையே ஒரு கோயில் உள்ளது. முதலாவது பாடசாலைக்கும் கோயிலுக்கும் இடையே உள்ள தூரம் 53m. இரண்டாவது பாடசாலைக்கும் கோயிலுக்கும் உள்ள தூரம் 127m. எனவே இரண்டு பாடசாலைகளுக்கிடையேயான தூரம் எவ்வளவு?
i. 177m ii. 180m iii. 190m

22. 

இந்த முக்கோணத்தின் பக்கங்களைக் கொண்டு சதுரமொன்றினை அமைத்தால் சதுரமொன்றின் ஒருபக்க நீளம் எவ்வளவு?
i. 4 cm ii. 5cm iii. 6cm

23. 5*l* பாலின் விலை ரூபாய் 1500.00 எனில் 3*l* பாலின் விலை என்ன?
i. ரூபாய் 300.00 ii. ரூபாய் 500.00 iii. ரூபாய் 900.00

24. 1000 x 0 = ? இதன் பெறுமானம் யாது?
i. 1000 ii. 0 iii. 10000

25. மு.ப. 7.25 நியம நேரமாக எழுதினால் பெறப்படுவது
i. 07 : 25 ii. 19 : 25 iii. 17 : 25

26. எனது வகுப்பில் அனைவரும் உயரமானவர்கள். ஜோயல் உயரமானவன். அதன்படி கீழே உள்ள கூற்றுக்களில் மிகச்சரியான கூற்று எது?
i. ஜோயல் எனது வகுப்பை சேர்ந்தவன்
ii. ஜோயல் எனது வகுப்பைச் சேராதவன்
iii. கூறமுடியாது.

27. காலை 8 மணிக்கு புறப்பட்ட புகைவண்டி தாமதமாக மு.ப. 11.45க்கு கண்டியை அடைந்தது. அது 15 நிமிடங்கள் தாமதமாக சென்றது எனில் சரியான நேரத்திற்கு கண்டியை அடைந்திருந்தால் அதன் பிரயாண நேர அளவு யாது?
i. 2.30 மணித்தியாலம் ii. 3.30 மணித்தியாலம்
iii. 3.45 மணித்தியாலம்

28. சுமதி காலையில் கிழக்கு நோக்கி நடந்தாள். அப்போது அவளது நிழல் விழுகின்ற திசை
i. மேற்கு ii. கிழக்கு iii. வடக்கு

29. 2024ம் ஆண்டில் ஜனவரி முதலாம் திகதி வெள்ளிக்கிழமை எனில் அவ்வாண்டிலுள்ள வெள்ளிக்கிழமைகளின் மொத்த எண்ணிக்கை யாது?
i. 51 ii. 52 iii. 53

30. ஒரு kg பருப்பு ரூபாய் 300.00 எனில் 1kg 250g பருப்பின் விலை என்ன?
i. ரூபாய் 350.00 ii. ரூபாய் 375.00 iii. ரூபாய் 425.00

31. கீழேயுள்ள தாயக்கட்டைகளின் வெட்டுருக்களில் எந்த தாயக்கட்டையிள் உள்ள இலக்கங்களில் எதிர் எதிர்ப் பக்கங்களின் கூட்டுத்தொகை 7 ஆகும்.

i. 

ii. 

iii. 


32. உயிர்காக்கும் நோயாளர் காவு வண்டி ஒலி எழுப்பியவாறு வேகமாக செல்வதன் நோக்கம்
i. சாரதி வேகமாக பயணிக்க விரும்புவதால்
ii. நோயாளியை விரைவாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்காக
iii. நோய்பற்றி மற்றவர்களுக்கு அறிவிக்க

33. முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது மாறுபட்டு தோன்றும் உரு எது?
i.  ii.  iii. 

34. வேறுபட்ட சொல் எது?
உழவன், விவசாயி, மீனவன், கமக்காரன்
i. மீனவன் ii. கமக்காரன் iii. உழவன்

35. எந்த எண்ணின் 1/3 பங்கு 99 ஆகும்
i. 33 ii. 297 iii. 201

36. உங்கள் …………………… எங்களுக்கு மிகவும் ……………………..
ஏற்படுத்துகிறது.
மேலேயுள்ள இடைவெளிக்கு பொருத்தமான சொற்கள் முறையே
i. திறமை, பொறாமை ii. வரவு, மகிழ்ச்சியை
iii. வேதனை, மகிழ்ச்சியை

37. எமது சூழலில் எப்போதும் இருப்பது
i. வெளிச்சம் ii. சத்தம் iii. வளி

(10ஆம் பக்கம் பார்க்க)

09 ஆம் பக்கத் தொடர்

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I

38. இது மூன்றெழுத்துச் சொல்லாகும். முதலெழுத்து வீதி என்பதில் உண்டு. விதி என்பதில் இல்லை. இரண்டாவது எழுத்து அரம் என்பதில் உண்டு. அறம் என்பதில் இல்லை. மூன்றாவது எழுத்து அம்பு என்பதில் உண்டு. அப்பு என்பதில் இல்லை. அச்சொல் எது?
i. வீரம் ii. மரம் iii. கரம்

39. 'LARGE' இவ்வெழுத்துக்களை பின்னாலிருந்து எழுதினால் பெறப்படுவது
i. EGRLA ii. EGRAL iii. EGLAR

40. பத்தாயிரத்து நூற்று பத்தொன்பது இதனை இலக்கத்தில் எழுதினால்
i. 11119 ii. 11019 iii. 10119

## வினாத்தாள் ii இற்கான விடைகள் (12.08.2022)

I.
1) அங்கும், இங்கும், ஓடியாடி
2) பட்டாம் பூச்சிகள்
3) பறவைகள்
4) கூட்டம் கூட்டமாக
5) (i) கடல் + கரையில் (ii) நீலம் + கடல்
6) நீலம்

II.
7) அழித்தது
8) சத்தமிட்டன
9) புறப்படுவோம்
10) போகின்றேன்

III.
11) (i) ஆசிரியர் அனைவரையும் "வேகமாக வாருங்கள்" என்றார்.
(ii) அவரிடம் காணப்பட்ட சிறந்த குணம் யாது?

IV.
12) (i) சுயசரிதை
(ii) தீர்க்கதரிசி

V.
13) நான் பானம் அருந்த வந்தேன்.
14) பிள்ளை பாடம் படிக்கின்றார்.
15) பறவை இரைதேடி பறக்கும்.

VI.
16) சிற்பங்கள் கண்ணையும் கருத்தையும் கவரும் அழகு வாய்ந்தவை.
17) அரசன் அயல்நாட்டு மன்னனை அறைகூவி அழைத்தான்.

VII.
18) (i) தேங்காய்
(ii) பற்பசை

VIII.
19) (i) Coconut
(ii) Hammer
20) (i) இரிதா (ii) நவய

IX.
21) (i) பி.ப. 1.15
(ii) மு.ப. 2.10
22) (i) 535 Cm
(ii) 235 cm
23) (i) இரண்டு
(ii) வட்டம்
24) 80080
25) 17
26) ரூபாய் 387.50
27) 4 cm
28) XV
29) 23415
30) 2

| | | | |
|---|---|---|---|
| 31) 1 | 41) 3 | 51) 2 | |
| 32) 2 | 42) 1 | 52) 1 | |
| 33) 3 | 43) 2 | 53) 3 | |
| 34) 3 | 44) 1 | 54) 1 | |
| 35) 1 | 45) 1 | 55) 2 | |
| 36) 2 | 46) 3 | 56) 3 | |
| 37) 1 | 47) 1 | 57) 1 | |
| 38) 3 | 48) 2 | 58) 3 | |
| 39) 1 | 49) 3 | 59) 2 | |
| 40) 3 | 50) 1 | | |

திகதி 17.08.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4850
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,203,520.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 36,578,402.60
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 7 8 6 8 4 3

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3092
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,848,400.00
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 06 16 32 35
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,950,025.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 880
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,582,480.00
வெற்றி இலக்கினம் R வெற்றி இலக்கங்கள் 15 25 36 63
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 121,703,538.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1309
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,538,660.00
வெற்றி இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 6 7 3 2 1 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,685,780.40

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 159
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,920,820.00
இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 20 24 41 53
விசேட இலக்கினம் மகரம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,834,784.20

கோடி 26 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1198
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,029,300.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 266,131,182.00
ஆங்கில எழுத்து W சுப்பர் நம்பர் 23 வெற்றி எண்கள் 05 20 21 61
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475
Email : info@nlb.lk Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்

விலைமனுக்கோரல் (IFB)

திருத்த அறிவிப்பு - இறுதி திகதி நீட்டிப்பு (பிற்சேர்க்கை - 01)

கொழும்பு 10. இல 320, டி. ஆர். விஜேவர்தன மாவத்தையில் காணப்படும் கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்டின் தலைமை நிர்வாக அதிகாரியினால் 2022.08.06 ஆம் திகதியன்று வடிவமைப்பு மற்றும் கட்டுமான செயற்திட்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மேற்கண்ட ஏல அறிவிப்பில் பின்வரும் திருத்தம் (பிற்சேர்க்கை-1) பின்வருமாறு வெளியிடப்பட்டுள்ளது.

ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான இறுதித் திகதி 2022.08.26 ஆம் திகதி 14.00 மணிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் / தலைமை நிர்வாக அதிகாரி
கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்
இல 320, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10.

கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்

விலைமனுக்கோரல் (IFB)

திருத்த அறிவிப்பு - இறுதி திகதி நீட்டிப்பு (பிற்சேர்க்கை - 01)

கொழும்பு 10. இல 320, டி. ஆர். விஜேவர்தன மாவத்தையில் காணப்படும் கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்டின் தலைமை நிர்வாக அதிகாரியினால் 2022.08.12 ஆம் திகதியன்று LED திரைகளை வழங்குதல், நிறுவு-தல், பரிசோதித்தல், இயக்குதல் மற்றும் பராமரித்தலக்கான அறிவிப்பு வெளிய-িடப்பட்டது.

மேற்கண்ட ஏல அறிவிப்பில் பின்வரும் திருத்தம் (பிற்சேர்க்கை-1) பின்வருமாறு வெளியிடப்பட்டுள்ளது.

ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான இறுதித் திகதி 2022.08.25 ஆம் திகதி 14.00

பணிப்பாளர் / தலைமை நிர்வாக அதிகாரி
கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்
இல 320, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10.

## சீமெந்து ஏற்றுவதற்கான கட்டணங்களை வரையறுத்து கல்முனை மாநகர சபை விஷேட அறிக்கை வெளியீடு

*கல்முனை விஷேட நிருபர்*



கல்முனை மாநகரசபை எல்லையினுள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், சீமெந்து பொதிகளை ஏற்றுவதற்கான அதிகூடிய வாகன வாடகைக் கட்டணமாக பொதியொன்றுக்கு 60 ரூபாவே அறவிடப்பட வேண்டும் என மாநகர சபை வரையறுத்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பைக் காரணம் காட்டி, சீமெந்து பொதிகளை ஏற்றுவதற்கான கட்டணத்தை முறையற்ற விதத்தில், விரும்பியவாறு அதிகரித்து, அறவிடுவதாக பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்ததைத் தொடர்ந்தே, இவ்வாறு வரையறை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயத்தில் கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கைகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் நேற்று வியாழக்கிழமை (18) தெரிவித்தார்.

இதன்படி 100 பொதிகளுக்கு மேல் ஏற்றப்பட்டால் 50 ரூபா வீதமே கட்டணம் அறவிடப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த சேவையில் ஈடுபடும் வாகனங்கள் அனைத்தும் கல்முனை மாநகர சபையில் பதிவு செய்யப்பட்டு, அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும். அனுமதியின்றி இவ்வாறான சேவையில் ஈடுபடுவது சட்டவிரோதமாக கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹார்ட்வெயார் உரிமையாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் குறித்த கட்டணங்களை உறுதிப்படுத்திய பின்னரே, சீமெந்து பொதிகளை வாகனங்களில் ஏற்றிச்செல்ல அனுமதிக்க வேண்டும் எனவும் இந்த விடயத்தில் தவறிழைக்கும் ஹார்ட்வெயார் மற்றும் விற்பனை நிலையங்களின் வியாபார உரிமம் இரத்து செய்யப்படும் என மாநகர முதல்வர் மேலும் தெரிவித்தார்.

## அறுவடைக்குத் தேவையான டீசலை முறையாக வழங்க முறைமைப்படுத்தப்பட்ட திட்டம் அமுல்

*கிண்ணியா தினகரன் நிருபர்*

திருகோணமலை மாவட்டத்தில் சிறுபோக நெல் அறுவடைக்கு தேவையான டீசலை வழங்குவதற்கு முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இத்திட்டம்,தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என். ஜயவிக்ரம தெரிவித்தார்.

புதன்கிழமை (17) மாவட்ட செயலகத்தில் நடந்த விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கூட்டத்தின் போதே அரசாங்க அதிபர் இதனைத் தெரிவித்தார்.

இதனடிப்படையில், மொரவெவ, கோமரங்கடவெல, பதவிசிறீபுர ஆகிய பிரிவுகளில் நடைபெறும் நெல் அறுவடைக்கென,ஒரு ஏக்கருக்கு பத்து லீட்டர் டீசல் வழங்கப்படுகிறது.



அரசாங்க அதிபரின் அறிவுறுத்தலின்படி பிரதேச செயலகம் மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களம் என்பன இச்செயற்பாட்டை ஒருங்கிணைத்து செயற்படுத்தி வருகின்றன.சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இந்த விவசாயிகளுக்கு டீசல் விநியோகிக்கப்படுகிறது. மேலும்,காலம் பிந்தி விதைக்கப்பட்ட வயல் நிலங்களின் அறுவடைகள் பிந்தி ஆரம்பமாகவுள்ளதால், இந்த வயல்களுக்கும் டீசல் வழங்க ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன

விவசாயிகள் பயிர்ச்செய்கை மேற்கொண்ட காலப்பகுதியை அடிப்படையாக கொண்டு, அறுவடைக்குத் தேவைப்படும் டீசல் தொடர்பான பட்டியல் கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. அப்பட்டியலுக்கேற்பவே விவசாயிகளுக்கு டீசல் வழங்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நெல் அறுவடைக்காக கொண்டுவரப்படும் டீசல் முற்றாக விவசாயிகளுக்கே விநியோகிக்கப்படவுள்ளது. இது குறித்து உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி மேற்பார்வை செய்யுமாறும் அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

மேலும் பெரும்போகத்தில் உழவு நடவடிக்கைக்கான டீசலை வழங்குவதற்கும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ், மாவட்ட நீர்ப்பாசன பணிப்பாளர் அப்துல் ஜப்பார், மாவட்ட விவசாய பணிப்பாளர் எம். குகதாசன், உர செயலகத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர்,விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தேசிய கல்வி நிறுவகம்

கல்வி முகாமைத்துவத்தில் கல்வி இளமாணிப் பட்டம்

BEd (Educational Management) - 2023/2024 ( SLQF 5)

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடத்தின் கல்வி நிருவாகம் மற்றும் அபிவிருத்திதுறை மூலம் நடாத்தப்படும் மேற்படி பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பாடநெறி நடைபெறும் இடம்** : கல்வி நிருவாகம் மற்றும் அபிவிருத்தித் துறை, கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடம், தேசிய கல்வி நிறுவகம், மீப்பே சந்தி, பாதுக்க

**பாடநெறியின் காலம்** : மூன்று வருடம்

**கற்பித்தல் நடைபெறும் முறை** : நிகழ்நிலை ஊடாகவும் நேரடியாகவும் கற்றல்-கற்பித்தல் நடைபெறும்

**பாடநெறியின் மொழிமூலம்** : தமிழ் மொழிமூலம்

**கட்டண விபரங்கள்**
விண்ணப்பக் கட்டணம் : ரூபா 1,500/-
பதிவுக் கட்டணம் : ரூபா 1,000/-
பாடநெறிக் கட்டணம் : ரூபா 150,000/- (மூன்று தவணைகளில் செலுத்த முடியும்)
**பரீட்சைக் கட்டணம்** : நிறுவனம் தீர்மானிக்கும் கட்டணம்

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய வழிமுறை**

தேசிய கல்வி நிறுவகத்தின் பரீட்சைகள் துறையின் இணையத்தளத்தில் (https://www.exams.nie.lk/intakes/new) பாடநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுதல் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் இணையத்தளத்தில் **Bachelor of Education in Educational Management (Tamil Medium) – 2023/2024** பாடநெறிக்குரிய **Advertisement** ஐ தெரிவு செய்து அதில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தவும்.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி : 09.09.2022**

**கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன**
**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மஹரகம**

தேசிய கல்வி நிறுவகம்

கல்வி முகாமைத்துவத்தில் கல்வி முதுமாணி நிகழ்ச்சித் திட்டம் (2023/2024)

MEd (Educational Management) - 2023/2024 (SLQF 10)

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடத்தின் கல்வி நிருவாகம் மற்றும் அபிவிருத்திதுறை மூலம் நடாத்தப்படும் மேற்படி பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பாடநெறி நடைபெறும் இடம்** : கல்வி நிருவாகம் மற்றும் அபிவிருத்தித் துறை, கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடம், தேசிய கல்வி நிறுவகம், மீப்பே சந்தி, பாதுக்க

**பாடநெறியின் காலம்** : இரண்டு வருடம்

**கற்பித்தல் நடைபெறும் முறை** : நிகழ்நிலை ஊடாகவும் நேரடியாகவும் கற்றல்-கற்பித்தல் நடைபெறும்

**பாடநெறியின் மொழிமூலம்** : தமிழ் மொழிமூலம்

**கட்டண விபரங்கள்**
விண்ணப்பக் கட்டணம் : ரூபா 1,500/-
பதிவுக் கட்டணம் : ரூபா 5,000/-
பாடநெறிக் கட்டணம் : ரூபா 150,000/- (இரண்டு தவணைகளில் செலுத்த முடியும்)
**பரீட்சைக் கட்டணம்** : நிறுவனம் தீர்மானிக்கும் கட்டணம்

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய வழிமுறை**

தேசிய கல்வி நிறுவகத்தின் பரீட்சைகள் துறையின் இணையத்தளத்தில் (https://www.exams.nie.lk/intakes/new) பாடநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுதல் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் இணையத்தளத்தில் **Mater of Education in Educational Management (Tamil Medium) – 2023/2024** பாடநெறிக்குரிய **Advertisement** ஐ தெரிவு செய்து அதில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தவும்.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி : 09.09.2022**

**கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன**
**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மஹரகம**

# பனை சார் உற்பத்திக் கிராமம் நேற்று திறந்துவைப்பு



**சாவகச்சேரி விஷேட நிருபர்**

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வரணி வடக்கு கிராமத்தில் சௌபாக்கியா திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பனை சார் உற்பத்திக் கிராமம் நேற்றுமுன்தினம் பிற்பகல் திறந்து வைக்கப்பட்டது.

தென்மராட்சி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணித் தலைவர் க.இராசதுரை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் கலந்துகொண்டு உற்பத்திக் கிராமத்தினை திறந்து வைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், தென்மராட்சிப் பிரதேச செயலாளர் உஷா,யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்திருந்தனர். வரணி வடக்கு பனைசார் உற்பத்திக் கிராமம் 13 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட கட்டடம் அங்குரார்ப்பணம்



**கிளிநொச்சி குறூப் நிருபர்**

கிளிநொச்சி, அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக் கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் கட்டடம் நேற்று (18) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் சுமார் 525 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடத் தொகுதி கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாக கலந்து கொண்டு திறந்து வைத்தார். ஏற்கனவே கிளிநொச்சி அறிவியல் நகர் வளாகத்தில் பொறியியல் பீடம் மற்றும் விவசாய பீடங்கள் என்பன இயங்கி வருகின்றன. இந்நிகழ்வில் கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என். ரணசிங்க மற்றும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# விவசாய பணிமனையில் முறைகேடுகள் ; மூவர் அடங்கிய குழு நியமனம்

**கோப்பாய் குறூப் நிருபர்**

வடக்கு விவசாய பணிமனை முறைகேடுகள் தொடர்பில் விசாரணை செய்ய மூவர் அடங்கிய விசாரணைக் குழுவை வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நியமித்துள்ளார்.

வடக்கு மாகாண விவசாய பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்ற நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் தொடர்பில் விசாரிப்பதற்காக ஆரம்ப புலனாய்வு விசாரணை குழு நியமிக்கப்பட்டுள்ளது.

விசாரணைக் குழுவில் வட மாகாண சிறுவர் நன்னடத்தை அமைச்சின் கணக்காளர் விஷ்ணு, வடக்கு மாகாண விவசாய அமைச்சின் நிர்வாக அதிகாரி சாந்தசீலன், வட மாகாண விதை உற்பத்திக் கூட்டுறவு நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் சதீஷ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# செல்வச்சந்நிதி ஆலய கொடியேற்றம்

**யாழ்.விசேட நிருபர்**

வரலாற்றுப் புகழ்பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. செப்டம்பர் 5ஆம் திகதி காலை 9 மணிக்கு பூங்காவனமும், செப்டெம்பர் 6ஆம் திகதி கைலாச வாகனமும், செப்டெம்பர் 8ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், செப்டெம்பர் 9ஆம் காலை 9 மணிக்கு தேர் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

# யாழில் சிறுமிகள் கடத்தப்பட்டு பாலியல் துஷ்பிரயோகம்

## சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு

**யாழ்.விசேட நிருபர்**

யாழில் சிறுமிகள் இருவரை கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய 7 பேரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

17 வயது சிறுமிகள் இருவரை கடத்திச் சென்றமை மற்றும் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இதில் சாரதிகள் இருவரும் பஸ் நடத்துநர்கள் இருவரும் சிறுமிகள் இருவரும் அடங்குவர். சிறுமிகள் இருவரும் குற்றஞ்சாட்டப்பட்ட ஐவரும் யாழ். நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இரண்டு வாரங்களுக்கு முன்னர் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 17 வயதுச் சிறுமிகள் இருவர் வீட்டிலிருந்து வெளியேறி வந்து யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு வந்துள்ளனர். இதனையடுத்து அவர்கள் தொடர்பில் அறிந்த ஆணொருவர், சிறுமிகள் இருவரையும் அழைத்துச் சென்று சாவகச்சேரியிலுள்ள விடுதியொன்றில் தங்கவைத்துள்ளார். எனினும் கடந்த திங்கட்கிழமை அந்த விடுதியிலிருந்து வெளியேறிய மூவரும் யாழ். பஸ்நிலையத்துக்கு வந்துள்ளனர். அன்றைய தினம் இரவு வாகனமொன்றில் பஸ் சாரதிகள் இருவர், நடத்துநர்கள் இருவர் என மேலும் நால்வர் இணைந்து வாகனமொன்றில் எழுதுமட்டுவாழ் பற்றைக் காட்டுக்குள் சிறுமிகளை அழைத்துச் சென்றுள்ளனர். அதன் போது சிறுமிகளில் ஒருவர் சாதுரியமாக பேசி வாகனத்திலிருந்து இறங்கி எழுதுமட்டுவாழில் மக்கள் வாழும் பகுதிக்கு வந்துள்ளார். வீதியில் சென்றவர்களிடம் நடந்தவற்றை தப்பிவந்த சிறுமி தெரிவித்த போது அவர்கள் பொலிஸ் அவசர பிரிவுக்கு அறிவித்துள்ளனர்.

மற்றைய சிறுமியுடன் சென்ற ஐவரும் மறுநாள் யாழ்ப்பாணம் நகருக்கு அழைத்து வந்து சிறுமியை இறக்கிவிட்டுச் சென்றுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸாரினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. சிறுமிகளிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர்களை கடத்திச் சென்றமை மற்றும் தகாத உறவு கொண்டமை என்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் ஐவர் கைது செய்யப்பட்டனர்.

வீட்டைவிட்டு வெளியேறி வந்தமையினால் சிறுமிகளும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

# அநுராதபுர கால தோணிக்கல் கல்வெட்டினை பார்வையிட அனுமதி

**வவுனியா விசேட நிருபர்**



யுத்தகாலத்தில் பாதுகாப்பு காரணங்களுக்காக மூடப்பட்டிருந்த அநுராதபுர கால தோணிக்கல் கல்வெட்டு பகுதி மக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், சுற்றுலா இடமாக மாற்றிமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

வவுனியா மற்றும் அநுராதபுர மாவட்ட எல்லைக்குட்பட்ட மகாமைலங்குளம் தொல்பொருள் இடமாக வவுனியா நகரத்திலிருந்து ஹொரவப்பொத்தானை செல்லும் வீதியில் இது உள்ளது.

அங்கு அமைந்துள்ள தொல்பொருள் நினைவுச் சின்னங்கள் 15 ஏக்கர் பரப்பளவில் பரந்து கிடக்கின்றன. இதனை அண்மித்து 2 புராதன குளங்களும் உள்ளன. இங்கே வரலாற்றுக்கு முந்தைய பாறைக் கற்கருவிகளும் உள்ளன.

இங்கே உள்ள தோணிக்கல் கல்வெட்டில் அநுராதபுர இராசதானியின் மன்னன் மகாசேனின் மகனாகிய ஸ்ரீ மேகவண்ணனது ஆட்சி நடவடிக்கைகள், மத சடங்குகள், வட்டி முறைகள் மற்றும் பணம் மதிப்பிழப்பு முறைகள் பற்றிய பல முக்கிய தகவல்கள் உள்ளன.





பொல்தூவ சந்தி மற்றும் பாராளுமன்ற பாதை, சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லம் வரையான பாதையில் சட்டவிரோதமாக கூடிய கூட்டத்தின் பிரதிநிதிகள், இராணுவ வீரர்கள் இருவரை தாக்கி காயப்படுத்தியதோடு இராணுவத்தின் வசம் இருந்த ரி.56 துப்பாக்கிகள் இரண்டு மற்றும் அதற்குரிய இரண்டு தோட்டா கெப்களை கொள்ளையடித்தல், பொது மற்றும் தனியார் சொத்துகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியமை தொடர்பான நபர்களை அடையாளம் காண உதவுமாறு பொலிஸார் பொது மக்களிடம் கோரிக்கை...

# ஒரு நாள் ஊடக செயலமர்வு இன்று

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான ஒரு நாள் செயலமர்வு இன்று (19) வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இடர் முகாமைத்துவம் தொடர்பில் ஊடகவியலாளர்களின் செயற்பாடு குறித்த இச்செயலமர்வு அநுராதபுரம் றந்திய உணவகத்தில் காலை 8.30 மணியில் இருந்து 4 மணி வரை இடம்பெறவுள்ளது.

இதில் தெரிவு செய்யப்பட்டுள்ள ஊடகவியலாளர்கள் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## மக்கள் வங்கி

### மீட்கப்படாத நகைகள் ஏல விற்பனை

மக்கள் வங்கியின் அம்பாறை பிராந்தியத்திற்கு உட்பட்ட கீழ்க்காணும் கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் 31.12.2020 ம் திகதிக்கு முன் அடகு வைக்கப்பட்டு 19.09.2022 ம் திகதி வரை மீட்கப்படாத அடகு நகைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் கீழ்க்காணும் இடங்களில் மு.ப. 9.00 மணி முதல் ஏலத்தில் விற்கப்படும்.

| | |
|---|---|
| **ஏலத்தில் விற்கும் திகதி** | 20.09.2022, 21.09.2022, 22.09.2022 |
| **ஏலம் விடப்படும் இடம்** | பிராந்திய தலைமைக் காரியாலயம் அம்பாறை |
| **கிளை** | அம்பாறை, கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, பொத்துவில், மஹாஓயா, உஹண, காரைதீவு, திருக்கோவில், அட்டாளைச்சேனை, நிந்தவூர் , சாய்ந்தமருது, மருதமுனை |
| **சேவை நிலையம்** | இறக்காமம், நவகமபுர, ஆலையடிவேம்பு, சம்மாந்துறை, விளினையடி, பாணம, பதியத்தலவ, மத்திய முகாம், கொணாகொல்ல, ஒலுவில், பாலமுனை |

மேற்குறிப்பிடப்பட்டபடி நடைபெறவுள்ள இவ் ஏலவிற்பனையை அறிவித்தல் எதுவுமின்றி வங்கியின் விருப்பத்திற்கேற்ப இரத்துச் செய்யவோ, ஒத்தி வைக்கவோ, ஒன்றிணைந்து நடாத்தவோ அல்லது ஏலவிற்பனை நடைபெறும் இடத்தை மாற்றியமைக்கவோ நடவடிக்கைகளை மேற்கொள்ள வங்கிக்கு அதிகாரமுள்ளது.

**பிராந்திய முகாமையாளர்**
**மக்கள் வங்கி பிராந்தியக் காரியாலயம்**
**டி.எஸ். சேனாநாயக்க வீதி**
**அம்பாறை**

**தொலைபேசி இல. : 063-2222516, 063-2222332**

PEOPLE'S BANK
www.peoplesbank.lk



## விலைமனுக்கோரல் நீடிக்கப்பட்டதற்கான அறிவித்தல் (IFB)

### இலங்கை கடற்படை
### பாதுகாப்பு அமைச்சு

**இலங்கை கடற்படை முகாமுக்கு உலர், பச்சை மற்றும் பல்வேறு உணவுப்பொருட்கள் வழங்கல் தொடர்பான கொள்முதல் - 2023**

ஒப்பந்த இலக்கம் : ***SLN/VICT/ 01/2023***

1. இலங்கை கடற்படை முகாமுக்கு வருடாந்த ஒப்பந்த அடிப்படையில் உலர், பச்சை மற்றும் பல்வேறு உணவுப்பொருட்களை கொல்முதல் செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழங்கல் குழுவின் தலைவரினால் 2022.07.21 ஆம் திகதி வெளியான தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட "உலர், பச்சை மற்றும் பல்வேறு உணவுப்பொருட்கள் வழங்கல்" விலைமனுக்கோரலில் (IFB) பந்தி (06) ல் பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட உள்ளன.

| | | |
|---|---|---|
| மனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் | - | 2022.09.22 பி.ப.3.00 மணி வரை |
| மனுக்கள் மூடப்படும் இறுதி திகதி | - | 2022.09.23 மு.ப.09.00 மணி வரை |
| மனுக்கள் திறக்கும் திகதி, நேரம் மற்றும் இடம் | - | 2022.09.23 ஆம் திகதி மு.ப.09.00 |

(கடற்படை தலைமையகம் அட்மிரல் சோமதிலக திசாநாயக்க கேட்போர் கூடத்தில்)

2. மேலே குறிப்பிடப்பட்ட திகதி மற்றும் நேரங்களை தவிர மேலே பந்தி 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பத்திரிகைகளில் வெளியான ஏனைய நிபந்தனைகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

3. இதுதொடர்பான மேலதிக விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் மற்றும் தொலைபேசி எண்களினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

| | | |
|---|---|---|
| விலாசம் | : | கடற்படை பணிப்பாளர், (உணவு மற்றும் சீருடைகள்) கடற்படை தலைமையகம் த.பெ.இல, 593, கொழும்பு 01. |
| தொலைபேசி | : | 011 7190000, நீடிப்பு - 12351, 0117192351 |
| தொலைநகல் | : | 011 2424577 |
| மின்னஞ்சல் | : | nhqdnvc@navy.lk |

தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழங்கல் குழு,
(முப்படைகளுக்கான புதிய மற்றும் உலர் உணவுப் பொருட்களை கொள்முதல் செய்தல் - 2023)
பாதுகாப்பு அமைச்சு

# மோட்டார்சைக்கிள்கள் மோதி இருவர் காயம்

**றொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலைஉட்துறைமுக வீதியில் மோட்டார் சைக்கிள் இரண்டு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், தாதியர் உத்தியோகத்தர் ஒருவர் உட்பட மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

தாதியர் உத்தியோகத்தரான திருகோணமலை லிங்க நகர் பகுதியைச் சேர்ந்த எஸ். துஸ்யந்தி (41வயது) என்பவரும்,உவர்மலைமத்திய வீதியில் வசிக்கும் எம்.சிவநேசராஷா (68வயது) என்பவருமே ,காயமடைந்தவர்களாவர்.

விபத்து தொடர்பிலான விசாரணைகளை திருகோணமலை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# களவாடி அறுவைக்காக வைக்கப்பட்டிருந்த திருட்டு மாடுகள் மீட்பு, மட்டக்களப்பில் சம்பவம்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவு பொலிஸ் பிரிவில் திருடப்பட்டு இறைச்சிக்காக கொண்டுவரப்பட்ட மாடுகள் கடந்த செவ்வாய்கிழமை (16) பிற்பகல் மீட்கப்பட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுணதீவு பிரதேசத்திலுள்ள சின்னகாலபோட்டமடு பகுதியில் மேச்சலுக்காக விடப்பட்டிருந்த இரண்டு பசு மாடுகளை, அப்பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் திருடி மாட்டு வியாபாரிக்கு குறைந்த விலைக்கு விற்றுள்ளார்.

இம்மாடுகள் காத்தான்குடி பகுதியில் அறுவைக்காக வைக்கப்பட்டிருந்த நிலையில்,பொலிஸாரால் மீட்கப்பட்டது.

வழங்கப்பட்ட இரகசிய தகவலையடுத்தே,இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வவுணதீவு பொலிஸ் நிலைய பெரும் குற்றத் தடுப்புப் பிரிவின் உதவி பொலிஸ் பரிசோதகர் விக்கிரமசிங்கே தலைமையிலான பொலிஸாரின் நடவடிக்கையால் இவை, மீட்கப்பட்டன. சந்தேகத்தன் பேரில் ஐவரை பொலிஸார் கைது செய்துமுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட மாடுகளையும், ஐந்து சந்தேக நபர்களையும் மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மோ. சைக்கிள்களில் அதிவேகமாக செல்வதாக பொலிஸில் புகார்

**அட்டளைச்சேனை குறூப் நிருபர்**

அக்கரைப்பற்று பிரதேசத்தின் பிரதான வீதிகளில் இளைஞர்கள் பொறுப்பின்றி மிக வேகமாக மோட்டார்சைக்கிள்களை ஓட்டிச்செல்வதால், பிரதேசவாசிகள் பெரும் அச்சமடைந்துள்ளனர். கடற்கரை வீதி,மற்றும் பிரதான வீதிகளிலே இவ்வாறு இளைஞர்கள் அதிவேகமாக மோட்டார் சைக்கிள்களில் செல்கின்றனர்.

இவ்வாறு இவர்கள் செல்வது அதிக விபத்துக்களை ஏற்படுத்துவதுடன் வயது முதிர்ந்தோர் மற்றும் பாதசாரிகளுக்கு பெரும் அசௌகரிகங்களையும் ஏற்படுத்தியுள்ளது.குறிப்பாக இரவு நேரங்களிலே மிக வேகமாக இவர்கள் மோட்டார்சைக்கிகள்களில் செல்கின்றனர்,மேலும் ஒரு சைக்கிளில் மூவர்,அல்லது நால்வர் பயணிப்பதும்,தலைக் கவசமின்றி கடற்கரை வீதிகளில் மோட்டார் சைக்கிளில் செல்வதும் பெரும் இடைஞ்சலையும் ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து போக்குவரத்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதால்,இரவு நேரங்களில்,குறித்த இப்பாதைகளில் போக்குவரத்து பொலிஸார் ரோந்து நடவடிக்ககைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.இளைஞர்களின் இதுபோன்ற பொறுப்பற்ற செயற்பாடுகளால் சிறுவர்கள் வீதியால் செல்வதற்கும் அஞ்சுகின்றனர்.

# ஹிரா நகர் குடியேற்ற கிராம வீதியை செப்பனிடுமாறு மக்கள் கோரிக்கை

**பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்**

பாலமுனை ஹிரா நகர் மீள்குடியேற்றக் கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதி குண்டும், குழியுமாக காணப்படுவதால், போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் இருப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பாலமுனை பிரதான வீதியிலிருந்து ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் காணப்படும் ஹிரா கிராமத்தில் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இங்குள்ள மக்கள், விவசாயிகள் பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் இவ்வீதியின் ஊடாக பிரயாணம் மேற்கொள்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக கவலை தெரிவிக்கின்றனர். மழை காலங்களில்,சேறும் சகதியுமாக நீர் நிரம்பிக் காணப்படுகிறது.மேலும் தார் வீதியாக இருந்த இவ்வீதி சேதமடைந்து தற்போது, கிறவல் வீதியாக மாறிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வீதியின் புணரமைப்புச் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பிரதேச அரசியல்வாதிகளின் கவனத்திற்கு பலமுறை கொண்டு வந்தும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையென அங்கு வசித்து வருகின்ற மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, இவ்வீதியினை முழுவதுமாக புணரமைத்துத்தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பிரதேச அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுக்குமாறு ஹிரா நகர் கிராம மக்களும் விவசாயிகளும் பொது மக்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

## விலைமனுக்கோரல் நீடிக்கப்பட்டதற்கான அறிவித்தல் (IFB)

### பாதுகாப்பு அமைச்சு
### இலங்கை விமானப்படை

**இலங்கை விமானப்படைக்கு உலர், பச்சை மற்றும் பல்வேறு உணவுப்பொருட்கள் வழங்கல் தொடர்பான கொள்முதல் - 2023**

ஒப்பந்த இலக்கம் : ***SLAF/RA/TB/2023***

1. இலங்கை விமானப்படை முகாமுக்கு வருடாந்த ஒப்பந்த அடிப்படையில் உலர், பச்சை மற்றும் பல்வேறு உணவுப்பொருட்களை கொள்முதல் செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழங்கல் குழுவின் தலைவரினால் **2022.07.21 ஆம் திகதி வெளியான தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன்** பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட **"உலர், பச்சை மற்றும் பல்வேறு உணவுப்பொருட்கள் வழங்கல்"** விலைமனுக்கோரலில் (IFB) பந்தி (06) ல் பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட உள்ளன.

   மனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் - **2022.09.22 பி.ப.3.00** மணி வரை
   மனுக்கள் மூடப்படும் இறுதி திகதி **(SLAF கொழும்பு )** - **2022.09.23 மு.ப.09.00** மணி வரை
   மனுக்கள் திறக்கும் திகதி, நேரம் மற்றும் இடம் - (SLAF TTS ஏக்கல)
   **"உலர், பச்சை மற்றும் பல்வேறு உணவுப்பொருட்கள் வழங்கல்" - 2022.09.23 ஆம் திகதி மு.ப.11.00 மணி வரை (இலங்கை விமானப்படை பயிற்சி நிலையம், கொட்டுகொட, ஏக்கல)**

2. மேலே குறிப்பிடப்பட்ட திகதி மற்றும் நேரங்களை தவிர மேலே பந்தி 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பத்திரிகைகளில் வெளியான ஏனைய நிபந்தனைகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

3. இது தொடர்பாக ஆர்வமுள்ள மனுதாரர்கள் மேலதிக விபரங்களை சிரேஷ்ட கொள்முதல் அலுவலர் மூலமாக பெற்றுக்கொள்ளமுடியும். தொலைப்பேசி இலக்கம் : **011-2347694** அல்லது **011-2441044** நீடிப்பு : **23550, 23569** தொலைநகல் : **011- 2441553**).

| | | |
|---|---|---|
| **விலாசம்** | : | சிரேஷ்ட கொள்முதல் அதிகாரி<br>இலங்கை விமானப்படைத் தளபதி,<br>விமானப்படை முகாம், கொழும்பு<br>இல.140, சேர். சித்தம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,<br>கொழும்பு 02. |
| **தொலைபேசி** | : | 011-2347694 / 011 - 2441044 (நீடிப்பு : 23550, 23569) |
| **தொலைநகல்** | : | 011- 2441553 |
| **மின்னஞ்சல்** | : | cpd@slaf.gov.lk |

தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழங்கல் குழு,
(முப்படைகளுக்கான புதிய மற்றும் உலர் உணவுப் பொருட்களை கொள்முதல் செய்தல் - 2023)
**பாதுகாப்பு அமைச்சு**
பாதுகாப்பு தலைமையக வளாகம்
ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டை

## பெறுகை அறிவித்தல்

### மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

**(மின்சக்தி மற்றும் வலுசக்தி, மாகாண வீதி வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, நீர்ப்பாசன மற்றும் நீர்வழங்கல், சமூக நலன்புரி மறறும் நகர்ப்புர மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான அமைச்சு - மேல் மாகாணம்)**

## வீடொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்

**கேள்வி இலக்கம்: PRDA/WP/PRO/2022/20R**

இவ் அதிகார சபையின் தேவைக்காக சிறந்த நிலைமையிலுள்ள, தனி மாடி அல்லது இரண்டு மாடி வீடொன்றை தளபாடங்களுடன் ஒரு வருடகாலத்திற்கு வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக, வீட்டு உரிமையாளர்களிடமிருந்து பெறுகைக் குழுவின் தலைவரினால் திறந்த விலைமனுக் கோரப்படுகின்றது,

  வெளிப்படையாகக் காணக் கிடைக்காத தகவல்கள் இந்தப் பகுதியில் பெறுமதி மதிப்பீட்டு முறைமைகள் நேரடியாகக் கிடைக்கப்பெறாத தகவல்களைக் கொண்டு மேற்கொள்ளப்படுவதோடு, இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்படும் மதிப்பீடுகளின் மூலம் குறித்த கருவியின் பெறுமதியில் நேரடி தாக்கங்கள் ஏற்படுகின்றன.

  வேறு முறைகளில் பெறப்படும் நியாயப் பெறுமதி மதிப்பீடுகளை ஏதேனும் தாக்கங்களை ஏற்படுத்தும் அம்சங்கள் அதாவது, திரவத்தன்மை இடர் அல்லது பயன்பாட்டு முறையில் காணப்படும் குறைபாடுகள் என்பனவற்றுக்காக வங்கி ஒரு சீராக்கத்தை மேற்கொள்வதோடு, மூன்றாம் தரப்பினர் ஒருவரின் சந்தைப் பங்களிப்பின் மூலமாக குறித்த கொடுக்கல் வாங்கல்களின் விலைகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

**நிதிக் கருவிகள் நியாயப் பெறுமதியில் மதிப்பீடு செய்யப்படுகிறது - நியாயமான மதிப்பீட்டுப் படிமுறை**

அறிக்கைத் திகதியில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நியாயப் பெறுமதியை மதிப்பீடு செய்தமையின் ஒரு பகுப்பாய்வினை பின்வரும் அட்டவணை பெற்றுக்கொடுக்கிறது. ஒவ்வொரு நியாயமான பெறுமதி மதிப்பீடும் நியாயப் பெறுமதி மதிப்பீட்டுப் படிநிலையின் ஒரு கட்டத்திற்கு அமைய பிரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளது. நிதி நிலைமை அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதிகள் இதற்கு ஏற்ப கணக்கிடப்பட்டுள்ளன.

| | Level 1 | Level 2 | Level 3 | Total |
|---|---|---|---|---|
| | Rs. '000 | Rs. '000 | Rs. '000 | Rs. '000 |
| **2022 ஜூன் 30 இல் உள்ளவாறு** | | | | |
| **நிதிச் சொத்துக்கள்** | | | | |
| தேர்வு நிதிக் கருவிகள் | - | 1,276 | - | **1,276** |
| ஏனைய வருமானங்களின் பெறுமதியைக் கொண்டு நிதிச் சொத்துக்களின் பெறுமதியை நியாயப் பெறுமதி மேற்கொள்ளுதல் | | | | |
| அரசாங்க பிணையங்கள் | 8,567,574 | - | - | **8,567,574** |
| பங்குப் பத்திரங்கள் | - | - | 16,441 | **16,441** |
| **நியாயப் பெறுமதியில் மொத்த சொத்துக்கள்** | 8,567,574 | 1,276 | 16,441 | **8,585,291** |
| **பொறுப்புக்கள்** | | | | |
| தேர்வு நிதிக் கருவிகள் | - | 33 | - | **33** |
| **நியாயப் பெறுமதியில் மொத்தப் பொறுப்புக்கள்** | - | 33 | - | **33** |
| **2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு** | | | | |
| **நிதிச் சொத்துக்கள்** | | | | |
| தேர்வு நிதிக் கருவிகள் | - | 3,200 | - | **3,200** |
| இலாபம் மற்றும் நட்டத்தின் அடிப்படையில் நிதிச் சொத்துக்களின் பெறுமதியை நியாயப் பெறுமதியில் கணக்கிடுதல் | | | | |
| அரசாங்க பிணையங்கள் | 10,767,168 | - | - | **10,767,168** |
| பங்குப் பத்திரங்கள் | - | | 16,441 | **16,441** |
| நியாயப் பெறுமதியில் மொத்த சொத்துக்கள் | 10,767,168 | 3,200 | 16,441 | **10,786,809** |
| **பொறுப்புக்கள்** | | | | |
| தேர்வு நிதிக் கருவிகள் | - | 3,009 | - | **3,009** |
| நியாயப் பெறுமதியில் மொத்தப் பொறுப்புக்கள் | - | 3,009 | - | **3,009** |

## தெரிவு செய்யப்பட்ட செயற்பாட்டுக் குறிகாட்டிகள்

| திகதியில் உள்ளவாறு | 30-06-2022 | 31-12-2021 |
|---|---|---|
| **ஒழுங்குபடுத்தும் மூலதனம் ரூ. 000** | | |
| பொது உரிமையாண்மை படி 1 | 8,164,886 | 8,421,650 |
| மொத்த படி 1 மூலதனம் | 9,664,886 | 9,921,650 |
| மொத்த மூலதனம் | 9,980,003 | 10,236,768 |
| **ஒழுங்குபடுத்தும் மூலதன நிறைவு விகிதம் (%)** | | |
| பொது உரிமையாண்மை படி 1 மூலதன விகிதம் (ஆகக்குறைந்தது தேவை - 7%) | 19.00 | 19.31 |
| மொத்த படி 1 மூலதன விகிதம் (ஆகக்குறைந்தது தேவை - 8.5%) | 22.50 | 22.75 |
| மொத்த மூலதன விகிதம் (ஆகக்குறைந்த தேவை - 12.5%) | 23.23 | 23.47 |
| **மாற்று விகிதம் - ஆகக்குறைந்த தேவை 3%** | 13.78 | 13.86 |
| **ஒழுங்குபடுத்தும் திரவத்தன்மை** | | |
| நியதிச்சட்ட திரவச்சொத்து, ரூ. '000 | 10,318,740 | 10,197,054 |
| நியதிச்சட்ட திரவச்சொத்து உள்ளடக்க வீதம், % (ஆகக்குறைந்த தேவை, 20%) | | |
| உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவு, % | 21.59 | 26.30 |
| வெளிநாட்டு வங்கித்தொழில் பிரிவு, % | 90.65 | 90.79 |
| உயர் தர திரவ சொத்து முழுத் தொகை ரூ. '000 | 9,048,108 | 9,188,499 |
| நியதிச்சட்ட திரவச்சொத்து உள்ளடக்க விகிதம், % - ஆகக்குறைந்தது தேவை - 90% | | |
| ரூபா, % | 159.00 | 164.00 |
| ஏனைய பண அலகு, % | 126.86 | 147.00 |
| மதிப்பீட்டு விகிதம் (%) - ஆகக்குறைந்த தேவை - 90% | 128 | 117 |
| **சொத்துக்களின் தரம் (கடன்களின் தரம்)** | | |
| 3ஆம் கட்டக் கடன்கள் (3ஆம் கட்ட பெறுமதி சீராக்க நிகர தொகை) மொத்தக் கடன்களுக்கு | 8.28 | 6.43 |
| 3ஆம் கட்ட கடன்களுக்கான 3ஆம் கட்டக் கடன்களின் பெறுமதி சீராக்கம் (3ஆம் கட்ட ஒதுக்கீட்டு அளவு) | 49.04 | 46.30 |
| **இலாபம்** | | |
| வட்டி எல்லை % | 5.13 | 3.97 |
| சொத்துக்கள் மூலமான வருமானம் (வரிக்கு முன்),% | (0.71) | (0.74) |
| பங்கு மீதான வருமானம்,% | (4.23) | (2.99) |

## செயற்பாட்டுப் பிரிவு

| | வங்கியியல் | | திறைசேரி/ முதலீடுகள் | | ஒதுக்கப்படாதவை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஜூன் 30 இல் முடிவடைந்த காலாண்டு | 2022 | 2021 | 2022 | 2021 | 2022 | 2021 | 2022 | 2021 |
| நிகர வட்டி வருமானம் | **1,370,585** | **870,907** | **21,379** | **2,209** | - | - | **1,391,964** | **873,116** |
| அந்நியச் செலாவணி வருமானம் | (645,675) | 860 | 641,896 | 114,671 | - | - | (3,779) | 115,531 |
| நிகர கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 386,442 | 207,091 | 3,489 | 218 | - | - | 389,931 | 207,309 |
| ஏனைய வருமானம் | 2,188 | (4,038) | 5,000 | 19,541 | 314 | 196 | 7,502 | 15,699 |
| பிரிவு வாரியாக செயற்படு வருமானம் | **1,113,540** | **1,074,820** | **671,764** | **136,639** | **314** | **196** | **1,785,619** | **1,211,655** |
| பணியாளர் மற்றும் ஏனைய செயற்படு செலவுகள் | (934,513) | (833,924) | (11,108) | (9,801) | - | - | (945,621) | (843,725) |
| கடன் இழப்பு செலவினம் | (801,748) | (250,639) | 1,262 | - | - | - | (800,486) | (250,639) |
| மொத்த செயற்படு செலவினம் | **(1,736,262)** | **(1,084,563)** | **(9,846)** | **(9,801)** | - | - | **(1,746,107)** | **(1,094,364)** |
| நிகர செயற்பாட்டு வருமானம் | **(622,721)** | **(9,743)** | **661,918** | **126,838** | **314** | **196** | **39,512** | **117,291** |
| தேய்மானம் மற்றும் இலதாக்கல் | (183,690) | (208,543) | (139) | (207) | - | - | (183,829) | (208,750) |
| பிரிவு வாரியாக செயற்படு இலாபம்/(நட்டம்) | **(806,096)** | **(218,286)** | **661,779** | **126,631** | **314** | **196** | **(144,317)** | **(91,459)** |
| நிதிச் சேவைகள் மீதான VAT வரி | (64,608) | (64,601) | - | - | - | - | (64,608) | (64,601) |
| பிரிவுப் பெறுபேறுகள் | **(870,704)** | **(282,887)** | **661,779** | **126,631** | **314** | **196** | **(208,925)** | **(156,060)** |
| வருமான வரிச் செலவினம் | | | | | | | 13,827 | (72,570) |
| வருடத்திற்கான இலாபம்/(நட்டம்) | | | | | | | **(195,098)** | **(228,630)** |
| **உள்ளவாறு** | **30-06-2022** | **31-12-2021** | **30-06-2022** | **31-12-2021** | **30-06-2022** | **31-12-2021** | **30-06-2022** | **31-12-2021** |
| ஏனைய விபரங்கள் | | | | | | | | |
| பிரிவுக்கான சொத்துக்கள் | 42,910,507 | 38,187,078 | 10,888,632 | 10,430,047 | - | - | 53,799,139 | 48,617,125 |
| பிரிவுக்கான பொறுப்புக்கள் | 42,825,335 | 38,265,561 | 1,905,706 | 895,852 | - | - | 44,731,041 | 39,161,413 |

## பங்குதாரர்கள் தொடர்பான விபரங்கள்

| | 2022 ஜூன் 30 திகதிக்கு மிகப்பெரும் பங்குதாரர்கள் இருபத்து மூன்று பெயர்களை உள்ளடக்கியதாகும் | பங்குகள் | % |
|---|---|---|---|
| 1 | கார்கில்ஸ் (சிலோன்) பீஎல்சீ | 350,696,905 | 39.71 * |
| 2 | சீ.டீ. ஹோல்டிங்ஸ் பீஎல்சீ | 223,345,953 | 25.29 * |
| 3 | இலங்கை நாணயச் சபை – ஈ.பி.எப். | 44,000,000 | 4.98 |
| 4 | மியுலிடெக்ஸ் இன்வெஸ்மன்ட் லிமிடட் | 30,800,000 | 3.49 |
| 5 | எம்.ஜெ.எஃப் அறக்கட்டளை முதலீடுகள் (பி) லிமிடட் | 28,000,000 | 3.17 |
| 6 | சொப்ட்லொஜிக் லய்ஃப் காப்புறுதி நிறுவனம் | 26,600,000 | 3.01 |
| 7 | MAS எமாலியா (பி) லிமிடட் | 22,000,000 | 2.49 |
| 8 | ரோஸ்வுட் (பி) லிமிடட் | 16,000,000 | 1.81 |
| 9 | பீனிக்ஸ் வென்சர்ஸ் லிமிடட் | 13,200,000 | 1.49 |
| 10 | அயின்திரி ஹோல்டிங்ஸ் (பி) லிமிடட் | 11,000,000 | 1.25 |
| 11 | ஏஜஏ ஹோல்டிங்ஸ் லங்கா (பி) லிமிடட் | 11,000,000 | 1.25 |
| 12 | சொப்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் பீஎல்சீ | 10,000,000 | 1.13 |
| 13 | கார்தியா லொகுகே ஹெரிஸ் பிரேமரத்ன | 9,089,000 | 1.03 |
| 14 | மெரில் ஜோசப் பிரனாந்து | 7,800,000 | 0.88 |
| 15 | சொப்ட்லொஜிக் கெபிடல் பீஎல்சீ | 7,400,000 | 0.84 |
| 16 | ஜி.எஃப் கெபிடல் குளோபல் லிமிடட் | 6,100,000 | 0.69 |
| 17 | பெரியசாமிபிள்ளை பாரதகுமார் | 4,400,000 | 0.50 |
| 18 | பெரியசாமிபிள்ளை முருகானந்தன் | 4,400,000 | 0.50 |
| 19 | பெரியசாமிபிள்ளை ஆனந்தராஜா | 4,400,000 | 0.50 |
| 20 | பெரியசாமிபிள்ளை தேவராஜ் | 4,400,000 | 0.50 |
| 21 | பெரியசாமிபிள்ளை பாரதமாணிக்கம் | 4,400,000 | 0.50 |
| 22 | இஷார சின்தக நாநயக்கார | 4,400,000 | 0.50 |
| 23 | லலான் ரபர் ஹோல்டிங்ஸ் (பி) லிமிடட் | 4,400,000 | 0.50 |
| | உப தொகை | 847,831,858 | 96.00 |
| | ஏனைய பங்குதாரர்கள் | 35,311,000 | 4.00 |
| | முழுத்தொகை | **883,142,858** | **100** |

* கார்கில்ஸ் (சிலோன்) பீஎல்சீ மற்றும் சீ.டீ. ஹோல்டின்ஸ் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனத்திற்கு வங்கியின் வாக்கு உரிமையுள்ள பங்கு மூலதனம் 30% க்கு அதிகமாக வழங்கப்பட்டுள்ள மேலதிக பங்குகளுக்காக வாக்குரிமை செயல்படுத்த முடியாது.

**விளக்கக் குறிப்புகள்**

1) இந்த நிதி அறிக்கைகள் LKAS 34 க்கு அமைவாக, இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் இடைக்கால நிதிக் கூற்றுக்கள் வெளியீட்டு சட்டதிட்டங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்தின் பின்னர், கணக்கியல் கொள்கைகளிலோ, கணக்கீட்டு முறைகளிலோ எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

2) இலங்கையின் வர்த்தகப் பிரிவில் COVID-19 தொற்று நோய் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தை அடையாளம் கண்டுள்ள இலங்கை மத்திய வங்கி (CBSL), பல்வேறு சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வெளியிட்டு, வர்த்தக நிறுவனங்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பு, COVID-19 இனால் ஏற்படக்கூடிய பின்னடைவு என்பனவற்றை சமாளிக்கும் வகையில் பல்வேறு நிவாரண முறைமைகளையும் அறிமுகப்படுத்தியது. இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படும் பாதகமான தாக்கத்தை நிர்வகித்தல், கடன் வசதிகளை மீளச் செலுத்தும் காலத்தை தாமதித்தல், மிகக் குறைந்த வட்டி வீதங்களில் கடன் வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் சில கடன் வசதிகளுக்கான கட்டணங்கள், செலவினங்களைக் குறைத்தல் என்பன இவற்றில் சிலவாகும்.

3) 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி புதுப்பிக்கப்பட்ட இயல்புநிலைக்கான தவறுதல் (PD) மற்றும் 2022 ஜூன் 30 இற்கான நட்டத்தையளித்திடும் தவறுதல் (LGD) மதிப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் 2022 ஜூன் 30 ஆம் திகதியன்று கூட்டுக் குறைபாட்டிற்கான எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பை (ECL) வங்கி மதிப்பிட்டுள்ளது. தேவைக்கு ஏற்றவாறு பொருளாதார காரணி சீர்செய்தல் (EFA) முறைமை புதுப்பிக்கப்படும்.

பெரிய பொருளாதார சூழலில் ரூபாய் மதிப்பின் சரிவுநிலை, பணவீக்கம் மற்றும் வட்டி விகிதங்கள் அதிகரிப்பு உள்ளிட்ட போன்ற பல தற்கால ஏற்ற இறக்கம் காரணமாக கடன் வாங்குபவர்களின் எண்ணிக்கை அதிகரித்த நிலையில் கடன் அபாய விபரங்களை பிரதிபலிக்கும் வகையில் நிர்வாகம் இதுகுறித்து மேலதிகமாக தேவைப்படும் சீரமைப்புகளை மேற்கொண்டுள்ளது.

வங்கியானது அதன் தனிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த போர்ட்ஃபோலியோவைத் தொடர்ந்து மறுமதிப்பீடு செய்து, ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து அதிகரித்த கடன் அபாயத்தைப் பிரதிபலிக்கும் வகையில், அடையாளம் காணப்பட்ட பிரிவுகள் மற்றும் வாடிக்கையாளர்களின் குறைபாடுகளை நிவர்த்திசெய்யும் ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. அதன்படி, தற்போதைய மிகப்பெரிய பொருளாதார சூழலை மதிப்பிடுவதில் அதிகமாக குறைபாட்டுக் கட்டணங்கள் ஒரு சிறந்த நடவடிக்கையாகக் கருதப்படும் முகாமைத்துவத்திற்கு மேலான குறைபாடுகளை நீக்கும் ஏற்பாடுகளை உள்ளடக்கியது.

அந்நியச் செலாவணியில் குறிப்பிடப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்கள் மீதான குறைபாட்டுக் கட்டணங்கள் மீதான பரிமாற்ற தாக்கம் நிகர பிற இயக்க வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு அதனுடன் தொடர்புடைய பரிமாற்ற இலாபங்களும் அங்கீகரிக்கப்பட்டு 06 மாத காலத்திற்கான மொத்த தாக்கம் 2022 ஜூன் 30 அன்று முடிவடைந்த காலாண்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

4) மதிப்பீட்டு ஆண்டு 2013/2014 – 2013/2014 மதிப்பீட்டு ஆண்டிற்கான மதிப்பீட்டு அறிவிப்பை உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையர் நாயகம் (CGIR) வெளியிட்டுள்ளார். வங்கி, வரி மேல்முறையீட்டு ஆணையாளரிடம் மேல்முறையீடு செய்துள்ளதுடன், வரி மேல்முறையீட்டு ஆணையாளரின் மேல்முறையீட்டு விசாரணைக்காக வங்கி காத்திருக்கிறது. மேற்கூறியவை வங்கிக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தாது என்பது நிர்வாகத்தின் கருத்தாகும்.

மதிப்பீட்டு ஆண்டு 2017/2018 – 2017/2018 மதிப்பீட்டு ஆண்டிற்கான மதிப்பீட்டு அறிவிப்பை CGIR வெளியிட்டது. இந்த மதிப்பீட்டிற்கு எதிராக வங்கி மேல்முறையீடு செய்துள்ளது. மேல்முறையீடு தற்போது IRD விசாரணை கட்டத்தில் உள்ளது. மேற்கூறியவை வங்கிக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தாது என்பது நிர்வாகத்தின் கருத்து.

5) வங்கிக்கு எதிராக பாரியளவு தாக்கம் ஏற்படுத்தக்கூடிய எந்தவிதமான சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

6) இந்த இடைக்கால நிதிக் கூற்றுக்களில் அறியப்பெற்ற அனைத்துச் செலவினங்களும் வழங்கப்பட்டுள்ளன.

7) அறிக்கையிடல் திகதியின் பின்னர், நிதி நிலை அறிக்கைகளில், சரி செய்தல் அல்லது வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகள் எதுவும் எழவில்லை.

இல. 696, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 0117 640 000 www.cargillsbank.com

www.skillsads.com



# இலங்கை சுங்கம்

சுங்க மோசடிகளுக்கு எதிராக விழிப்புடன் இருங்கள்!
24 மணித்தியாலமும் தகவல்கள் வழங்குவதற்கு

**0112471471**

எனும் தொலைபேசி இலக்கத்தை அழையுங்கள்

- இரகசியத்தன்மை உச்ச மட்டத்தில் பேணப்படும்.
- வெற்றிகரமான புலனாய்வுகளுக்கு வழிகாட்டும் தகவல்களுக்கு பணவெகுமதி வழங்கப்படும்.

சுங்க மோசடிகளைத் தடுப்போம்!
அரசாங்க வருமானத்தையும் சமூக, சூழல் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் முயற்சிகளுக்குத் தோள்கொடுப்போம்!

**மத்திய நுண்ணறிவுப் பிரிவு,**
**இலங்கைச் சுங்கம்,**
**சுங்க இல்லம், இல. 40, பிரதான வீதி, கொழும்பு-11.**
**மின்னஞ்சல்: ciu@customs.gov.lk**



**வடமத்திய மாகாணத்தின், மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பதவி வெற்றிடங்களிற்காக பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு, தற்பொழுது அபிவிருத்தி அலுவலர்களாக நியமனம் பெற்றுள்ள பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்**

வடமத்திய மாகாணத்தின், மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள் 1993 இற்காக 2018, 2019 மற்றும் 2020 வருடங்களில் அபிவிருத்தி அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்ட பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான அறிவித்தல் வடமத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் **www.psc.nc.gov.lk** என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2022.09.09 ஆகும்.

**செயலாளர்,**
**மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,**
**வட மத்திய மாகாணம்,**
2022.08.19



**அறிவித்தல்**

கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பாக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(2) ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

கம்பனியின் முன்னைய பெயர் : **தப்றொபேன் செக்கியுரிட்டீஸ் (பிரைவட்) லிமிட்டட்**
கம்பனியின் புதிய பெயர் : **அம்பியொன் செக்கியுரிட்டீஸ் (பிரைவட்) லிமிட்டட்**
பதிவிலக்கம் : PV 16031
பதிவு பெற்ற அலுவலக முகவரி : இல. 10, கோத்தமி வீதி, கொழும்பு-08.
பெயர் மாற்ற சான்றிதழின் திகதி : 2022 ஜூலை 29 ஆம் திகதியன்று

**மேலேயுள்ள கம்பனியின் சார்பாக**
**மெனேஜர்ஸ் அண்ட் செக்கிரட்டரீஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**செயலாளர்கள்**
**இல. 08, ரிக்கெல் பாதை, கொழும்பு-08.**

# மியன்டாட் இளையோர் அணியை வீழ்த்தியது சன்பிளவர் இளையோர்



**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**

சாய்ந்தமருது மியன்டாட் இளையோர் அணியின் புதிய சீருடை அறிமுகம் மற்றும் கடின பந்து கிரிக்கெட் போட்டி சாய்ந்தமருது பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த வாரம் நடைபெற்றது.

18 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாக நடைபெற்ற இப்போட்டியில்சாய்ந்தமருதுசன்பிளவர் விளையாட்டுக் கழக இளையோர் அணி போட்டியினை ஏற்பாடு செய்த சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டு கழக இளையோர் அணியினரை 6 விக்கெட்டுகளால் வென்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக "றபீக் கென்ஸ் ரக்ஸன் " நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் யு.எல். றபீக் கலந்து கொண்டு வெற்றிக் கிண்ணங்களை வழங்கி வைத்தார்.

# டுபாய் கெப்பிட்டல்ஸ் அணியில் ஆட தசுன், பானுக, சமீர ஒப்பந்தம்

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ள சர்வதேச லீக் டி20 தொடரின், டுபாய் கெப்பிட்டல்ஸ் அணிக்காக இலங்கை அணி வீரர்களான தசுன் ஷானக, பானுக ராஜபக்ஷ மற்றும் துஷ்மந்த சமீர ஆகியோர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தொடரில் விளையாடும் அணிகள் தங்களுடைய வெளிநாட்டு வீரர்களை அறிவித்து வருகின்றன. இந்தநிலையில் டுபாய் கெப்பிட்டல்ஸ் அணி 6 வெளிநாட்டு வீரர்களின் பெயர்களை இதுவரை வெளியிட்டுள்ளது.



அதன்படி இலங்கை அணியின் ஒருநாள் மற்றும் டி20 தலைவர் தசுன் ஷானக மற்றும் முன்னணி வேகப்பந்துவீச்சாளர் துஷ்மந்த சமீர, அதரடி துடுப்பாட்ட வீரர் பானுக்க ராஜப்ஷ ஆகியோர் டுபாய் கெப்பிட்டல்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மூன்று இலங்கை வீரர்களுடன் மேற்கிந்திய தீவுகளின் சகலதுறை வீரர் ரோவ்மன் பவல், பெபியன் எலன் மற்றும் ஆப்கானிஸ்தான் அணியின் சுழல் பந்துவீச்சாளர் முஜீபுர் ரஹ்மான் ஆகியோரையும் டுபாய் கெப்பிட்டல்ஸ் அணி ஒப்பந்தம் செய்துள்ளது.

இந்தத் தொடரில் ஒவ்வொரு அணியும் தலா 14 வெளிநாட்டு வீரர்களை தமது அணியில் இணைத்துக் கொள்ளமுடியும்.அதன்படி ஏற்கனவே கல்ப் ஜயண்ட்ஸ், எம்.ஐ எமிரேட்ஸ் மற்றும் அபுதாபி நைட் ரைடர்ஸ் அணிகள் தங்களுடைய வெளிநாட்டு வீரர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது.

சர்வதேச லீக் டி20 தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாய், அபுதாபி மற்றும் ஷார்ஜாவில் எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



இலங்கை ரக்பி நிறுவனத்தால் நடத்தப்படும் எதிர்வரும் மாகாண ரக்பி தொடருக்கு நிப்பொன் பெயின்ட் லங்கா உத்தியோகபூர் அனுசரணை வழங்குகிறது. இது தொடர்பான ஒப்பந்தத்தில் நிப்பொன் பெயின்ட் லங்கா (Pvt) Ltd பொது முகாமையாளர் நெமன்த அபேசிங்க மற்றும் இலங்கை ரக்பியின் தலைவர் ரிஸ்லி இல்யாஸ் கைச்சாத்திடுவதை படத்தில் காணலாம். இந்த நிகழ்வு கடந்த புதன்கிழமை (17) இடம்பெற்றது.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL
மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது :........................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை :........................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை :........................
வாக்களித்தவர் பெயர் :........................
முகவரி :........................
மொபைல் இல. :........................

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 20-08-2022 இல. 21

STREAM LIKE A BOSS!
SLTMOBITEL
இலங்கையின்
முதன்மையான,
அதிவேகமான
மற்றும் விஸ்தரிக்கப்பட்ட
PREMIUM FIBRE வலையமைப்பு.
FIBRE
Get Fibre www.sltmobitel.lk

## சர்வதேச செய்திகள்

# ஆப்கான் பள்ளிவாசலுக்குள் குண்டு வெடிப்பு: 21 பேர் பலி

ஆப்கான் தலைநகர் காபுலில் உள்ள கூட்டம் நிறைந்த பள்ளிவாசல் ஒன்றில் இடம்பெற்ற சக்திவாய்ந்த குண்டு வெடிப்பில் 21 பேர் பலியானதோடு மேலும் 33 பேர் காயமடைந்தனர்.

கடந்த புதன்கிழமை மாலை நேர தொழுகையின்போதே இந்த வெடிப்பு இடம்பெற்றது. உயிரிழந்தவர்களில் பள்ளிவாசல் இமாமும் உள்ளார். இந்தத் தாக்குதலின் பின்னணியில் யார் உள்ளனர் என்பது உறுதி செய்யப்படாத போதும், இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்) குழுவின் தற்கொலை தாக்குதல் ஒன்றில் தலிபான் ஆதரவு மதத் தலைவர் ஒருவர் கொல்லப்பட்டு ஒரு வாரத்திலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.



"பலரும் கொல்லப்பட்டதை நான் பார்த்தேன், சிலர் பள்ளிவாசல் ஜன்னல்களில் இருந்து வீசி எறியப்பட்டார்கள்" என்று பார்த்தவர் ஒருவர் ரோய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஆப்கானை கைப்பற்றிய தலிபான்களின் பலம்கொண்ட எதிரியாக இந்த ஐ.எஸ் குழு உருவெடுத்துள்ளது. இந்த இரு தரப்பும் தற்போது பயங்கர மோதல் ஒன்றில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காபுலில் குண்டு வெடித்த இடத்தை பாதுகாப்பு படையினர் தற்போது மூடியுள்ளனர்.

சக்திவாய்ந்த வெடிப்புச் சத்தத்தை கேட்டதாகவும் அருகில் இருந்த கட்டடங்களின் ஜன்னல் கதவுகள் நொறுங்கியதாகவும் பார்த்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# வடக்கு அல்ஜீரியாவில் காட்டுத்தீ: 24 பேர் பலி

வடக்கு அல்ஜீரியாவில் பெரும் அழிவை ஏற்படுத்திய காட்டுத் தீயில் குறைந்தது 26 பேர் உயிரிழந்திருப்பதோடு பல டஜன் பேர் காயமடைந்துள்ளனர்.



துனீஷிய எல்லையை ஒட்டிய எல் தார்ப்பில் 24 பேர் உயிரிழந்திருப்பதாகவும் செதிப்பில் தாய் மற்றும் மகள் பலியாகி இருப்பதாகவும் அந்நாட்டு உள்துறை அமைச்சர் கமெல் பெல்ஜுத் தெரிவித்துள்ளார்.

தீயணைப்பு வீரர்கள் ஹெலிகொப்டர்களின் உதவியோடு தொடர்ந்து பரவும் தீயை கட்டுப்படுத்த போராடி வருகின்றனர். பல்வேறு மாகாணங்களில் சுமார் 350 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மோசமாக பாதிக்கப்பட்ட எல் தார்ப்பில் 16 தீச்சம்பங்கள் பரவி வருவதாக சிவில் பாதுகாப்பு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

வடக்கு அல்ஜீரியா ஒவ்வொரு ஆண்டும் காட்டுத் தீயால் பாதிக்கப்படுவதோடு கடந்த ஆண்டு 90 பேர் உயிரிழந்தனர்.

# சீனாவில் கடும் வரட்சியால் மின் விநியோகத்தில் தடை



சீனாவில் மின்சாரத் தடையால் 5 மில்லியனுக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அங்கு அதிகரித்துள்ள வெப்பநிலையால் மின்சார விநியோகத்தில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அதனால் அங்குள்ள தொழிற்சாலைகளும் வர்த்தகங்களும் மூடப்பட்டுள்ளன.

சிச்சுவான் மாநிலத்தில் கடந்த புதனன்று (17) வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸை எட்டியது. வீடுகள், அலுவலகங்கள், கடைத் தொகுதிகள் ஆகியவற்றுக்கு மின்சாரத்தைப் பங்கீட்டு முறையில் விநியோகிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

எரிசக்தியை அதிகம் பயன்படுத்தும் உலோக, உரத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் அவற்றின் செயல்பாட்டைக் குறைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

சீனாவில் அதிகரிக்கும் வெப்பநிலையால் பயிர்களின் விளைச்சலும் கால்நடைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. யாங்சே ஆற்றைச் சுற்றிய பகுதிகளில் வரட்சி ஏற்பட்டுள்ளது.

# ட்விட்டர் பதிவுகளுக்காக சவூதி பெண்ணுக்கு 34 ஆண்டு சிறை

சவூதி அரேபியாவில் ட்விட்டர் பதிவுகளுக்காக ஒரு பெண்ணுக்கு 34 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக ஏ.எப்.பி செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

34 வயது சல்மா அல் ஷெஹாப் பொது ஒழுங்கைச் சீர்குலைக்க முயன்றவர்களுக்கு உதவியதாக இம்மாதம் 9ஆம் திகதி தீர்ப்பளிக்கப்பட்டது என்று நீதிமன்ற ஆவணங்கள் குறிப்பிட்டன.

இரு பிள்ளைகளுக்குத் தாயான ஷெஹாப் பிரிட்டனின் லீட்ஸ் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் படித்துக்கொண்டிருந்தார். சவூதி அரேபியாவில் பெண்கள் உரிமைகள் குறித்து அவர் அடிக்கடி ட்விட்டரில் பதிவிட்டு வந்துள்ளார். ட்விட்டரில் சுமார் 2,600 பேர் அவரைப் பின்தொடர்கின்றனர்.

2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம், பல்கலைக்கழக விடுமுறைக்காக சவுதி அரேபியாவுக்குத் திரும்பிய போது ஷெஹாப் கைது செய்யப்பட்டார்.

முன்னதாக அவருக்கு 6 ஆண்டுச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் இம்மாதம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அவரின் தண்டனை கடுமையாக்கப்பட்டது. தண்டனைக்கு எதிராக 30 நாட்களுக்குள் ஷெஹாப் மேன்முறையீடு செய்யலாம்.



# ஏலத்தில் வாங்கிய பெட்டியில் இருந்தது இரு பிள்ளைகளின் எச்சங்கள்

நியூஸிலாந்தின் ஒக்லாந்து நகரில் ஏலத்தில் வாங்கப்பட்ட பெட்டிகளில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் இரு சிறு பிள்ளைகளுடையவை என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அது ஆரம்ப பாடசாலை செல்லும் 5 முதல் 10 வயது மதிக்கத்தக்க இரு பிள்ளைகளின் எச்சங்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.



இரு பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்த அந்த எச்சங்கள் சில ஆண்டுகளாகப் பதுக்கி வைக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸ் விசாரணை அதிகாரி கூறினார். ஒரு குடும்பத்தினர் சேமிப்புக் கிடங்கில் நடந்த ஏலத்தில் அந்தப் பெட்டிகளை வாங்கியபோது அதில் மனித எச்சங்கள் இருந்தது தெரியவந்தது. உயிரிழந்த பிள்ளைகளின் அடையாளத்தைக் கண்டுபிடிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பெட்டிகளை வாங்கிய குடும்பத்திற்கும் அந்தச் சம்பவத்திற்கும் தொடர்பில்லை என பொலிஸார் கூறினர். குழந்தைகளின் மரணத்திற்குக் காரணமானவர்களைப் பிடிக்க விசாரணைக் குழு கடுமையாய் உழைத்துவருகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒகஸ்ட் மாதம் 19ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## விலைமனுக்கோரல்

### இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் வைரஸ் பாதுப்பு உரிமத்தினை புதுப்பித்தல்

இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8 இல் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் சிரேஷ்ட கொள்முதல் குழுத்தலைவரினால் TRCSL வைரஸ் பாதுப்பு உரிமத்தினை புதுப்பித்தல் சேவையினை வழங்குவதற்கு தகுதியினைக் கொண்ட மனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மனு ஆவணங்களை TRCSL நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவில் மீளச்செலுத்தப்படாத **ரூ.2,000.00** கட்டணத்தினை செலுத்தி **2022.09.06** ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் காரியாலய நாட்களில் **மு.ப.09.00 மணி முதல் பி.ப.03.00 மணி** வரை பெற்றுக்கொள்ள முடியும்.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படின் TRCSL நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவினை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

கேள்வி மனுக்களை சரியான முறையில் பூரணப்படுத்தி பிரதியை முத்திரையிடப்பட்ட ஒரு உறையில் இட்டு **2022.09.07 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு** முன்னதாக **தலைவர், சிரேஷ்ட கொள்முதல் பிரிவு, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8** எனும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது ஆணைக்குழுவின் நுழைவாயிலில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"TRCSL வைரஸ் பாதுப்பு உரிமத்தினை புதுப்பித்தல்"** எனக் குறிப்பிடுதல் வேண்டும். மனு ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே ஒவ்வொரு மனுக்களாக திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.

தலைவர்,
சிரேஷ்ட கொள்முதல் குழு,
இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு
276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8.

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/PT/6360(EL) | 25 Nos. Capacitors for the Yaskawa FS Drive Modules of the STS Cranes | 40,000.00 | 1,000.00 | 15-09-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/06/PT/6362(MP) | Hydraulic Pump for RAM Single Lift Spreaders at JCT | 10,000.00 | 1,000.00 | 15-09-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/04/PT/6366(EL) | 30 Nos. Access Points& Antennas | 95,000.00 | 1,000.00 | 15-09-2022 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/22/PT/10/054 | Lever Switches for the Cranes of JCT | 20,000.00 | 1,000.00 | 08-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/04/057 | Electrical Panel Board Type A (AS PER Drawing) | 25,000.00 | 1,000.00 | 08-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/04/056 | Motor Tyres 700X12, 12PLY | 120,000.00 | 3,500.00 | 08-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/20/055 | Bearings for Preventive Maintenance Fork Lift Trucks -14 | 50,000.00 | 1,000.00 | 08-09-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 ஆகஸ்ட் 19ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2470443**

# மக்கள் வங்கி

## தங்க நகை அடகுப் பொருட்கள் ஏல விற்பனை

மக்கள் வங்கியின் பதுளை பிராந்தியத்திற்கு உட்பட்ட கீழ்க்காணும் கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் 31.12.2020 ம் திகதிக்கு முன் அடகு வைக்கப்பட்டு 23.09.2022 ம் திகதி வரை மீட்கப்படாத அடகு நகைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் கீழ்க்காணும் இடங்களில் மு.ப. 9.00 மணி முதல் ஏலத்தில் விற்கப்படும்.

| | கிளை/ சேவை நிலையம் | ஏல விற்பனைத் திகதியும், ஸ்தானமும் |
|---|---|---|
| 01 | **கிளைகள்:-** பதுளை" மஹியங்கனை, பசறை, ஹாலிஎலை, கந்தகெட்டிய, லுணுகலை" கிராந்துருகோட்டை" பதுளை முதியங்கனை **சேவை நிலையங்கள்:-** பதுளை, வெலேகடை, பதுளை பஸார் வீதி, மடுல்சீமை, தெமோதரை, எட்டம்பிட்டிய, மீகஹகிவுல, நவமெதகம, பதுளை லோவர் வீதி, பதுளை மாவட்ட செயலக காரியாலயம், ஊவா மாகாண சபை | 2022.09.24ம் திகதி மற்றும் 2022.09.25ம் திகதி பதுளை கிளைத் தொகுதியில் |
| 02 | **கிளைகள்:-** வெலிமடை, கெப்பெட்டிபொல, ஊவாபரணகம, பொரலந்தை பண்டாரவளை, ஹப்புத்தளை, கொஸ்வத்தை, ஹல்தும்முல்லை, தியத்தலாவை. **சேவை நிலையங்கள்:-** வெலிமடை நகரம், லுணுவத்த, மெதவெல, போகஹகும்புர பண்டாரவளை நகரம், பண்டாரவளை சிங்ஹகிரி, பொரஹெட்டிய, பல்லகெட்டுவ | 2022.09.24ம் திகதி மற்றும் 2022.09.25ம் திகதி பண்டாரவளை கிளைத் தொகுதியில் |

மேற்குறிப்பிடப்பட்ட படி நடைபெறவுள்ள இவ் ஏலவிற்பனையை அறிவித்தல் எதுவுமின்றி வங்கியின் விருப்பத்திற்கேற்ப இரத்துச் செய்யவோ ஒத்தி வைக்கவோ ஒன்றிணைந்து நடாத்தவோ அல்லது ஏலவிற்பனை நடைபெறும் இடத்தை மாற்றியமைக்கவோ நடவடிக்கைகளை மேற்கொள்ள வங்கிக்கு அதிகாரமுள்ளது.

**பிரதேச முகாமையாளார்.**
**மக்கள் வங்கி**
**பிரதேச பிரதான அலுவலகம்,**
**இல. 24, R.H. குணவர்த்தன மாவத்தை,**
**பதுளை.**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peopleesbank.lk
AA+ (lka) Fitch Rating, AA - Brand Finance Rating

# சுகாதார அமைச்சு

## அஷ்ர.ஃப் ஞாபகார்த்த வைத்தியசாலை - கல்முனை

### 2022/2023 ஆம் ஆண்டில் சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கான கேள்வி மனுக்கோரல்

அஷ்ர.ஃப் ஞாபகார்த்த வைத்தியசாலை கல்முனை சிற்றுண்டிச்சாலையினை 2022/ 2023 ஆண்டின் ஒரு வருட காலப்பகுதிக்கு நடாத்துவதற்கு திறமையும் தகுதியும் வாய்ந்த கேள்வி மனுதாரர்களிடமிருந்து இத்தால் கேள்வி மனுக்கள் கோரப்படுகிறது.

1. ஆர்வமுள்ள கேள்விமனு கோருபவர்கள் கல்முனை அஷ்ர.ஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையிலிருந்து மீளப்பெறமுடியாத கேள்விக்கட்டணமாக ரூபா 3,000/- ஐ அஷ்ர.ஃப் ஞாபகார்த்த வைத்தியசாலை காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுடன், தேசிய அடையாள அட்டையையும் காண்பித்து கேள்வியில் கலந்து கொள்வதற்கான ஆவணங்களை 2022.08.19 ஆந் திகதி தொடக்கம் 2022.09.07 ஆந் திகதி வரை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
2. காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சிற்றுண்டிச்சாலை சேவைகள் வழங்குதல் - 2022/2023" என எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் (08.09.2022 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக வைத்திய அத்தியட்சகர், அஷ்ர.ஃப் ஞாபகார்த்த வைத்தியசாலை கல்முனை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். அல்லது கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள "Tender Box" இல் இடப்படல் வேண்டும்.
3. கேள்விமனு கோரிக்கைகள் அனைத்தும் 08.09.2022 ஆம் திகதியன்று காலை 10.30 மணிக்கு வைத்திய அத்தியட்சகர் அலுவலகத்தில் திறக்கப்படும். அச்சமயம் கோரிக்கை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்க முடியும்.
4. கேள்விமனு கோரிக்கை ஆவணங்களை முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது அதனை நிராகரிப்பதற்குமான உரிமை கேள்விச் சபைக்குரியது.
5. மேலதிக தகவல்களுக்கு பெறுகை உத்தியோகத்தரை 067-2229496, 067-2222261 EXT 122, 113 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

**வைத்திய கலாநிதி. ஏ.எல்.எப். றஹ்மான்**
**வைத்திய அத்தியட்சகர்**
**அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை**
**கல்முனை**
19.08.2022

# இலங்கைச் சுங்கம்

## பொதுமக்களுக்கான அறிவித்தல்

### சட்டவிரோதப் பொருட்களை நாட்டிற்குள் கொண்டுவருவதைத் தடைசெய்தல்

நாட்டில் தற்போது நிலவுகின்ற அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாக, அரசாங்கத்தினால் கடந்த காலங்களில் பல அத்தியாவசியமற்ற மற்றும் ஆடம்பரமான பொருட்களின் இறக்குமதிகள் மீது தற்காலிக கட்டுப்பாட்டினை விதிக்க வேண்டியிருந்தது.

இருப்பினும், மேற்படி அத்தகைய கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பொருட்கள், பயணியுடன் வரும் பொருட்களாகவும், சரக்கு அனுப்புனர்/ சேவை வழங்குநர் ஊடாக அனுப்பி வைக்கப்படுகின்ற பொதிகளாகவும் (பயணியுடன் வராத பொதிகள்) மற்றும் அன்பளிப்புப் பொருட்களாகவும் (விமானம் மற்றும் கப்பல் மார்க்கச் சரக்குகள் அத்துடன் அஞ்சல் மற்றும் கூரியர் சேவைகள்) இறக்குமதி செய்யும் நடவடிக்கையானது அதிகரித்துள்ளதை இலங்கைச் சுங்கம் அவதானித்துள்ளது. மேலும், சில பயணிகள் சுங்கக் கட்டளைச் சட்டம் அத்துடன் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டம் ஆகியவற்றின் கீழான ஒழுங்கு விதிகளை மீறும் வகையில், மேற்படி பொருட்களை வர்த்தக எண்ணிக்கையுடைய அளவுகளில் இறக்குமதி செய்வதையும் இலங்கைச் சுங்கம் அவதானித்துள்ளது.

எனவே, மேற்படி கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பொருட்களை அல்லது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட பொருட்களை அல்லது வர்த்தக நோக்க எண்ணிக்கையுடைய அளவுகளிலான பொருட்களை பயணியுடன் வரும் பொருட்களாக, சரக்கு அனுப்புனர்கள்/ சேவை வழங்குநர்கள் ஊடாக அனுப்பி வைக்கப்படும் பொருட்களாக (பயணியுடன் வராத பொருட்கள்), அன்பளிப்புப் பொருட்களாக (விமான மற்றும் கப்பல் மார்க்க சரக்கு அத்துடன் அஞ்சல் மற்றும் கூரியர் சேவைகள்) நாட்டிற்குள் கொண்டு வருவதிலிருந்து உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தவிர்ந்திருக்குமாறு இலங்கைச் சுங்கமானது அனைவரையும் வேண்டுகின்றது.

இவ் ஒழுங்கு விதிகளை பின்பற்றாதவிடத்து, சுங்கக் கட்டளைச் சட்டம் மற்றும் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டம் ஆகியவற்றின் பிரகாரம், அக்குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

**சுங்கப் பணிப்பாளர் நாயகம்**
**இலங்கைச் சுங்கம்**
**"சுங்க இல்லம்"**
**இல. 40, பிரதான வீதி,**
**கொழும்பு-11.**
2022.08.16

# கேள்வி கோரல் அறிவித்தல்

## பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி

### அபாயகரமான மற்றும் பலகை மரங்களை வெட்டி அகற்றிக்கொள்வதற்கான கேள்வி கோரல்.

**கேள்வி இலக்கம்: EPL/PL/TB/T-06/2022 - Timber**

எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் நிருவாகத்திலுள்ள பின்வரும் பெருந்தோட்டங்களின் மரங்களை வெட்டி அகற்றிக் கொள்வதற்காக முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| பெருந் தோட்டம் | மரங்களின் வகை | மரங்களின் எண்ணிக்கை | ஏனைய விடயங்கள் | லொட் இலக்கம் | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|---|---|
| ரத்வத்த | மஹோகனி | 20 | வன முகாமைத்துவ திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 01 | 50,000.00 |
| ரத்வத்த | மஹோகனி | 20 | வன முகாமைத்துவ திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 02 | 100,000.00 |
| ரத்வத்த | யூகலிப்டஸ் | 07 | வன முகாமைத்துவ திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 03 | 50,000.00 |
| ரத்வத்த | மஹோகனி | 27 | வன முகாமைத்துவ திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 04 | 50,000.00 |
| எல்கடுவ | அல்பீசியா | 15 | வன முகாமைத்துவ திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 05 | 100,000.00 |
| எல்கடுவ | அல்பீசியா | 12 | வன முகாமைத்துவ திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 06 | 50,000.00 |
| எல்கடுவ | யூகலிப்டஸ் | 15 | வன முகாமைத்துவ திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 07 | 100,000.00 |
| நாலந்த | மாற | 01 | மின்சாரத்தை அனுப்பும் வழிக்கு இடையூறாக உள்ள மரங்கள் | 08 | 1,000.00 |

2022.08.19 முதல் 2022.09.01 அன்று பி.ப. 12.30 வரை உரித்தான பெருந்தோட்ட அலுவலகங்களின் அல்லது இலக்கம் 320, ஜனவத்து பியஸ' டீ.பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு-10 இலுள்ள எல்கடுவ பெருந்தோட்டக்கம்பனியின் உப அலுவலகத்தில் மற்றும் 2022.08.19 முதல் 2022.09.02 அன்று பி.ப. 12.30 வரை ரத்வத்த உக்குவெலயிலுள்ள எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் பிரதான அலுவலகத்தில் ரூபா 2000/- இற்கான மீளளிக்கப்படாத தொகையைச் செலுத்தி இதற்கான, நிபந்தனைகளுடன் கூடிய கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

உரியவாறு பூரணப்படுத்தப்பட்டு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 2022.09.02 அன்று பி.ப. 1.00 வரை எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின், ரத்வத்த, உக்குவெலயிலமைந்துள்ள பிரதான அலுவலகத்தில் பெறுகைக் குழுவின் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், கேள்விதாரர்களின் முன்னிலையில் 2022.09.02 அன்று பி.ப. 1.00 இற்கு அவை திறக்கப்படும். பெறுகைக்குழுவின் தலைவரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

❖ திருப்தியளிக்காத ஆகக்கூடிய விலைமனுக்கள் தொடர்பாக, முன்வரும் அனைத்துக் கேள்விதாரர்களுடனும் உரையாடலை மேற்கொள்ளும் உரிமை தலைவருக்கு உண்டு.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி,**
**பிரதான அலுவலகம்**
**ரத்வத்த - உக்குவெல**

**தொ.பே. இலக்கம்**
**066-2242522 - பிரதான அலுலகம்**
**066-3133355 - எல்கடுவ பெருந்தோட்டம்**
**066-3682734 - ரத்வத்த பெருந்தோட்டம்**
**066-3682755 - நாலந்த பெருந்தோட்டம்**

# கொழும்பு மாநகர சபை

## கேள்வி/விலைமனுவுக்கான அழைப்பு

கீழ்க்காணும் சேவைகள்/பொருட்களை வழங்குவதற்காக தகைமையும் தகுதியுமுள்ள கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகளை கொழும்பு மாநகர சபையின் ஆணையாளர் அழைக்கின்றார்.

| தொடர் இல. | கேள்வி இல. | விபரம் | கேள்விதாரர்கள்/ விலைமனு தாரர்களின் தகைமை | மீளளிக்கப் படாத கேள்வி/ விலைமனு ஆவணக் கட்டணம் | விலை மனு பிணையின் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 1 | CPD21/1400/2022 | ஊழியர் போக்குவரத்துக்கான பஸ்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி | இந்தவகையான வழங்கல்கள்/ சேவைகளில் வியாபாரப் பதிவுகளுடன் அனுபவமுள்ள வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்கள் | ரூபா 5,600.00 | ரூபா 50,000.00 இற்கான நிபந்தனையற்ற உத்தரவாதம் |
| 2 | CPD17/1635/2022 | அடையாளம் காணப்படாத வறிய நபர்களின் சடலங்கள் மற்றும் பொரளை பொலிஸ் பிரேத அறையில் சட்ட மருத்துவ அதிகாரியினால் வழங்கப்படும் கட்டளையின் பிரகாரம் உரிமையாளர்கள் முன்வராத சடலங்களை பொரளை மயானத்தில் அடக்கம் செய்தல் | | ரூபா 2,240.00 | ரூபா 200,000.00 இற்கான நிபந்தனையற்ற உத்தரவாதம் |

கேள்வி ஆவணம் (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி) ஆகியவற்றை இரு முறைமைகளினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

**முறைமை-01 – கொழும்பு மாநகர சபையின் www.colombo.mc.gov.lk என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்தல்.**

I. மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்வி/ விலைமனுக்கோரல் கட்டணத்தை பின்வரும் முறைமைகளில் செலுத்தலாம்.

அ) 167-1-001-6-3169425 என்ற கணக்கு இலக்கத்தை கொண்டுள்ள நகர மண்டப கிளைக்கு வரவு வைக்குமாறு எந்த மக்கள் வங்கி கிளையிலிருந்தும் அனுப்புதல்.

ஆ) வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பின்வரும் கொழும்பு நகர எல்லைக்குலுள்ள மாநகர இடப்பரப்புக்களிலுள்ள பணக்கொடுப்பனவு கருமபீடங்கள்.

***வட்டார அலுவலகம் 4***
***இல. 147, ஹைலெவல் வீதி***
***கிருளப்பன, கொழும்பு-06.***

***வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு***
***மாளிகாகந்த***
***கொழும்பு-10.***

II. மூலப்பிரதி பற்றுச்சீட்டு/ வரவுத் துண்டு ஆகியவற்றை கேள்வி/ விலைமனுக்கோரல் ஆவணத்துடன் இணைப்பது கட்டாயமானதாகும்.

**முறைமை 02 – நகர மண்டப இடப்பரப்பிலிருந்து சேகரித்தல்.**

அ. 2022.09.07ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் நகர மண்டப இடப்பரப்பிலுள்ள சிறாப்பர்களின் கருமபீடங்களில் ஒவ்வொரு கேள்விக்கும்/விலைமனுக்கோரலுக்கும் கேள்வி அறிவித்தலில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை செலுத்திய பின்னர் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர மத்திய பெறுகைத் திணைக்கள அலுவலகத்திலிருந்து கேள்வி/ விலைமனுக் கோரல் ஆவணத்தை பெற்றுக்கொள்ளலாம்.

ஆ. கேள்வி/ விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2022.09.07ஆம் திகதியன்று பி.ப. 3.00 மணிக்குப் பின்னர் இணையதளத்தில் காட்சிப்படுத்தப்பட மாட்டாது/ வழங்கப்பட மாட்டாது.

இ. கேள்விகளை/விலைமனுப்பிணை ஆகியவற்றை மூடும் திகதியிலிருந்து 150 நாட்களுக்கு நிபந்தனையற்ற உடனடியாக பெறக்கூடிய விலைமனு உத்தரவாதம்/விலைமனுப்பிணையானது செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைமனு உத்தரவாதம்/விலைமனுப்பிணை ஆகியன 2023.02.04ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைமனுவானது 2023.01.04ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

ஈ. கேள்வி/விலைமனுக்கோரல் ஆவணம் ஆகியன மூலப்பிரதியானது உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு நகல்பிரதியுடன் 2022.09.08 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு-07, மாநகர மண்டபம், மாநகர சபை செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

உ. கேள்வி/ விலைமனுவானது 2022.09.08 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு மூடப்படுவதுடன் மூடும் நேரத்திற்குப் பின்னர் பெறப்படும் கேள்விகள்/விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விகள்/விலைமனுக்கள் அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறையாக பிரகடனப்படுத்தப்படின், கேள்விகள்/ விலைமனுக்கள் அடுத்த வேலை நாளன்று மு.ப. 10 மணிக்கு திறக்கப்படும். கேள்விதாரர்/ விலைமனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் திறத்தலின் போது சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். 0112 686389, 0112 686369, 0112 662329 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பிரதம கணக்காளர் (பெறுகை) இடமிருந்து தெளிவுறுத்தல்களை பெற்றுக் கொள்ளலாம்.

ஊ. கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்களின் கேள்விகள்/ விலைமனுக்கள் ரூபா 5.0 மில்லியனுக்கு மேற்படி 1987ஆம் ஆண்டின் பொது ஒப்பந்த சட்டம் 03இன் பிரகாரம் பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவு செய்தபின் PCA/(3)2 சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜெ.எம். பத்ராணி ஜெயவர்தன,**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை.**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

**பலாங்கொடை பிரதேச செயலகத்திற்குற்பட்ட கள்ளுத் தவறணை ஏல விற்பனை – 2023**

மேற்கூறப்பட்ட கள்ளுத் தவறணையின் ஏல விற்பனை 2022.09.08 திகதி மு.ப. 10.30க்கு பலாங்கொடை பிரதேச செயலாளர் காரியாலயத்தில் விலைமனுக் கோரல் மூலம் நடைபெறும் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

02. மேலதிக விபரங்களுக்கு 2022 ஜுலை மாதம் 29ஆம் திகதியின் 1303 இலக்கத்தையுடைய இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையைப் பார்க்கவும்.

**எச்.எம்.எச். பண்டார,**
**பிரதேச செயலாளர்**
**பலாங்கொடை.**

2022 ஆகஸ்ட் மாதம் 10ஆம் திகதி
**பிரதேச செயலகத்தில்**

# அறிவித்தல்

2023ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்ட அறிக்கையில் உட்படுத்துவதற்காக கலவான பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை 2022.08.31ம் திகதிக்கு முன் கலவான பிரதேச சபைக்கு வழங்குமாறு தயவுடன் அறிவிக்கிறேன்.

**கே.வீ.எஸ். சாமிந்த இந்ரபிரிய**
**தலைவர்,**
**கலவான பிரதேச சபை**
**கலவான.**




CSIAP THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

### கமத்தொழில் அமைச்சு

## தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

## காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)

**செயற்றிட்ட இல.: P163742**

